உள்ளே...

1. மௌனம் கலைந்த தேவதை! 5
2. மழை தருமோ என் மேகம்...! 113

# மௌனம் கலைந்த தேவதை!



## 1

அந்த அதிகாலை வேளையில், மலர்கள் மௌன மொழியில் சூரியனுக்கு வரவேற்புக் கவிதை வாசித்துக் கொண்டிருக்க, மேகங்கள் பனிப் போர்வை கொண்டு மலையை மூடி இருந்தன. காற்றில் இனிதாய் கலந்திருந்த யூகலிப்டஸ் இலைகளின் மணம், நாசிக்கு இதமாக இருந்தது.

மூங்கில் இலைக்குள் உறங்கி இருந்த பனித்துளிகள், மெல்ல விழிக்க ஆரம்பித்திருந்தன. சைப்ரஸ் மரங்களின் அணிவகுப்புடன், அழகின் மொத்த உருவமாய் மலைமகள்! தங்களுடைய குவார்ட்டர்ஸின் முன் நின்று, பூமியை வியப்புடன் தரிசிக்க வந்த வானவில்லைப் போல் எல்லா வற்றையும் ரசித்துக் கொண்டு இருந்த சம்யுக்தாவிற்கு, மனம் லேசாகி இருந்தது.

அவள் மலைப்பிரதேசத்துக்கு வருவது, இதுவே முதல் முறை! எங்கு திரும்பினாலும் தெரிந்த பசுமையான அழகு,

அவள் மனதைப் பரவசப்படுத்துவதாய், சில்லென்ற மென்பனிக்காற்று, இதயத்தை வருடிச் சென்றது.

சம்யுக்தாவிற்கு தன்னுடைய அண்ணன் சேரன், எவ்வளவு அழகான ஊரிலிருக்கிறான் என்ற வியப்பு மேலிட்டது. சேரன் இங்கு வந்து ஆறு மாதங்கள் தான் ஆகிறது. சிறு வயதிலிருந்தே இருவரும் வளர்ந்தது, படித்ததெல்லாம் கும்பகோணத்தில் தான்.

காவிரி ஆற்றின் சலசலப்புடன், திரும்பிய பக்கமெல்லாம் தெரியும் தேவகோபுர தரிசனத்துடன், நட்புடன் கை கோர்த்த நண்பர்கள், உறவினர்களுடன் சிறு வயதில் வாழ்க்கையில் நிறைந்திருந்த இதமான இனிமை, மறக்க முடியாததாய் இருந்தது.

இரண்டு வருடங்களாய் அம்மாவுடைய இறப்புக்குப் பிறகு அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் சொந்தமெனத் தனித்து விடப்பட்டு, பாசமாய் இணைந்திருந்தனர்.

கும்பகோணத்தில் இருந்தபோது, இருவரும் அவசரமாக எழுந்து சமைத்து எடுத்துக் கொண்டு அவன் வேலைக்கும், அவள் கல்லூரிக்கும் சென்று விடுவார்கள். ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு நண்பனின் மூலமாக சேரனுக்கு இந்த வால்பாறையில் எஸ்டேட் மேனேஜராக வேலை கிடைத்து அவன் மட்டும் இங்கு வந்திருந்தான்.

அங்கு வீட்டை வாடகைக்கு விட்ட பிறகு, ஆறு மாதங்களாக சம்யுக்தா அவர்களுடைய அத்தை வீட்டில் தங்கி, படிப்பை முடித்துவிட்டு, நேற்றிரவு தான் இங்கு வால்பாறைக்கு வந்திருந்தாள். புது இடமாக இருந்ததால், விடிகாலையிலேயே விழிப்பு வந்து விட்டது.



சேரனின் உறக்கத்தை கலைக்க மனமின்றி எழுந்து வந்து இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தவளை, பின்புறமிருந்து வந்த சேரனின் குரல் உசுப்பியது.

''சுமி! ஏம்மா அதுக்குள்ளே எழுந்திரிச்சிட்டே? ரொம்ப குளிருமே? இந்த ஊர் உனக்குப் பிடிச்சிருக்கா?'' என்று கேட்டபடி வந்தான் சேரன். சம்யுக்தாவை செல்லமாக 'சுமி' என்று தான் அவனும், அம்மாவும் கூப்பிடுவார்கள்.

உற்சாகத்துடன் திரும்பிய சுமி, ''என்னண்ணா... சாதாரணமா கேட்டுட்டீங்க. எவ்வளவு அழகான ஊர் இது? எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு'' என்றாள் அழகாய் முறுவலித்தபடி.

''இனிமே நீயும் இங்கே தானே இருக்கப் போறே. பாரு. மழைக்காலம் தான் கஷ்டமா இருக்கும். உள்ளே வா சுமி. காபி ரெடி'' வீட்டிற்குள் வந்தபோது காபி மேக்கரில் இருந்து வந்த இனிய மணம் நாசியை நிறைத்தது.

காபியைப் பருகிக் கொண்டே, ''நீங்க எங்கண்ணா சாப்பிடுவீங்க. வீட்டிலேயே சமைக்க ஆரம்பிச்சிட்டீங்களா? இல்லை... பழைய மாதிரியே மெஸ்தானா?'' என்றாள் சுமி.

''இங்கே காலையில சமைச்சி எடுத்துட்டுப் போனா, ஆறிப் போயிடும் சுமி. மத்தியானம் மெஸ்ஸில இருந்து சாப்பாடு நேரா ஆபீசுக்கே வந்துடும். நீ வந்துட்டே இல்லை. இனிமே நாம ரெண்டு பேருமா சமைச்சி ஹாட் கேசில எடுத்துட்டுப் போவோம். ஆன கொஞ்ச நாள் போகட்டும். இப்ப உனக்கும் சேர்த்து மெஸ்ஸிலயே சொல்லி இருக்கேன்'' என்றபடி அவளுடைய தலையை செல்லமாகக் கலைத்து விட்டான்.

அவர்களுடைய பொருட்கள் எல்லாம், அவனுடனேயே இங்கு எடுத்து வரப்பட்டிருந்தாலும், பயன்படுத்தப்படா மலே இருந்தது. அவளையே சிறிது நேரம் யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்த சேரன், ''சுமி, நீ நல்ல மூட்லே இருக்கியாடா, உன்கிட்ட முக்கியமான ஒரு விஷயம் பேசணுமே'' என்றான் மெதுவாக.

சுமி அவனிடம் திரும்பி, ''என்ன விஷயம் சொல்லுங்க. நான் இப்ப ரொம்ப குஷியா இருக்கேண்ணா'' என்றாள் இதழ்களில் கசிந்த புன்னகையுடன். ஆனால் அவன் கூறிய விஷயத்தைக் கேட்டபோது அவள் செவிகள் நம்ப மறுத்தன.

சேரன் ஒரு பெண்ணை விரும்புகிறானாம். அதுவும் தன்னுடைய சின்ன முதலாளியின் பெண்ணையே என்ற போது அவளால் ஒன்றுமே பேச முடியவில்லை. பெண் களிடம் சாதாரணமாக ஏன்... அதிகமாகப் பேசக்கூட கூச்சப்படுபவன். இன்று ஒரு பெண்ணைத் தான் விரும்பு வதாக கூறியது, பெரும் ஆச்சரியத்தை அளிப்பதாய்.

சுமி, வியப்புடன் கலந்த உற்சாகத் தொனியில், ''அண்ணா என்னாலே நம்பவே முடியலை. எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு. உடனே உன் மனசில இடம் புடிச்ச அவங்களைப் பார்த்துப் பேசணும் போல இருக்கு'' என்றாள். அப்போது உள்ளே செல்போன் இனிய குயிலாய் அழைக்க, அவன் ஆர்வத்துடன் செல்வதிலிருந்தே அது யாரென்று சுமிக்குப் புரிந்தது.

ஆனால், பேசி விட்டுத் திரும்பி வந்த சேரனின் முகம் வெளிறிப் போய் கவலையாக இருந்தது. கேள்வியுடன் நோக்கிய அவளிடம், ''காவ்யாதான் பேசினா. எங்க காதல் விஷயம் அவங்க அண்ணன் கௌதமுக்குத் தெரிஞ்சிடுச்சாம்.



அவளைக் கூப்பிட்டு கண்டிச்சிருக்காரு. உடனே வேற மாப்பிள்ளை பார்க்கப் போறதா வேற சொல்றாராம். காவ்யா ரொம்ப அப்செட்டா இருக்கா'' என்றான் மெல்லிய குரலில்.

''ஏண்ணா நீங்க போய் நேராவே அவங்க அப்பாவோட பேச வேண்டியதுதானே? எப்படியும் ஒரு நாள் பேசித்தானே ஆகணும்? நானும் உங்க கூட வரேண்ணா'' என்றபோது, அவள் தலையைப் பாசத்துடன் வருடினான் சேரன்.

அவளிடம் ''இன்னிக்குக் காவ்யா அவ பிரண்ட்ஸோட டூருக்குப் போறா சுமி. அவ வரதுக்கு எப்படியும் பத்து நாளாவது ஆகும். அதுக்குள்ளே இங்கே இந்தப் பிரச்சனை என்னாகுமோன்னு பயப்படறா. நான் தான் தைரியம் சொல்லி இருக்கேன். அவ திரும்பி வந்தவுடன் என்ன செய்யறதுன்னு முடிவெடுக்கலாம். ம்... பார்ப்போம்'' என்றான் ஒரு பெருமூச்சுடன்.

ஆதரவாக அவன் தோளைப் பற்றிய சுமி, ''கவலைப்படா தீங்கண்ணா எந்தப் பிரச்சனையும் வராது. தைரியமா இருங்க. அண்ணியை நிம்மதியா போயிட்டு வரச் சொல் லுங்க. பேரென்ன... காவ்யான்னு தானே சொன்னீங்க. அவங் களும் பேர் மாதிரியா அழகா இருப்பாங்களாண்ணா?'' என்று கேட்டாள்.

சேரன் வெட்கப் புன்னகையுடன் தலையசைத்து விட்டு உள்ளே சென்றான். அவளுக்கு துணையாக ஜோதி என்ற வேலைக்காரப் பெண்ணை இருக்கச் சொல்லிவிட்டு அலுவலகத்திற்குச் சென்ற சேரன், அன்று மாலையில் வெகு நேரமாகியும் வரவில்லை. சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுத்த சுமி அவனுக்காகக் காத்திருந்தபோது, இருட்டிய பிறகும் வராதது அவள் மனதில் பயத்தை விதைத்தது.

வாசலில் அழைப்பு மணி ஒலிக்கவும் சேரனாகத் தான் இருக்கும் என்ற ஆவலுடன் கதவைத் திறந்தால், அங்கு யாரோ ஒருவன் நின்றிருப்பது தெரிந்தது.

யாரென்ற கேள்வியுடன் சுமி அவனை நோக்கியபோது, "நான் ஜோதியோட புருஷன்ம்மா. பேரு மாணிக்கம். நானும் இந்த எஸ்டேட்டில தான் வேலை பாக்கறேன். மேனேஜர் ஐயா, அவசரமா பொள்ளாச்சிக்குப் போறாங்களாம். நாளைக்கு காலையில தான் வருவாங்களாம். நீங்க ஜோதியை துணைக்கு படுக்க வச்சிக்கங்கம்மா. நான் காலையில வரேன்" என்றான்.

அவனுடன் சென்று பேசி அனுப்பி விட்டு ஜோதி வீட்டிற்குள் திரும்பி வந்தபோது, சுமியின் மனதிற்குள் சிந்தனை முடிச்சுகள் விழத் தொடங்கின. அப்படி என்ன முக்கியமான வேலை என்று, உள்ளம் பல வித யோசனைகளில் உழல்வதாய்... சம்யுக்தாவிற்கு நித்திரை மனத்திரையால் தள்ளுபடி செய்யப்பட்டது அன்று.

ஆனால், மறுநாளும் சேரன் வராமல், ஒரு தகவலும் இன்றிப்போகவே, அவள் மனதில் முதன் முதலாக ஒரு பயம் வந்தது. அவர்கள் வீட்டிலிருந்த தொலைபேசியும் ரிப்பேராகி இருந்ததால், ஜோதியின் துணையுடன் வெளியில் சென்று, செல்போனில் சேரனுக்குத் தொடர்பு கொண்டாள் சுமி.

ஆனால், தொடர்பு கிடைக்கவில்லை என்றதும் ஒன்றும் புரியாமல் திரும்பி வந்த போது, மாணிக்கம் அவர்களுக்காகக் காத்திருந்தான். அவனைக் கண்டதும் "ஐயா இன்னும் வரலைங்களா? முதலாளி ஐயா விசாரிச்சிட்டு வரச் சொன்னாங்க" என்றான்.



"இல்லை மாணிக்கம்! செல்லும் கிடைக்கலை... நீங்க என்னை எஸ்டேட் ஆபீசுக்கு அழைச்சிட்டுப் போறீங்களா? நான் உங்க முதலாளி ஐயாவப் பார்த்துப் பேசணும்" என்று கேட்டவளின் குரலில் பயம் வந்திருந்தது.

"சரிம்மா... வாங்க! நீங்க முதல்லே சாப்பிடுங்க. மெஸ்ஸில இருந்து சாப்பாடு வந்திருக்கு. சாப்பிட்டப்புறம், நானே உங்களை அழைச்சிட்டுப் போறேன்" என்றான் அவன்.

சாப்பிட்ட பிறகு, சம்யுக்தா மாணிக்கத்துடன் கிளம்பி ஜோதியை வீட்டைப் பார்த்துக் கொள்ளும்படிக் கூறிவிட்டு, எஸ்டேட் ஆபீசுக்குச் சென்றாள். அங்கு சென்று சேரனின் தங்கை என்றவுடன், மரியாதையுடன் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டாள். சுமியால், அங்கு சேரனுடைய உதவியாளரைத் தான் பார்க்க முடிந்தது.

முதலாளி, வீட்டுக்குச் சென்றிருப்பதாக அந்தக் கண்ணன் என்பவர் கூறியபோது, சுமி அவரிடம், "உங்க முதலாளி இப்ப எங்கே இருப்பாங்க. நான், உடனே அவங்களைப் பாத்து, முக்கியமான ஒரு விஷயமாகப் பேசணும். என்னை அழைச்சிட்டுப் போக முடியுமா?" என்றாள்.

சேரனை நினைத்தால், மனதில் பயம் துளிர் விட்டது. இன்று முடிந்தால் காவ்யாவின் தந்தையுடன் இது பற்றிப் பேசி விட வேண்டும் என்று தோன்ற, திரும்பினால் கண்ணன் யோசனையுடன் அமர்ந்திருந்தார்.

சுமி அவரிடம், "வீடு எங்கே இருக்குன்னு அட்ரஸ் கொடுத்தீங்கன்னா, போதும் நான் விசாரிச்சிட்டுப் போயிடுவேன்" என்றாள். அவரும், "ஒரு நிமிஷம் இருங்கம்மா, நான் சார் கிட்டே கேட்டுட்டுச் சொல்றேன்" என்றபடி உள்ளே சென்றார்.

சிறிது நேரம் கழித்து வெளியே வந்தவர், ''நம்ம ஜீப்பி லேயே போகலாம்மா. சார் இப்ப, கெஸ்ட் ஹவுசில இருக்காங்க. உங்களை உடனே அங்கே அழைச்சிட்டு வரச் சொன்னாங்க... வாங்க!'' என்று கூறிவிட்டுக் கிளம்பினார்.

அவருடன் அந்த மலைப்பாதையில் செல்லும்போது, அந்த அழகு இன்று ஏனோ மனதில் பதிய மறுத்தது. மனம், தன் அண்ணனையும் காவ்யாவையும் பற்றி அவளுடைய தந்தையுடன் என்ன பேசுவது என்று ஒத்திகை பார்த்தது. மனதில் எண்ணங்கள் ஊஞ்சல் கட்டி ஆடி, வார்த்தைச் சரங் களைச் சேர்ப்பதாய்! சேரன் இப்போது எங்கிருக்கிறானோ என்ற பயமும் உள்ளூரப் படர்ந்தது.

இருபுறமும், அடர்ந்த தேயிலைத் தோட்டங்களுக்கு இடையே வெகு நேரம் சென்று, சுற்றிலும் மரங்கள் சூழ்ந்த தோட்டத்தின் நடுவில், அழகாக வெண்மை நிறத்தில் பெரிய தூண்களுடன் கம்பீரமாக நின்ற அந்த பங்களாவின் முன், கார் நின்றது.

சுற்றிலும் மலர்த் தோட்டங்களும், பச்சைப் புல்வெளியும் மனதை நிறைக்க, மெதுவாக ஜீப்பை விட்டு இறங்கினாள் அவள். வீட்டிற்குள் சென்று, ஹாலில் அவளை அமர வைத்து விட்டு, கண்ணன் மட்டும் உள்ளே சென்றார்.

சிறிது நேரத்தில், அவருடன் அங்கு வந்த மனிதனைக் கண்டதும், அவளுடைய விழிகளையே அவளால் நம்ப முடியவில்லை. அவள், முதலாளி என்றதும் காவ்யாவின் தந்தையை, வயது முதிர்ந்த ஒருவரை எதிர்பார்த்துக் காத் திருந்தபோது எதிரில் சேரனை விடக் கொஞ்சமே மூத்த வனாகத் தெரிந்த அவனைக் கண்டவுடன் மனம் விதிர்க்க மெல்ல எழுந்து நின்றாள்.



அவனுடைய கூரிய பார்வை, அவள் இதயத்திற்குள் புகுந்து ஊடுருவது போல் இருந்தது. நல்ல உயரத்தில், சிரிக்கும் விழிகளுடன் தந்தச் சிற்பமாய், அழகிய முகத்தில் சிறு பயத்துடன், கிருஷ்ணா புரத்துச் சிற்பம் போல் நின் றிருந்த அவளை, அவன் பார்வை வேகமாய் அளவிட்டது.

சுமியை இருங்கிய கண்களுடன் நோக்கியவன். ''நீதான் சேரனோட சிஸ்டரா? நீ வரப்போறதா, சேரன் சொல் லிட்டிருந்தார்'' என்றபடி திரும்பி, ''கண்ணன்! நீங்க கிளம் புங்க. நானே இவங்களை வீட்டில விட்டுடறேன்'' என்று, கண் அசைவில் அவரைத் திருப்பி அனுப்பி வைத்தான்.

தர்ம சங்கடத்துடன் நின்றிருந்தவளிடம், ''உக்காரு!'' என்று சைகை காட்டிவிட்டு ஜன்னலருகே சென்று நின்றவன், திடீரென்று திரும்பியபோது அவன் முகம் இறுகி இருந்தது. ''என் தங்கை காவ்யாவைப் பற்றி, சேரன் உன்கிட்டே ஏதாவது சொன்னாரா?'' அவன் குரலில், அவள் உள்ளம் சில்லிட்டது.

''ம்... சொன்னார்! நேத்துதான் எனக்குத் தெரியும். நானும் அதப்பத்தி பெரியவங்ககிட்டப் பேசலாம்னு தான், இங்கே வந்தேன். நீங்க...?'' அவள் குரலில் சிறிது நடுக்கம் இழை யோடுவதாய்!

''நான் காவ்யாவோட பெரிய அண்ணன் கௌதம்! சேரனோட பாஸ்! நீ ஏதோ பேசணும்னு சொன்னியே... அதை எங்கிட்டயே பேசலாம்'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்!

சுமி தயக்கத்துடன், ''சார்! எங்க அண்ணா ரொம்ப நல்லவர். நாங்க உங்க தங்கையை அன்பா பார்த்துப்போம். அவங்க ரெண்டு பேரும் மனசார விரும்பறாங்க. உங்க குடும்பத்துல எல்லாருமே ரொம்ப நல்லவங்கன்னு அண்ணா சொல்லி இருக்காங்க. நீங்க தான் உங்க வீட்டுப் பெரிய வங்ககிட்டப் பேசி அவங்களை சேத்து வைக்கணும்'' என்றாள்.

கண்களில் கோபத்துடன் திரும்பிய கௌதம், ஒரு ஏளனமான வன்மச் சிரிப்புடன், "அவர் உயிரோட இருந்தாத்தானே, சேத்து வக்கிறதுக்கு என்றபோது, தன் உயிரையே யாரோ உருவியது போல், பதறி எழுந்தாள் சுமி.

மிரட்சியுடன் நிமிர்ந்து, "என்ன சொன்னீங்க?" என்றபோது, அவள் குரல் அவளுக்கே சரியாகக் கேட்கவில்லை. புருவங்கள் நெரிய அவளையே வெறித்தவன். "ம்... அதான் உன் அருமை அண்ணன், என் தங்கையை எங்கேயோ இழுத்துட்டு ஓடிப் போயிட்டாருன்னு சொல்றேன். அவங்களைப் பார்த்த உடனே, என் தம்பி இங்க தூக்கிட்டு வந்திடுவான்னு சொல்றேன்... புரியுதா?" என்று உறுமினான்.

சுமியின் உலகம், ஒரு கணம் இருண்டு போனது.



## 2

மனதில் கலக்கம் விரவிப் பரவ, ஒன்றும் புரியாமல் பயத்துடன் அவனைப் பார்த்தவள், "எங்க அண்ணா, அப்படி எல்லாம் செஞ்சிருக்க மாட்டாரு. எப்பவுமே, பெரியவங்களோட சம்மதம் இல்லாம, எதுவுமே செய்யக் கூடாதுன்னு நினைக்கறவரு, அதுவும் கல்யாண விஷயத்துல நிச்சயமா அது மாதிரி எல்லாம் செய்ய மாட்டாரு. அவர் ரொம்ப நல்லவர்!" என்றாள் மெல்லிய குரலில்.

"அப்படியா? ஆனா நான் நல்லவன் இல்லை! எங்கே அடிச்சா, அந்த இடத்துல வலிக்கும்னு எனக்குத் தெரியும். இல்லைன்னா, இந்தக் காலத்துல வெற்றிகரமாகத் தொழில்



நடத்த முடியுமா? உங்க அண்ணன் என்ன செஞ்சாரோ, அதையே நானும் இப்ப அவருக்கு செய்யப் போறேன். திருப்பி அடிச்சாதானே வலின்னா என்னங்கறது தெரியும். இன்னொருத்தனோட தங்கச்சின்னா, அப்படித்தான் ஜாலியா இழுத்துட்டுப் போகத்தோணும். அதே, தன்னோட தங்கைக்குன்னா நிச்சயமா வலிக்கும் இல்லே...?" என்றான் குத்தலாக.

உதடுகள் உலர்ந்து துடிக்க, தன் சக்தியெல்லாம் தன்னை விட்டு நீங்கிச் சென்றது போல் உடனே தொய்ந்தாள் சுமி.

இவன் என்ன சொல்கிறான் என்ற பயத்துடன், "எனக்கு நீங்கள் என்ன சொல்ல வர்றீங்கன்னே புரியலை. நான் அண்ணனுக்காக சமாதானமாய் பேசிட்டுப் போகலாம்னு தான் இங்கே வந்தேன். ஆனா, வந்திருக்கவே கூடாதுன்னு இப்ப புரியுது. நான் கிளம்பறேன்" என்றபடி எழுந்தவனின் முகம், வெளிறிப் போயிருந்தது.

"ஏய்... உனக்கு நான் என்ன சொல்றேன்னே புரியலையா? இல்லை புரியாத மாதிரி நடிக்கறியா? சிம்பிளா சொல்லனுமின்னா, உன் அண்ணன் செஞ்ச காரியத்துக்கு, நீ தான் பலியாகப் போறே. எப்படி உன் அண்ணன், எங்க காவ்யாவை அழைச்சிட்டுப் போனாரோ, அதே மாதிரி நீயும் அதுக்கு பதிலா என் கூட இருந்து, வட்டி செலுத்தப் போறே!" என்றபோது, சுமிக்கு உலகமே சுற்றுவது போல் இருந்தது.

உடனே, மனதில் பய விதை விழுந்து, முதல் துளிர் விட்டது. பதைப்புடன் நிமிர்ந்து "ப்ளீஸ்.. நான் சொல்றது நிஜம்! எங்க அண்ணா...!" இடைமறித்து நிறுத்தியது, அவனுடைய கோபம் நிறைந்த குரல்.

''போதும் உன் அண்ணனோட புராணம் எல்லாம்! நான் என் முடிவை சொல்லிட்டேன். என் தங்கையை, அவன் என்கிட்ட ஒப்படைக்கிற வரைக்கும், நானும் அவன் தங்கையை விடமாட்டேன்!'' என்று முடித்தான்.

'அண்ணன் எங்கே போனார்? ஆனால் நிச்சயமாக இப்படி ஒரு காரியத்தை அவர் செஞ்சிருக்க மாட்டார். சுமியின் தலைக்குள் ஆயிரம் எண்ணங்கள்! அவசரப்பட்டு அண்ணனைப் பற்றிப் பேசத் தான் இங்கு வந்தது, தன்னையே பலி வாங்கி விடும் போலிருக்கிறதே என்ற எண்ணமே, அவளை நொறுங்கச் செய்வதாய்! பலமிழந்து, அப்படியே சோபாவில் சரிந்து அமர்ந்தாள் சுமி.

அவளையே கவனித்துக் கொண்டிருந்த கௌதமின் முகம் ஒரு நொடி இளகி பின் எஃகின் இரும்புத் தன்மைக்கு மாறியது. சோர்ந்து அமர்ந்திருந்த அவளைப் பார்க்க விரும்பாதவன் போல், ஜன்னலருகே சென்று நின்று, தன் பார்வையை வெளியே பதித்தான் அவன்.

சுமிக்கு தன்னை நிலைப்படுத்திக் கொள்ள சிறிது அவகாசம் தேவையாய்! பிறகு மெதுவாக நிமிர்ந்து நோக்கியபோது, பனிப்பாறையாய் இறுகியபடி, அவன் நின்ற தோரணையிலேயே, மனதில் சொல்ல முடியாத கலக்கம் வந்தது. கடவுளே! ஏன் என்னை இப்படிக் காயப் படுத்துகிறாய் என்று மனம் துடித்தது.

மெதுவாக அவனிடம், ''உங்க தங்கையும் விரும்பித் தானே போய் இருப்பாங்க?'' என்று முடிக்கும் முன்பே, வேகமாகத் திரும்பிய அவன் முகம் கோபத்தில் துடிக்க, வார்த்தைகள் சீறிக் கொண்டு வந்தன.



''ஏய்.. அவளுக்கு என்ன வயசு தெரியுமா உனக்கு? பத்தொம்போதுதான். படிச்சிட்டு இருக்கா! அவளுக்கு என்ன தெரியுமின்னு இவன் அழைச்சிட்டுப் போயிருக்கான். எல்லாம் பணம் செய்யற வேலை. இழுத்துட்டு ஓடிப் போய்க் கல்யாணம் பண்ணிக்கிட்டு, சொத்துலப் பாதியக் கறந்திட லாமே... சே! என்ன கேவலமான புத்தி'' என்றான் குரலில் பொருமலுடன்.

உடனே அவள் கோபமாக எழுந்து, ''என் அண்ணன் ஒரு பெண்ணை அப்படி அழைச்சிட்டுப் போயிருந்தா, உண்மைக் காதல் தான் அதுக்குக் காரணமா இருக்கும். பணமா இருக்க முடியாது!'' என்றாள் ஆத்திரமாக.

பேசும்போது அவள் முகத்தையே ஆராய்ந்தவன், அதில் தெரிந்த நம்பிக்கையைக் கண்டு, ''பெரிய காதல் சே! அம்மா, அப்பா, அண்ணன் எல்லாரையும் மறக்க வைக்கிற காதல்!'' என்று கூறிக்கொண்டே பக்கத்திலிருந்த மேஜையின் மேல் ஓங்கிக் குத்த, அங்கிருந்த பூ ஜாடி ஒன்று உருண்டு கீழே விழுந்தது.

மனதில் பயக் குமிழ்கள் மெல்ல உற்பத்தியாகி, சுமியை மிகவும் பலவீனப்படுத்தினாலும் நிமிர்ந்து, ''நீங்க என்ன சொன்னாலும் நான் ஒத்துக்க மாட்டேன்'' என்றாள் மெதுவாக.

கண்கள் கூர்மையுடன் இடுங்க, ''எதுக்கு ஒத்துக்க மாட்டே...? என்னோட இருக்கறதுக்கா. ம்...?'' என்று அவன் ஏளனமாகக் கேட்டதும் பரிதவித்துப் போனாள் சுமி. கண்ணோரம் கரித்துக் கொண்டு அழுகை வந்தது. அழுகை, மனிதனை பலவீனப்படுத்தும் பலமான ஆயுதம் என்று கூறுபவளுக்கு இன்று தானே அந்த நிலைக்குத் தள்ளப் பட்டது உணர்ந்து, நெஞ்சில் பாரமாகி வலித்தது.

அவளுடைய முகத்தையே இமைக்காமல் கவனித்துக் கொண்டிருந்த அவன் முகமும், தீவிரமான யோசனையில் இருந்தது. ''நீங்க சும்மா என்னை பயமுறுத்தறதுக்காகச் சொல்றீங்க... நீங்க சொன்னதெல்லாம் பொய்தானே?'' பயந்த குழந்தை போல் அவள் கேட்டபோது அவன் முகம் ஏனோ மாறியது.

ஒரு பெருமூச்சுடன் அவளெதிரே இருந்த சோபாவில் அமர்ந்தவன், ''உன்கிட்டே எல்லாமே சொன்னாதான் புரியும். இந்த விஷயம், எங்க வீட்டில இதுவரைக்கும் யாருக்கும் தெரியாது. எனக்கும் என் தம்பி ரவிக்கும் மட்டும் தான் தெரியும். போன வாரம் இந்த விஷயம் தெரிஞ்சி, நான் காவ்யாவைக் கூப்பிட்டுக் கண்டிச்சேன். அவளும் உன் அண்ணனை மறந்திடறேன்னு சொன்னா. இப்பவும் காவ்யா தன் ப்ரண்ட்ஸோட டூருக்குப் போயிருக்கறதா தான் எல்லாரும் நினைச்சிட்டு இருக்காங்க. வீட்டில் அப்படிச் சொல்லிட்டு, சேரனோடப் போறதா, தன் ரூமிலே ஒரு லெட்டர் எழுதி வச்சிட்டுப் போய் இருக்கா'' என்று கூறி நிறுத்தியவன் அவள் முகத்தையே ஒரு கணம் ஆராய்வது போல் நோக்கி விட்டுத் தொடர்ந்தான்.

''ரவிதான் அந்த லெட்டரை என்கிட்ட கொண்டு வந்து காட்டினான். உடனே அவளோட ஃப்ரண்ட்கிட்டே கேட்டப்ப, காவ்யா ஊருக்கு வரலைன்னு சொல்லிட்டதாகவும், அவங்க மட்டும் தான் போறதாவும் அந்தப் பொண்ணு சொன்னா. இன்னும் கொஞ்ச நேரத்துல அவங்க கிளம்பிடுவாங்க அப்படின்னு தெரிஞ்சப்ப, எங்களுக்கு எப்படி இருந்திருக்கும்? இங்கே ஆபீசிலேயும் வீட்டிலயும் சேரனைக் காணோம். ஒரு தகவலும் இல்லை. என்னன்னு நினைக்கச் சொல்றே? உன் அண்ணன் ரொம்ப நல்லவன்.



அப்படின்னா?'' அவனுடைய குரல், ரௌத்ரமாய் காதோரம் ரீங்காரமிட்டது.

ஆனால், சுமியின் மனம் இப்போதும் சேரன் நிச்சயமாக அப்படிச் செய்திருக்க மாட்டான் என்று நம்பியது.

கை சொடுக்கி அவளை இந்த உலகத்துக்கு அழைத்தவன், ''நாங்க என்ன செய்யறதுன்னு புரியாம தவிச்சிட்டு இருந்தப்போ, நீயா வந்து என் வலையில விழுந்தே.. இனிமே காவ்யா வர வரைக்கும் இந்த வீட்டில் தான் நீ இருக்கணும். இந்த சிறை வாசம் உனக்குத் தான்னாலும், உன் அண்ணனுக்கு நான் கொடுக்கற தண்டனையும் இதுதான்! காவ்யா, எந்த சேதமும் இல்லாம ஒரு வாரத்துக்குள்ளே இங்க வரணும்.

''அப்படி வரலைன்னா, நான் எப்படி மாறுவேன்னு சொல்ல முடியாது. அப்புறம் சேதமெல்லாம் உனக்குத் தான். ரவி அவங்களைத் தேடப் போயிருக்கான். இதிலே காதல் ஜோடிங்க ரெண்டும் செல்லை ஆப் பண்ணி வச்சிருக்காங்க. உன் அண்ணனும், ரவியும் சென்னைக்கு ஒரு வேலை விஷயமா போயிருக்கறதா, நான் அப்பாகிட்ட சொல்லி இருக்கேன். இந்த எஸ்டேட் பங்களாவுக்கு யாரும் வர மாட்டாங்க. நீ தப்பிக்கணும்னு நினைச்சா வாசல்லே வாட்ச்மேன்... என்னோட வேட்டை நாய்ங்க ரெண்டு, ரோவரும், டைகரும், இங்க இருக்கறதை நினைப்புல வச்சிக்க. அதையும் மீறிப் போனா, இது தேயிலைக் காடு, நீ டவுனுக்குப் போகணும்னா ஏழு கிலோ மீட்டர் போகணும்'' என்று முடித்தான் கௌதம்.

பிறகு தோள்களைக் குலுக்கிக் கொண்டு எழுந்தவன், ''நான் போய் ரோவரையும், டைகரையும் அவிழ்த்து

விட்டுட்டு வரேன். அது உன்னோட ரூம்! உன் திங்ஸ் எல்லாம் ராத்திரி வந்துடும்!'' என்று கூறிவிட்டு வெளியே சென்றான். மெதுவாக எழுந்து அந்த அறைக்குள் சென்றபோது, ஒரே நாளில் வாழ்க்கையே ஆட்டம் கண்டு விட்டது போல் இருந்தது சுமிக்கு!

யோசனையுடன் கட்டிலில் அமர்ந்தபோது, மனம் பெரும் ஆயாசமாய்! தலை வலிப்பது போல விண்ணென்று தெறித்தது. தலையைப் பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்த போது, அறை வாசலில் ஏதோ சப்தம் கேட்டு நிமிர்ந்தால், கைகளைக் கட்டிக் கொண்டு அறைக் கதவில் சாய்ந்தபடி அலட்சியமாய் நின்றிருந்தான் கௌதம்.

''என்ன.. எப்படித் தப்பிச்சிப் போகலாம்னு ஆராய்ஞ்சு முடிச்சு, ஏதாவது யோசனை வந்துதா? பாவம் நீ... டைகருக்கும் ரோவருக்கும் தான் கொண்டாட்டம். அதுங்க ரெண்டும் வேட்டை நாய்ங்க'' என்று கேலியாக அவன் நிறுத்திய போது, அவள் மனதினுள், 'உங்களுக்கு, அதுங்க ரெண்டும் எவ்வளவோ தேவலாம்' என்று தோன்றியது.

உடனே அவனுடைய குரல், ''ஐயோ பாவம்! அதுங் களோட என்னை ஒப்பிடாதே. அதெல்லாம் என் கட்டுப்பாட் டுக்குள்ளே வளர்ந்ததுங்க! ஆனா, என்னை யாராலயும் கட்டுப்படுத்த முடியாது. அப்புறம் இன்னொண்ணு உன் அருமை அண்ணனோட கூட அவைகளை ஒப்பிட முடியாது. ஏன்னா அதுங்களுக்கு இயல்பாவே நன்றி உணர்ச்சி ரொம்ப அதிகம்'' என்றது இகழ்ச்சியாக.

சுமிக்கு, இவன் எப்படி தன் மனதில் தோன்றியதை துல்லியமாகக் கணித்தான் என்ற அச்சம் தோன்றி, மனதை விதிர்க்கச் செய்வதாய் இருந்தது. இவன் முன்னால் தான் இனி கவனமாக இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வு உள்ளே படர்ந்தது.



தான் மென்மையான சுபாவம் கொண்டவள் என்பதும் அவனிடம் கோபத்துடன் கத்தி எந்தப் பலனும் இல்லை என்றும் புரிந்தபோது, மனம் கனத்துப் போயிருந்தது.

ஆனாலும் சிறிது நேரம் கழித்து அவன் சாப்பிட அழைத்தபோது, ''எனக்கு, சாப்பாடு வேணாம்... ஒரு துளி விஷம் இருந்தா கொடுங்க போதும்'' என்று வீம்பாகக் கூற முடிந்தது.

அவனும் அதே குரலில், ''இன்னிக்கு நீ கேக்கறதை, என்னால தர முடியாது. காவ்யா வரட்டும். வேணும்னா அன்னிக்குத் தரேன்'' என்றான், எகத்தாளமாக.

தான் கண்காணிக்கப்படுகிறோம் என்ற நினைவே, சுமிக்கு வருத்தத்தை தருவதாய் இருந்தது. தன் யோசனையி லிருந்து கலைந்து நிமிர்ந்து பார்த்தாள். அங்கு கௌதமைக் காணவில்லை. எங்கோ செல்போன் ஒலிக்கும் சப்தம் கேட்டது.

காவ்யாவும் அண்ணனும், இப்போது எங்கிருக்கிறார் களோ என்று எண்ணியபோது, அவன் பேச்சைத் தானும் உண்மை ஆக்குவது புரிந்து தன் மீதே கோபம் வந்தது. காவ்யா எப்படி இருப்பாளென்று எண்ணமிட்ட மனதை அடக்கி நிமிர்ந்து அறையைச் சுற்றிப் பார்த்தபோது, சுவரில் மாட்டி இருந்த அந்தப் போட்டோ கண்களில் பட்டது.

அதன் நடுவில் அந்த கௌதம் அமர்ந்திருக்க இரு புறமும், இரண்டு வயதான தம்பதிகளும், பின்புறம் ஒரு அழகிய பெண்ணும், ஒரு இளைஞனும் நின்றிருந்தனர்.

அந்த பெண்தான் காவ்யாவாக இருக்க வேண்டும் என்று தோன்றியது.

என்ன அழகான ஒற்றுமையான குடும்பம் என்று நினைத்து திரும்பியபோது, 'ஏண்ணா இந்த மகிழ்ச்சியைக் குலைத்து விட்டாய்? இப்போது என் வாழ்க்கையும் கேள்விக்குறியாகி விட்டதே' என்று மனம் கேள்வியாய்த் தவித்தது. ஆனாலும் சேரனைப் பற்றி தவறாக எண்ணவும் முடியாமல், இந்தச் சிக்கிலிலிருந்து எப்படி விடுபடுவது என்ற எண்ணமே பயத்தை விதைத்தது.

குளியலறைக்குள் சென்று வெந்நீரை முகத்தில் அடித்துக் கழுவி விட்டு வந்தபோது மேஜையில் பாலும், ரொட்டியும் வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் அவளுக்குச் சாப்பிட மனமில்லாமல் போகவும், பேசாமல் படுத்துக் கொண்டாள். கதவைத் தாள் போட மறந்தது நினைவு வரவும், வேகமாகச் சென்று பூட்டியபோது, முள்ளில் சிக்கிய சிறகாய் மனம் துடித்தது... விடியும் போது தான் உறக்கமே வந்தது.

மறுநாள் காலையில் எழுந்தபோது, தலை பாரமாக இருந்தது. தன்னை சீர் செய்து கொண்டு, தோட்டத்தில் இறங்கி நடக்க ஆரம்பித்தாள் சுமி. தன் நினைவுகளிலேயே ஆழ்ந்திருந்ததால், பின்புறம் கேட்ட சத்தத்தை அவள் கவனிக்கவில்லை.

திடீரென்று இருபுறமும் தன்னைக் கடந்து நின்று முறைத்த இரு பெரிய உயர்ந்த ரக அல்சேஷன் நாய்களைப் பார்த்ததும் ஒரு கணம் சுமிக்கு ஒன்றுமே புரியவில்லை. உதடுகள் உலர்ந்து போய் துடிக்க அப்படியே உறைந்து போய் அசையாமல் நின்றாள்.



இதய ஓட்டம் மெதுவாக சுரம் தப்ப ஆரம்பித்த போது, ஒரு வலிமையான கரம் அவளை லாவகமாகத் திருப்பி நிறுத்தியது.

திரும்பிய வேகத்தில் இடித்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தால் கௌதம் அங்கு நின்றிருந்தான். மின்சாரம் பட்டது போல் உடனே துள்ளி விலகியவள், அவன் நாய் களைத் தடவிக் கொடுத்து தனக்கு அறிமுகப்படுத்துவதைக் கண்டாள்.

அவன் மெதுவாக அவைகளிடம் குனிந்து ஏதோ சொல் லிக் கொண்டிருந்தான். ஒரு குழந்தையுடன் பேசுவதைப் போலிருந்தது அவனுடைய செய்கை. மிருகங்களை மட்டுமே இவனுக்குப் பிடிக்குமோ என்ற எண்ணத்துடன் சுமி நின்றபோது, கௌதம் நிமிர்ந்து சைகை மூலம் அவளை அழைத்தான்.

மெதுவாக ஒரு அடி எடுத்து முன்னே வைத்து விட்டு அசையாது நிற்கவும், அவனே முன் வந்து அவள் கைகளை நாய்களிடம் கொடுக்கச் சொல்லி அறிமுகப்படுத்தி வைத்தான். ''தோட்டத்துக்குள்ளே நீ எங்கே வேணும்னாலும் போகலாம். ஆனா வெளி கேட் கிட்டே போனா மட்டும் உன்னை டைகரும், ரோவரும் விடாது, ஜாக்கிரதை'' என்று எச்சரித்து விட்டு, இரு நாய்களையும் அழைத்துக் கொண்டு வேறுபுறம் செல்லத் தொடங்கினான்.

தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கும் ஆவல், ஏனோ குறைந்து விட, அறைக்குள் நுழைந்தாள் சுமி. அவளுடைய சூட் கேஸும், ஏர்பேக்கும் மேஜையின் மேல் வைக்கப்பட் டிருந்தது. தன்னுடைய பொருட்களை யார் எடுத்து வந் திருப்பார்கள் என்று மனதில் மெல்லிய ஆச்சரியம் வந்தது.

குளித்து விட்டு வந்து ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு அமர்ந்தவள், நேரம் போனதே தெரியாமல் அதிலேயே ஆழ்ந்து இருந்தபோது, அறைக்கதவு தட்டப்பட்டு ஒரு வயதான பெண்மணி உள்ளே வந்தார்.

சுமியைக் கண்டதும், வரவேற்கும் விதமாக அவர் இயல்பாகப் புன்னகைத்தது, அவள் மனதுக்கு இதமாய், நாம் விரும்பத்தகாத இடத்துக்கு வரவில்லை என்ற எண்ணம் உள்ளே விரவிப் பரவியது.

அவளருகில் வந்தவர் அன்புடன், ''வாங்கம்மா. நான் இங்கே சமையலுக்கு இருக்கேன். என் பேர் மீரா. நேத்து என் பொண்ணைப் பார்க்கப் போயிருந்தேன்மா. காலையில தான் வந்தேன். சாப்பிட வாங்கம்மா. அய்யாவும் இப்ப வரேன்னாங்க. ரெண்டு பேருமே சாப்பிடலாம்'' என்று அழைத்தார்.

கௌதமுடன் அமர்ந்து சாப்பிடுவதா? என்ற கோபத்தில், ''இல்லேம்மா எனக்குப் பசிக்கலை. நான் அப்புறமா சாப்பிடறேன். நீங்க உங்க ஐயாவ கவனிங்க'' என்றாள். புத்தகம் அவள் மனதில் அமைதியை மீட்டுத் தந்தது.



## 3

மீராம்மா திரும்பவும் வந்து சாப்பிட அழைத்தபோது பசி வயிற்றைக் கிள்ள ஆரம்பித்திருந்தது. இரவும் ஒன்றும் சாப்பிடாததால் சோர்வாகத் தோன்ற சாப்பிட்டு விட்டுத் திரும்பி வரும்போது, எதிரில் வந்த கௌதமின் முகம், புரியாத ஒரு பாவத்துடன் இருந்தது.



உதடுகளில் உறைந்த கேலிப்புன்னகையுடன், ''புலி பசிச்சாலும் புல்லைத் திங்காதும்பாங்க! ஆனா, இங்கே ஒரு வழியா புல்கட்டையே சாப்பிட்டு முடிச்சிருச்சி போலருக்கு...'' என்று ஏளனமாகக் கூறி விட்டு வெளியே சென்றான்.

மனம் வேதனையில் துடித்து தண்ணீரில் மூழ்கும் ஓடமாய்த் தத்தளித்தது. அன்று மதியம் சாப்பிடச் சென்றபோது, கௌதம் சாப்பாட்டு மேஜையில் அமர்ந்திருந்தான். இப்போது முகம் திருப்பிச் சென்றால் தவறாகத் தோன்றுமே என்று மீராம்மா அழைத்தவுடனே எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

அவர் புன்னகையுடன் பரிமாறவும், கௌதம் அவளிடம் திரும்பி, ''நீ அசைவம் சாப்பிடுவேல்ல. இந்த மீன் சாப்பிட்டுப் பாரு. ரொம்ப டேஸ்டியா இருக்கும்'' என்று விருந்தினரை உபசரிப்பது போல் கூறியபோது, சுமிக்கு ஏனோ எரிச்சலாக வந்தது.

அவள் மௌனமாக சாப்பிட ஆரம்பித்தபோது தான், சமையலின் அபார ருசியில் தான் அன்று அதிகமாகவே சாப்பிடுவது புரிந்தது. ஆனால் இனி கௌதமுடன் போராடவும் மனதில் தெம்பு வேண்டுமே என்ற எண்ணமும் ஒருங்கே எழுந்தது.

அவன் குரல் திடீரென்று இடைமறித்தது. ''என் பேச்சைக் கேட்டு நடந்தா எல்லாமே நல்லாத்தான் இருக்கும்னு இப்பத் தெரிஞ்சுதா?'' என்று அழுத்தமான தொனியுடன் அவன் கூறவும், அப்படியே எல்லாவற்றையும் எடுத்து அவன் தலையில் கவிழ்க்கலாமா என்று மனம் எண்ணமிட்டது.

தன் இயல்பான மென்மை போய் தான் சீக்கிரமே மாறி விடுவோமோ என்று காரணம் புரியாமல் ஒரு பயம் மனதில்

வர, சட்டென்று கையை உதறி விட்டு எழுந்த சுமி, வேக மாகத் தன் அறைக்கு வந்து விட்டாள். ஜன்னலருகில் சென்று பார்த்தபோது, தோட்டம் அழகாகத் தெரிந்தது.

மனம் லேசாகி, மௌனமாய் பரிபாஷைகளை இசைக்க ஆரம்பித்து, சேரனுடன் சிரித்துக் கடந்த நினைவுகள் கண் முன் விரியும்போதே, அந்தக் கனவுகளின் நினைவுத்திரை, காதருகில் கேட்ட குரலால் உடனே கலைந்தது.

''ஏய்... நீ என்ன நினைச்சிட்டு இருக்கே? நான் என்ன உன் வீட்டு வேலைக்காரனா? சாப்பிடும்போது மத்தவங்ககிட்ட சொல்லிட்டு எழுந்திரிச்சிப் போற சாதாரண மேனர்ஸ் கூடவா உனக்குத் தெரியாது? என்கிட்டே, உன் முகம் திருப்பற வேலை எல்லாம் வேணாம். அப்புறம் நீதான் கஷ்டப்படுவே. புரியுதா?'' என்றபோது மிகவும் கோபமாக, ஆனால் குரல் உயர்த்தாமல் வந்த சீறல் அவளை மிகவும் பாதித்தது.

அதே வேகத்துடன் நிமிர்ந்தவள், ''நான் எப்படி நடந்துக்கணும்னு, ஒரு சட்டம் வேணா போடுங்க. அதுப்படி நடந்துக்கறேன்'' என்று கூறிவிட்டு, அவனைப் பார்க்க விருப்பமின்றித் திரும்பிக் கொண்டாள்.

அவனுடைய கை நொடியில் அவளை சுழற்றித் திருப்பியது. ''இப்ப தானே சொன்னேன். என்கிட்ட யாரும் முகம் திருப்பினதில்லைன்னு.'' என்று அவன் சீறவும், அவளுக்கும் தாங்க முடியாமல் கோபம் வந்தது.

உடனே அவளும், ''எதுக்குமே முதல் தடவை உண்டுன்னு சொல்வாங்க. பாவம்! அது உங்களுக்குத் தெரியாது போல இருக்கு'' என்றாள்.

ஒரு வேகமூச்சுடன், ''ஆமாம்! எதுக்குமே முதல் தடவை உண்டுன்னு நான் இப்பத் தெரிஞ்சிக்கிட்டேன். இது



வரைக்கும் நான் பெண்கள்கிட்ட கை நீட்டினதில்லை. அதுக்கும் முத தடவை வர வச்சிடாதே!'' என்று சீற்றத்துடன் கூறி விட்டு வெளியேறினான். இனி அவன் முன்னிலையில் தான் கவனமாக நடந்து கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டே தொய்ந்து போய் பக்கத்திலிருந்த இருக்கையில் அமர்ந்தாள் சுமி.

முதன் முதலில் அவனைப் பார்த்தபோதே, சுமிக்கு அவனை கெட்டவனாக உருவகப்படுத்த முடியவில்லை. தன் அண்ணனுடைய பாஸ் என்ற முறையில், அவன் நல்லவனாகவே அறிமுகமாகி இருக்கக் கூடாதா என்றிருந்தது.

போன வாரம், இந்த நேரத்தில் கும்பகோணத்தில் இருந்ததும், மாலையில் நாகேசுவரன் கோவிலுக்குச் சென்று சாமி கும்பிட்டு விட்டு பிரகாரத்தில் அமர்ந்து காற்றாட அத்தையுடன் பேசியதும் நினைவு வர, மனம் பாசத்திற்கு மிகவும் ஏங்கியது.

இப்போது, சேரன் தன்னுடன் இருந்திருந்தால் சந்தோஷ மாக இருந்திருக்குமே என்ற யோசனையுடன் சாய்ந்து, அப்படியே உறங்கிப் போனாள்.

சிறிது நேரம் சென்று, கௌதம் அந்த அறைக்குள் வந்ததையோ, உறக்கத்தில் மென்மையான அழகுடன் இருந்த அவள் முகத்தையே சிறிது நேரம் கூர்ந்து நோக்கி விட்டு, ஒரு ஆழ்ந்த பெருமூச்சுடன் கதவை சாத்தி விட்டுச் சென்றதையோ, அவள் அறியவில்லை.

உறக்கத்திலிருந்து கண் விழித்தபோது, அறைக் கதவு சாத்தி இருந்ததையும் மீறி, வெளியே குரல்கள் கேட்டன. அவள் எழுந்து தயாராகி, மெதுவாகக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தபோது, ஹாலில் கௌதமுடன் போட்டோவில் பார்த்த மற்றொரு இளைஞன் பேசிக் கொண்டிருந்தான்.

அவள் யோசிக்கும்போதே, கௌதம் அவளைப் பார்த்து விட்டு தலையசைத்து கூப்பிட்டான். சுமியைக் கண்டதும் அந்தப் புதியவன் எழுந்து ''நான் ரவி. காவ்யாவோட சின்ன அண்ணன்'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டபோது, சேரனின் நினைவில் தர்ம சங்கடத்துடன் முகம் சிவந்து விட, வணக்கம் கூறினாள் சுமி.

கௌதமின் பார்வை மட்டும் அவளை விட்டு ஒரு நொடி கூட அகலாது இருந்ததை அவளுடைய ஓரப்பார்வை உணர்த்துவதாய்! ''நான் சம்யுக்தா. சேரனோட தங்கை'' என்று கூறும்போதே, அதைத் தலை நிமிர்ந்து பெருமையாகக் கூற முடியாத நிர்ப்பந்தம், மனதைக் கூறு போடுவதாய் இருந்தது.

ஆனால் ரவி எந்த பந்தாவுமின்றி இயல்பாகச் சிரித்தான். ''நீங்க வந்தபோது, சேரனால இங்க இருக்க முடியலை. எஸ்டேட் வேலையா அவர் சென்னைக்குப் போயிருக்கார். வரதுக்குப் பத்து நாளாகும்னு நினைக்கிறேன். நீங்க அந்த வீட்டிலத் தனியா இருக்க வேணாம்னுதான், உங்களை மீராம்மாவோட துணையில இங்கத் தங்க வெச்சதா அண்ணா சொன்னார்'' என்ற இயல்பான வார்த்தைகள், நெருடலாய் அவளுக்குள் உட்புகுந்து, கேள்வியைச் சுமந்து கௌதமை ஏறிடுவதாய்!

அவன் ரவியிடம், ''நீ போய் அப்பாகிட்ட, எஸ்டேட் வேலையா நான் இங்க இருக்கேன்னு சொல்லு. ஏதாவது தேவைன்னா, இங்கே என் செல்லுக்குப் பேசச் சொல்லு. போன் வேலை செய்யலை... அப்புறம் நீ எப்பக் கிளம்பறே?''

''காலையில கிளம்பறேண்ணா! ஆபீஸில எல்லாத்தையும் அப்பாவ பாத்துக்கச் சொல்லி இருக்கேன். ஒரு வாரம் கழிச்சி நீங்க வந்துடுவீங்கன்னும் சொல்றேண்ணா!'' என்றவன், சுமியிடம் திரும்பினான்.



''இங்க உங்களுக்கு எல்லாம் வசதியா இருக்கா மிஸ் சம்யுக்தா'' என்று கேட்டவுடன், ''உன் அண்ணன் இருப்பது தான் தர்மசங்கடமாக இருக்கிறது'' என்று கூற வேண்டும் போலிருந்தது சுமிக்கு!

மனதின் புன்னகையை மறைத்து, ''ப்ளீஸ்! நீங்க என்னை சுமின்னே, கூப்பிடலாம். அண்ணா என்னை அப்படித்தான் கூப்பிடுவார்'' என்று இயல்பாகக் கூறிவிட்டு, உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

சேரன் காவ்யாவுடன் சென்றிருப்பதை மறைத்து, அதை மனதில் கொள்ளாமல் ரவி பெருந்தன்மையுடன் பேசியது. அவன் மேல் பெரும் மதிப்பை ஏற்படுத்தியது. ஏனோ, கௌதமிடம் வராத ஒரு பரிவையும் அவனிடம் உண்டு பண்ணியது.

''நீங்க நாளைக்கே கிளம்பிப் போயிடுவீங்களா?'' அவள் குரலில் தெரிந்த ஆதங்கத்தில், ஒரு சீறலான மூச்சுடன் எழுந்த கௌதம், வேகமாக வெளியே சென்றான். ''ஆமாங்க... வேலை இருக்கு!'' என்று புன்னகைத்த ரவியும், அவசரமாக அண்ணனைப் பின் தொடர்ந்தான்.

மீராம்மாவைத் தேடிச் சென்ற போது அவர், ''வாங்கம்மா! நான் வந்து பாத்தப்ப நாற்காலியிலேயே தூங்கிட்டிருந்தீங்க. ஐயா உங்களைத் தொந்தரவு பண்ண வேணாம்னு சொன்னது ஞாபகம் வந்தது. அதான் எழுப்பாம வந்திட்டேன்'' என்று வாஞ்சையுடன் கூறி விட்டு டிபனும், காபியும் கொடுத்தார்.

''காபி மட்டும் போதும்மா! அப்புறம்... என்ன நீங்க சுமின்னே கூப்பிடலாம். சின்னம்மான்னெல்லாம் கூப்பிட்டா என்னவோ போலிருக்கு'' என்றாள் மென்மையான புன்னகையுடன்.

''அய்யோ! நான் எப்படிம்மா உங்களைப் பேர் சொல்றது? வேணும்னா சுமிம்மான்னு கூப்பிடறேன்!'' என்ற போது இயல்பாகச் சிரித்த சுமிக்கு மனதில் கௌதமைப் பற்றிய எண்ணங்கள் மெலிதாய் ஊடுருவியது. கடல் மணலில் விட்டு வந்த பாதச்சுவடாய், மனம் மீண்டும் அவனிடமே சென்றது.

திடீரென்று ''ஹாய்! இங்க என்ன செய்யறீங்க? மீராம் மாவைப் பார்த்துப் போகலாம்னு வந்தா நீங்க எப்படி இங்கே?'' என்று உற்சாகமாய் கேட்டுக் கொண்டே உள்ளே வந்த ரவி, இயல்பாக மேடையில் சாய்ந்து நின்று கொண்டான்.

''நான் மீராம்மாவுக்கு, சமையல்லே உதவி பண்ணலாம்னு வந்தா, ப்ச் அவங்க தான் விடறதே இல்லை'' என்றாள் சுமி சலுகையுடன்.

''அப்பாடா! மீராம்மா. நல்ல காரியம் செஞ்சீங்க! நாளைக்குக் காலையில நான் நல்லபடியா திரும்பிப் போறதுக்கு கேரண்டீ கொடுத்தீங்க பாருங்க. அதுக்கு லட்சம் தேங்க்ஸ்!'' என்று சுமியைப் பார்த்தபடியே அவன் குறும்புடன் கூற, அவளுக்கும் சிரிப்பு வந்தது.

வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தவளின் பார்வை, அறை வாசலில் நின்றிருந்த கௌதமைக் கண்டதும், சூரியனைக் கண்ட பனித்துளியைப் போல், உடனே மறைந்தது.

அவன் முகம் சீற்றத்தை சுமந்திருந்தது கண்டு, நான் சிரித்தால் இவனுக்கென்ன என்று தோன்ற, அவள் உடனே திரும்பி இன்னொரு கதவைத் திறந்து வெளியில் சென்றாள்.

தோட்டத்தில் இறங்கி நடந்தபோது, ரோவரும், டைகரும் தொடர்ந்தாலும், பயமின்றிச் சென்று, அங்கிருந்த கல்



பெஞ்சில் அமர்ந்தாள். மனதில் ஆயிரம் கேள்விகள் துளிர்த்தன. ''ஏன் என் வாழ்க்கை இப்படி திசை மாறியது? ரவியிடம் ஏதாவது உதவி கேட்கலாமா? அண்ணனை மீறி அவனால் ஏதும் செய்ய முடியுமா?'' உள்ளத்தில் வினாக்களின் அணி வகுப்பு.

கௌதமை நினைத்தாலே, இனம் புரியாத ஒரு பயம் மனதில் படர்ந்தது. அவன் ஆளுமைக் குணம் மனதை விதிர்க்கச் செய்தது. நிமிர்ந்தபோது அவளின் நினைவு களுக்குக் காரணமானவனே எதிரில் வந்து நிற்கவும், தூக்கி வாரிப் போட்டது சுமிக்கு!

வேகமாக எழுந்து செல்ல முயன்றவளைப் பிடித்து நிறுத்தியது அவனுடைய வலிமையான கை!

''நீ யார் கிட்டே உதவி கேட்டாலும், என்னை மீறி இங்கே யாரும் எதுவும் செய்ய மாட்டாங்க. உன்னோட முயற்சி களை நிறுத்திக்கலாம். நீ எவ்வளவு தான் சிரிச்சி மயக்கி னாலும், ரவி உனக்கு உதவ மாட்டான்'' என்று அமர்த்த லாகக் கூறவும், சுமிக்குள் கோப மின்னல் கீற்றாய் எழுந்தது.

'சே' என்று அருவறுப்புடன் கூறி விட்டு உள்ளே செல்லும் போதே, அவன் அழைப்பு கேட்க, 'என்ன கேவலமான நினைப்பு! சிரித்துச் சிரித்து ரவியை வளைத்துப் பிறகு தப்பி விடுவேன் என்று நினைத்தானா?' என்ற வேதனை இதயத்தில் முட்களைப் பரப்பியது.

படுக்கையில் சென்று அமர்ந்ததும், மனம் சமாதானமடைய மறுத்து நினைவுகள் அண்ணனை நோக்கித் திரும்பியது. இன்னும் எத்தனை நாட்கள் என்னை இங்கு பிணைக் கைதியாய் வைத்திருக்கப் போகிறாய் என்ற கேள்வி உள்ளத்தில் பிறந்து, காற்றில் கலந்தது.

உதிர்ந்திட்ட நட்சத்திரமாய் மனது சிதறி இருந்தது. சோர்ந்த விழிகளின் கார்காலத்தை, வழிந்திட்ட நீர்த்துளிகள் பறைசாற்ற, ஓய்ந்து போய் படுத்துக் கொண்டாள் சுமி!



## 4

**ச**ம்யுக்தாவின் அறைக் கதவு மெதுவாகத் தட்டப் பட்டது. எழுந்து மணியைப் பார்த்தபோது, கடிகார முட்கள் ஒன்பது என்று அறிவித்தன. தான் இவ்வளவு நேரமாகவா படுத்திருந்தோம் என்ற எண்ணம் மனதைத் தீண்ட ஒரு பதைப்புடன் கதவைத் திறந்தால், மீராம்மா கையில் ட்ரேயுடன் நின்றிருந்தார்.

''எனக்கு ஒண்ணுமே வேண்டாம்மா'' என்று சோர்ந்த குரலில் சுமி கூறவும், ''அப்படிச் சொல்லாதீங்கம்மா. வயிறு காலியா இருந்தா மனசுலயும் தெம்பில்லாமப் போயிடும். முதல்ல சப்பாத்திய சாப்பிடுங்க. அப்புறம் பால் குடிக் கலாம்'' என்று வற்புறுத்தி அவளைச் சாப்பிட வைத்து விட்டுத்தான் அவர் சென்றார்.

யாரையும் புண்படுத்திப் பழக்கமில்லாத சுமிக்கு, அவரைச் சங்கடப்படுத்தவும் மனமில்லை. கதவைத் தாளிட்டு விட்டுப் படுத்தபோது, அன்றைய நிகழ்ச்சிகளின் பாதிப் பால், மனமும் உடலும் சோர்ந்து அடித்துப் போட்டாற் போல் உறக்கம் வந்தது.

உறக்கத்தின் பிடியில் ஆயிரம் கனவுகள். அவளின் கனவுக் காட்டுக்குள் அவனுக்கு மட்டுமே தனி அனுமதியோ



என்பதுபோல் கௌதமின் நினைவுகளே, அங்கும் அணி வகுத்தன. திடுக்கிட்டு விழித்தபோது, காலை மணி ஐந்தாகி இருந்தது.

சுமிக்கு, தான் எங்கிருக்கிறோம் என்று அப்போது தான் புலப்பட, நேற்றைய நினைவுகள் மனதிற்குள் நிழலாய் மனமும், உடலும் ஒரு விதிர்ப்புடன் விழிக்க இனியும் படுத் திருக்க முடியாது என்று தோன்றவும், எழுந்து தலைக்குக் குளித்துவிட்டு, காய்வதற்காக விரித்து விட்டபடி, இரு புறமும் எடுத்து க்ளிப் செய்து அமர்ந்தபோது, மணி ஐந்தே முக்கால் என்றது.

பிங்க் கலர் சேலை அணிந்து சுமி தன்னைக் கண்ணாடி யில் பார்த்தபோது, மலைவாசம் அவளை இன்னும் அழகாக்கி இருந்தது. கன்னங்கள் பளிங்காய் பளபளத்து, செம்மை கூடி தெரிந்தது. வந்த நான்கே நாட்களில், இயற்கை ஆளையே மாற்றி விடுமா என்றும், வியப்பு வந்தது.

இந்த வேளையில் யாரும் எழுந்திருக்க மாட்டார்கள் என்று தோன்றியது சுமிக்கு. முக்கியமாக கௌதம் வாக்கிங் செல்வதற்கு முன் தோட்டத்தை சுதந்திரமாக ஒரு சுற்று சுற்றி வரலாம் என்று எழுந்து வெளியே சென்றாள்.

விடியல் மிக, அழகாகக் கண் முன் விரிந்து தெரிந்தது. அதிகாலை நேரத்துப் பூங்குயில் ஒன்று தனியே சாதகம் செய்து கொண்டு இருந்தது. மயில் தோகை போல் கூந்தல் அசைய, காற்றில் மிதந்து வரும் மெல்லிய மேகம் போல் நடந்தாள் சுமி. டைகரும், ரோவரும் நிமிர்ந்து பார்த்து விட்டு, அவளைக் கண்டதும் சோம்பலுடன் திரும்பிப் படுத்துக் கொண்டன.

மலர்களின் அழகு, அவள் மனதைக் கொள்ளைக் கொள்வதாய் இருந்தது. கவிதை இழைகளைக் கோர்க்க ஆரம்பித்தது. ''இந்தப் பூக்களின் மேல் யார் பன்னீர் தூவியது? எங்கிருந்து வந்தன. சூரிய ஒளியில் மின்னும் இந்த முத்துக்கள்...? விண்மீன்கள், இரவே மண்ணுக்கு இடம் பெயர்ந்தனவா? காலைப் பொழுதில் எப்படி வந்தன மின்மினிகள்?''

சில்லென்ற பனிநீரை யாரோ முகத்தில் அடித்தாற்போல் கற்பனைக் கவிதை உலகம் கலைந்தது. எதிரில் நின்று அவளையே அலட்சியமாகப் பார்த்துக் கொண்டிருந்த கௌதமைக் கண்டதும் உடனே, திரும்பி வந்த வழியே செல்ல அடி எடுத்து வைத்தாள் சுமி.

அவன் ''ஒரு நிமிஷம்'' என்று அழைக்கவும், அப்படியே நின்றவள், அருகில் அவன் வரவும் அனிச்சை செயலாய் ஒதுங்கி நின்றாள். கௌதம் என்ன சொல்லி இருப்பானோ, அதற்குள் எதிரே ரவி வருவது தெரிந்தது. ஒரு கணம் இயல்பான மூச்சு வர, வேகமாக முன்னே சென்ற சுமி, உற்சாகம் தொனிக்கும் குரலில் 'குட்மார்னிங்' என்றாள் ரவியிடம்.

அவனும் புன்னகையுடன் இருவருக்கும் காலை வணக்கம் சொல்ல, ஒரு தலையசைப்புடன் வேகமாக வீட்டிற்குள் சென்றான் கௌதம்.

ரவி அவளிடம், ''என்னங்க நீங்க, இப்படித் தலைவிரி கோலமா அலைஞ்சிட்டு இருக்கீங்க. நான் பயந்து போய், காலை நேரத்துல மோகினிங்க நடமாட்டம் எங்க வந்துச் சுன்னு யோசிச்சிட்டே வந்தேன்'' என்று கூற, உடனே சிரிப்பு வந்தது சுமிக்கு.



இவனிடம் மட்டும் எந்தத் தடையும் இன்றி இயல்பாகச் சிரிக்க முடிகிறதே என்று தோன்றும் போதே, அவனும் இப்போது கிளம்பி விடுவானே என்ற எண்ணம் சோர்வைத் தந்தது.

''என்னாச்சு சுமி! திடீர்னு சோகமாயிட்டீங்க. ஒரு நிமிஷம் இருங்க'' என்றபடி தோட்டக்காரனிடம் திரும்பியவன், ''டேவிட், இவங்க கட்டியிருக்கிற புடவைக்குப் பொருத்தமா ஒரு பூ எடுத்துட்டு வா'' என்றான். அவனும் அழகான ஒரு ரோஜாவைப் பறித்து வந்து அவளிடம் கொடுத்தான்.

அதை வாங்கிய சுமி, ''டேவிட், இனிமே நீங்க எனக்காக எந்தப் பூவையும் பறிக்கக் கூடாது. எனக்கு ரோஜாப் பூவெல்லாம் செடியில இருந்தாத்தான் பிடிக்கும். ப்ளீஸ். இனிமே பறிக்காதீங்க'' என்றதும், ஆச்சர்யம் கலந்த சிரிப்புடன் தலையாட்டிவிட்டுச் சென்றான் அவன்.

''நீங்க எப்பக் கிளம்பணும் ரவி'' என்று சுமி கேட்க, ''மீராம்மாவோட டிபனை ஒரு பிடி பிடிச்சிட்டுக் கிளம்ப வேண்டியது தான். நான் திரும்பி வரதுக்கு எப்படியும் ஒரு வாரம் ஆகும் சுமி'' என்றான்.

அதற்குள், டேவிட் வந்து கௌதம் அவனை அழைப்பதாகக் கூறவும், விடைபெற்று ஓடிய ரவியைப் பார்த்தபோது, இந்தக் கௌதம் எல்லாரையும் மிரட்டி வைத்திருப்பானோ, சொல்லி வைத்தாற் போல் அனைவரும் பயப்படுகிறார்களே என்று தோன்றியது.

நேரே சமையலறைக்குள் சென்றவள், காபியின் நறுமணத்தை நாசியில் நுகர்ந்தபடியே ''எனக்கும் ஒரு கப் கிடைக்குமா மீராம்மா?'' என்று கேட்டபடியே உள்ளே சென்றாள்.

அவளும், ''வாங்கம்மா! நானே வந்து உங்களை எழுப்பலாம்னு பாத்தேன். நீங்க அதுக்குள்ளே குளிச்சி முடிச்சி, புடவை கட்டி மகாலெஷ்மி மாதிரி வந்து நிக்கறீங்க?'' என்றார் ஆச்சர்யத்துடன்.

அவளுக்குப் பின்னாலிருந்து ''தாமரைப்பூவும், எக்ஸ்ட்ரா ரெண்டு கையும் தான் காணோம். ஆனா அது எங்கேன்னு மட்டும் கேட்டுடாதீங்க மீராம்மா'' என்று கூறியபடியே ரவி உள்ளே வந்தான்.

சுமியிடம் திரும்பி ''நீங்க என்னங்க டேவிட் கொடுத்த ரோஜாவைத் தலையில வச்சுக்கலையா? மீராம்மா வேற மகாலெஷ்மின்னு சொல்லிட்டாங்க. தாமரைப் பூ குடுத்தா தான் வச்சிப்பீங்களா? நீங்க பாட்டுக்குத் தாமரைப் பூ மேல் ஏறி உக்காந்துடாதீங்க. பாவம் அது நசுங்கிடும்'' என்று நமட்டுச் சிரிப்புடன் கூற, அடக்க முடியாமல் சிரித்தாள் சுமி.

சிரிப்பின் இடையே திரும்பி ''எனக்கு உங்களைப் பாத்தா எழுத்தாளர் சுஜாதா கதைகள்ல வர 'வசந்த்' ஞாபகம் தான் வருது ரவி. அந்த மாதிரியே இருக்கு உங்க பேச்சு எல்லாம்'' என்றாள்.

''நானும் படிச்சிருக்கேன். உங்களுக்கும் வசந்த்தான் பிடிக்குமா சுமி?''

''ஊஹூம்... எனக்கு அவரோட சீனியர் லாயர் கணேஷ் கேரக்டர் தான் ரொம்பப் பிடிக்கும்'' என்றபோது ரவி ஒரு முறுவலுடன் திரும்பி ''அப்ப கௌதம் அண்ணாவைத் தான் பிடிக்கும்நீங்க. எனக்கு பாஸ் அவர்தானே. ஆனா ஒரு ஒத்துமை. அண்ணனும், கணேஷ் மாதிரியே ஒரு அழுத்தமான கேரக்டர்தான். புரிஞ்சுக்கறது ரொம்பக் கஷ்டம்'' என்றபோது உடனே பேச்சை மாற்றினாள் அவள்.



''உங்க அப்பா, அம்மா எல்லாரும் எங்க இருக்காங்க ரவி?'' என்று சுமி கேட்கவும், ''வால்பாறையில தான் இருக்காங்க. என் அப்பாவும், கௌதம் அண்ணாவோட அப்பாவும் அண்ணன், தம்பிங்க. ரெண்டு பேரும் ரொம்ப ஒத்துமை.' வீடு கூட ஒரே காம்பவுண்டுக்குள்ளே தனித் தனி வீடா ட்வின் ஹவுஸ் மாதிரி இருக்கும். பெரியப்பாவுக்கு உடம்பு சரி இல்லாமப் போனதில இருந்து அண்ணாதான் எல்லாம் பாத்துக்கறார். அப்பா ஆபீஸ் வேலை எல்லாம் பார்ப்பார். நான் வெளி வேலை எல்லாம் பாத்துப்பேன்'' என்று கூறிய ரவி எங்கு தொடங்கினாலும் கௌதமில் வந்து முடித்து விடுவது புரிந்தது.

ரவி வந்த உடனே அந்த இடமே கலகலப்பாவதும், ஆனால் அவனுடைய அண்ணன் மட்டும் ஓட்டுக்குள் சுருங்கும் நத்தையைப் போல் இருப்பதும் நினைவுக்கு வர, அதை இடைமறித்தது ரவியின் குரல்.

''சரிங்க! நான் போய் அண்ணா கிட்டப் பேசிட்டு வரேன். மீராம்மா வந்து உங்க டிபனை ஒரு கை பாக்கறேன். அப்புறம் ஒரு முக்கியமான விஷயம் சுமி. தயவு செஞ்சு நான் கிளம்பற வரைக்கும் உங்க தமயந்தி பாகத்தைக் கொஞ்சம் பலப்பரீட்சை பண்ணாதீங்க ப்ளீஸ்'' என்று ஒரு நமட்டுச் சிரிப்புடன் கூறிச் செல்ல, இயல்பாகப் பூத்த முறுவலுடன் தன் அறைக்குத் திரும்பினாள் அவள்.

பழகிய உடனே நட்பு செய்த அவனை, உடனே பிரியப் போகிறோம் என்பதே மனதில் கஷ்டமாய் தோன்றியது. ரவியும், சேரனைப் போன்ற தோற்றத்துடன், வெகுளியாகப் பேசியதில், நினைவலைகள் அண்ணனிடம் தாவிச் சென்றன.

அவளறிந்த வரையில் கௌதம் கூறியது போல், அவன் காவ்யாவை இழுத்துக் கொண்டு ஒரு கோழை

மாதிரி ஓடி இருக்க மாட்டான் என்று உள்ளம் உறுதியாய் நம்பியது.

தன் போக்கிலேயே உழன்ற மனதுடன், தன் துணிகளைத் துவைத்து பின்புறமிருந்த வெராண்டாவில் காய வைத்தவள், தலையைத் தளரப் பின்னி விட்டு டைனிங் ஹாலுக்குச் சென்றபோது, ரவி அங்கு தயாராக அமர்ந்திருந்தான்.

ஒரு புன்னகையுடன் சமையலறைக்குள் சென்ற சுமி, ''என்கிட்டக் குடுங்கம்மா. நான் எல்லாத்தையும் கொண்டு போய் டேபிள்லே வைக்கிறேன். நீங்க பரிமாறலாம்'' என்றபடி, எடுத்துச் சென்று மேசையில் வைத்தாள்.

ரவி ஏதோ ஜோக் அடிக்கவும், அவள் அடக்க முடியாமல் சிரித்தபோது, ''ஷ்... சும்மா இரு ரவி. பேசாம சாப்பிடு'' என்றபடி வந்த கௌதமின் குரலில், உடனே அடங்கினாள் சுமியும்.

''நீங்களும் உக்காருங்கம்மா'' என்று மீராம்மா வற்புறுத்தவும், மறுக்க முடியாமல் மறுபடியும் அமர்ந்து டிபனை கொறிக்கும் போதுதான், அந்த இடமே அமைதியின் பிடியில் இருந்ததை உணர முடிந்தது. ரவியால் இவ்வளவு அமைதியாகக் கூட இருக்க முடியுமா என்ற சந்தேகம் எழுந்தது.

அவசரமாகச் சாப்பிட்டு விட்டு எழுந்த சுமி, ''நான் என் ரூமுக்குப் போறேன் ரவி'' என்று கூறிவிட்டுத் தன் அறைக்கு வந்த சிறிது நேரத்திலேயே கதவு தட்டப்பட்டது. திறந்தால் ரவி நின்றிருந்தான்.

''என்னங்க மூட் அவுட் ஆயிட்டீங்களா? அண்ணா எப்பவுமே அப்படித்தான். ஆனா கோபம் வந்தாலும், பாத்துப் பாத்து செய்யறதிலே அவரை யாருமே மிஞ்ச முடியாது. நீங்க இப்பதானே அவரப் பாக்கறீங்க. போகப் போகப் புரிஞ்சிப் பீங்க. நான் கிளம்பறேன் சுமி. ஸீயூ'' என்று கூறிவிட்டு செல்ல வெகு நாட்கள் பழகிய ஒரு நண்பனைப் பிரிவது போல் துக்கமானது மனது.



சிறிது நேரத்தில் கார் கிளம்பவும் ஓசை கேட்க, கதவைத் தாளிட்டு விட்டு ஒரு புத்தகத்துடன் அமர்ந்தவள் எவ்வளவு நேரம் படித்திருப்பாளோ, கதவு மெலிதாகத் தட்டப்பட்டது.

பார்த்தால் கையில் ஹார்லிக்சுடன் மீராம்மா நின்றிருந்தார். ''எனக்கு வேண்டாம்மா. சும்மாவே ஒரு வேலையும் இல்லாம போரடிச்சிட்டு உக்காந்திருக்கேன். இது வேறயா? அப்புறம் பூசணிக்காய் மாதிரி ஆயிடுவேன்'' மறுத்தாள் சுமி.

''அய்யா தாம்மா கொடுக்கச் சொன்னாங்க. காலையிலயும் நீங்க சரியா சாப்பிடலையாம். அதான்'' என்று கூறி அவளைப் பருக வைத்து விட்டு அவர் செல்ல, ரவியின் வரிகள் மனதில் மீண்டும் சரம் கோர்ப்பதாய்...

தான் ஒருவேளை கௌதமைப் பற்றி சரியாக கணிக்கவில்லையோ என்றும் தோன்றியது. தன்னை சிறை வைத்திருப்பதாகத் தன்னிடமே சொல்வதும், சமையல்காரம்மாவிடம் தன்னை நன்றாகக் கவனிக்கும்படி சொல்வதும் என்ன ஒரு முரண்பட்ட மனிதன். ரவி சொல்வதை வைத்துப் பார்த்தால் மிகவும் நல்லவனாகவும் தெரிகிறது. எது நிஜம்?

ஆனால், நமக்கேன் இந்த ஆராய்ச்சி எல்லாம் என்ற உணர்வுடன் தலையைக் குலுக்கி, அவன் நினைவுகளுக்கு விடை கொடுத்தபோது, நதி வற்றினாலும், கண்ணுக்குத் தெரியாமல் அடியில் மறைந்து இருக்கும் நீரூற்றைப் போல்

மனதின் ஆழத்தில் விடாமல் அவன் நினைவுகள் தன் சுவடைப் பதித்தன.

மனதை வேறுபுறம் செலுத்த வேண்டி இருந்ததால், எடுத்து வந்திருந்த புத்தகத்தை முழுதாய் படித்து முடித்தாள் சுமி. வேறு ஏதாவது புத்தகம் இருக்கிறதா என்று பார்க்கலாம் என்று ஹாலுக்கு வந்த போது, கௌதம் தன் அறையிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும், ஒரு நொடி தயங்கி விட்டுச் சென்றவளை நிறுத்தினான்.

''என்ன ஏதாவது வேணுமா?'' என்று ஆழ்ந்த குரலில் அவன் கேட்டவுடன், தான் ஏன் தயங்கி நின்றோம் என்றிருந்தது சுமிக்கு. இவன் என்ன, என் மனதைப் படிப்பவனோ என்ற பயம் உள்ளூரப் படர்ந்தது.

மெல்லிய குரலில், ''பொழுது போகலை. ஏதாவது புக்ஸ் இருந்தா கேட்கலாம்னு'' என்றவுடன் ஒரு கணம் அவளையே இடுங்கிய கண்களுடன் கூர்ந்தவன், ''என்னோட வா'' என்று வீட்டின் பின்புறம் இருந்த அறைக்கு அழைத்துச் சென்றான்.

அங்கு நுழைந்ததுமே ஒரு பக்க அலமாரியில் சாமி படங்கள் வைத்து, புதிதாக மலர்கள் சூட்டப்பட்டு பூஜை செய்திருந்தது தெரிந்தது. எதிரில் பெரிய புத்தக அலமாரி இருந்தது. அங்கேயே மாட்டியிருந்த சாவியைக் கொண்டு அதைத் திறந்தான் கௌதம்.

உள்ளே வரிசையாக நிறைய புத்தகங்கள் ''வாவ்...'' என்று தன்னையறியாமல் கூறி விட்டு, உதட்டைக் கடித்துக் கொண்டாள் சுமி. அவன் எந்த உணர்ச்சியுமின்றித் திரும்பி ''இதிலே எந்தப் புத்தகம் வேணும்னாலும் எடுத்துப் படிக்கலாம். ஆனா ஒழுங்கா அடுக்கி வச்சிடணும்'' என்று அழுத்தமாகக் கூறி விட்டு அங்கேயே நின்றிருந்தான்.



அங்கு எல்லா விதமான புத்தகங்களும் இருந்தன. நாவல்கள், புராண இதிகாசங்கள், பொருளாதாரம், தொழில் சம்மந்தமான புத்தகங்கள் என்று எல்லாமே சீராக தனித் தனியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மெதுவாக ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டே நகர்ந்த போதுதான், கௌதமின் அருகில் வந்து விட்டது உணர்ந்து விதிர்த்துப் போய் திரும்பினாள் அவள்.

மனதைச் சுடும் தூரத்தில், அவன் சுவாசம் சூடாய் அது உயிரின் ஆழம் வரை சென்று விரவிப் பரவுவதாய்... வேகமாக விலகி, அவனை தர்ம சங்கடத்துடன் நிமிர்ந்து பார்த்து ''தேங்க்ஸ்'' என்றாள் மெதுவாக.

அவன் கண்கள் திடீரென மின்ன, புரிந்து கொள்ள முடியாத ஒரு பாவனை முதலில் வந்து, பிறகு முகம் மாறி இயல்பு நிலைக்கு வந்தது. ''நீ தைரியசாலி தான். உன் வேலை முடிஞ்சிடுச்சி, நீ வெளியே போலாம் அப்படீன்னு, என் வீட்டிலேயே என்னை வெளியே போங்கன்னு சொல்லாம சொல்றே. ம்...'' என்று கூறிவிட்டு விருட்டென்று வெளியில் சென்றான்.

வார்த்தைகள் தீயாய்ச் சுட்டாலும், அவன் பார்வைகள் அவள் இதயத்தில் ஒரு பனிக்கட்டியை வைத்தது போல் குளிரச் செய்தது.

விடை காண முடியாத பல கேள்விகளைத் தனக்குள் கேட்டபடி, மீண்டும் புத்தகங்களிடம் பார்வையைத் திருப்பியவள், தனக்குப் பிடித்த எழுத்தாளரின் நாவல்கள் இரண்டை எடுத்துக் கொண்டு பூட்டி விட்டு திரும்பினாள்.

கடவுளின் பாதங்களில் ''இந்த இக்கட்டிலிருந்து என்னை எப்படியாவது காப்பாற்றி விடு இறைவா'' என்று மனம் சரணடைந்தது.



## 5

**சு**மிக்கு, அன்றைய பொழுது புத்தகங்களின் துணையுடன், இனிதாகக் கழிந்தது. மதியம் சாப்பிடும் போதும், கௌதம் அமைதியாக ஏதோ ஒரு யோசனையில் இருந்ததால், எதுவும் பிரச்சனை இல்லாது போயிற்று. மாலையில் தோட்டத்துக்குச் சென்றபோது, வானம் பொன்னிற வண்ணத்தை நெய்து கொண்டிருந்தது.

அவளுக்குப் பிடித்த பழைய பாடல் வரிகள், மனதிற்குள் நிறைந்து, உதடுகளில் கசிந்தது. ''இது ஒரு பொன்மாலைப் பொழுது வானமகள் நாணுகிறாள். வேறு உடை பூணுகிறாள்'' என்ன அற்புதமான வரிகள் என்று மனம் உருகியது.

மனம் லேசாகி விட மெதுவாக நடந்த போது, யாரோ தன்னை உற்றுப் பார்க்கும் உணர்வு மனதில் உறுத்த, திரும்பிப் பார்த்தால் யாருமே இல்லை.

கௌதமின் அறைப் பக்கம் ஜன்னலில் அசைவு தெரிவதுபோல் திரைச்சீலை ஆடுவது கூட, அரண்டவன் கண்ணுக்கு என்று ஏதோ பழமொழி கூறுவார்களே, அது போலத் தெரிகிறது என்ற நினைவுடன், பின்புறம் தெரிந்த சிறு வீட்டின் பக்கம் சென்றாள் சுமி.

அங்கு ஒரு பெண், கையில் குழந்தையுடன் நின்றிருந்தாள். சுமியைக் கண்டதும் விரிந்த புன்னகையுடன் முன்னால் வந்து, ''நீங்க அய்யாவோட ப்ரெண்டாம்மா. நீங்க வந்திருக்கிறதா எங்க வீட்டுக்காரரு சொன்னாரு. நான்



வாட்ச்மேனோட பொண்ஜாதி. என் பேரு மரியமுங்க'' என்றாள்.

அவள் எண்ணத்தை உடனே மாற்ற வேண்டும் என்ற முதல் கடமை மனதில் எழ, ''மரியம், நீங்க நினைக்கிற மாதிரி நான் உங்க அய்யாவோட ஃப்ரெண்ட் இல்லை. எங்க அண்ணன் சேரன் தான் இங்கே எஸ்டேட் மேனேஜரா இருக்கார். நான் ஊரில் இருந்து வந்தப்ப அவர் இல்லை. சென்னைக்குப் போயிருக்கார். அதனால தான் இங்கே தங்கி இருக்கேன்.''

''அதானே... எங்கய்யாவுக்கு இது மாதிரிப் பொம்பளை ப்ரெண்ட் எல்லாம் கிடையாதேன்னு பேசிக்கிட்டோம். உங்களைப் பாத்தா எங்கியோ பாத்த ஜாடையா தெரியுதுன்னு எங்க வீட்டுக்காரரு சொன்னாரு. உங்க அண்ணன் தான் மேனேஜரு அய்யாவா? ரொம்ப நல்லவரும்மா. இங்க வரப்போ பாத்திருக்கேன்'' என்றபோது இங்கு தன் அண்ணனைப் பற்றி வந்த முதல் நல்ல வார்த்தை மனதிலும் பதிந்தது.

அவள் கையிலிருந்த குழந்தை கொழுக் மொழுக் என்று அழகாய் அவளைப் பார்த்துச் சிரித்தது. ஆர்வத்துடன் கை நீட்டத் தாவி வந்தது. ''உன் பேரென்ன கண்ணா?'' என்று கேட்டுக் குழந்தையை முத்தமிட்டாள் சுமி. மரியம் ''ஜான்சன்ங்கம்மா'' என்றவுடன், ''நான் இவனைத் தூக்கிட்டுப் போய் கொஞ்ச நேரம் வச்சிருக்கட்டுமா?'' என்றாள் சுமி.

உற்சாகத்துடன் தலையசைத்து விடை கொடுத்த மரியத்திடம் புன்னகைத்து விட்டுத் திரும்பியபோது, அந்த சிறு வீட்டின் அமைப்புகூட மிக அழகாய்! இந்த ஊரில் இருப்பவர்கள், நல்ல கலை ரசனை உள்ளவர்களோ என்றும்

தோன்றியது. வீட்டைச் சுற்றிக் கொண்டு உள்ளே சென்ற போது இரு நாய்களும் பின் தொடர்ந்தன.

குழந்தையைத் தன் மடியில் வைத்துக் கொண்டு நாற்காலியில் அமர்ந்தவுடன் ஜான்சன் அழகாய் கைதட்டிச் சிரித்தான். கோபுரத்துப் புறாக்களாய் அவள் மனதினுள்ளும் மகிழ்ச்சிச் சிறகடிப்பு.

''ஏய் குட்டிப்பையா... என்ன ரொம்ப குஷியா இருக்கியா? அம்மா கிட்டே போகணும்னு அழாம, இந்த ஆன்ட்டி கிட்ட கொஞ்ச நேரம் சமத்தா இருக்கியா? உனக்கு விளையாடக் குடுக்கக் கூட ஒண்ணுமே இல்லையே என்கிட்டே! என்ன பண்ணலாம்?'' என்று யோசிக்க அவன் அழகாக ''அம்மா'' என்று சிரித்தான்.

அவனுடன் நாசியுடன் தன் மூக்கை வைத்துச் செல்லமாக உரசி விட்டு நிமிர்ந்தால், கௌதம் ஒரு ஆச்சர்யப் பார்வையுடன் அவளையே ஊடுருவியபடி அறை வாசலில் நின்று கொண்டிருந்தான். சுமியின் மனம் படபடத்தது. 'அவன் ஒற்றைப் பார்வைக்கு இவ்வளவு சக்தியா? உச்சி முதல் பாதம் வரை நான் பலமிழந்து போகிறேனே' என்ற எண்ணம் தோன்றியது.

இந்த வீட்டில் தன்னால் இயல்பாகவே இருக்க முடியாதா என்று நினைக்கும் போதே, அதுவரை மலர்ந்து விரிந்திருந்த அவள் முகம் தொட்டாற் சிணுங்கியாய் சுருங்கியது.

அவளுடைய முகமாற்றத்தைக் கண்ட அவன் முகத்தில், ஏனோ கோப ரேகைகள் அதிகமாகவே! அவன் பார்வையில் கோபம், வருத்தம் மற்றும் இனம் காண முடியாத ஏதோ ஒன்றும் சேர்ந்து அவளைத் தாக்குவது போல் தோன்றியது. விருட்டென்று திரும்பிச் சென்றான் கௌதம்.



ஜான்சனைத் தூக்கிக் கொண்டு வெளியில் வந்தபோது, தோட்டத்தில் அஸ்தமனச் சூரியன் அழகை அள்ளித் தெளித்துக் கொண்டிருந்தான். சுமி மரியத்திடம் அவனை விட்டு விட்டு மீராம்மாவிடம் சென்றாள்.

அவர் அவளிடம் ''எனக்கு ஒரு உதவி செய்யணும் சுமிம்மா. பூஜை ரூமில கொஞ்சம் விளக்கேத்திடுறீங்களா?'' என்றார். ''சரிம்மா'' என்றவள் பூஜை அறைக்குள் நுழைந்த போது தான், அங்கு கௌதம் கண்களை மூடிக் கொண்டு, முகத்தில் ஏதோ ஒரு கோரிக்கையை தாங்கியபடி நிற்கக் கண்டாள்.

தான் வந்த சுவடு தெரியாமல் அவள் திரும்ப நினைக்கும் போதே அவன் கண்கள் தாமாகத் திறந்தன. சுமியைக் கண்டதும், எந்த உணர்ச்சிகளும் இல்லாத ஒரு பார்வையால் அவளைத் துளைத்து விட்டு வேகமாக வெளியே சென்றான். அவனைத் தொந்தரவு செய்து விட்டோமே என்ற ஒரு நெருடல் வந்தாலும் அதை ஒதுக்கி விட்டு எண்ணெய் ஊற்றி விளக்கேற்றினாள் சுமி.

கௌதம் என்ன வேண்டி இருப்பான் என்ற கேள்வி, நெஞ்சிற்குள் எண்ண மின்னலாய்! அன்று கடவுள் முன் கை கூப்பி நின்றபோது, ஏனோ எதுவுமே கேட்கத் தோன்றாமல் போனது. அன்றிரவு டிபன் சாப்பிடுவதற்கு கௌதம் வர வில்லை. மீராம்மாவிடம் கேட்டபோது, ''தம்பி டவுனுக்குப் போய் இருக்காங்க. அப்படியே சாப்பிட்டுட்டுத் தான் வருவேன்னு சொன்னாங்க'' என்றார்.

மனதில் உடனே ஒரு எண்ணம் வர, ரெக்கை கட்டிப் பறந்தது. அவசரமாகச் சாப்பிட்டவள், படுக்கப் போவதாகக் கூறிவிட்டு தன் அறைக்குச் சென்றாள். தன்னுடைய ஹேண்ட்

பேக்கை மட்டும் எடுத்துக் கொண்டு வெளியே வந்து, ஹாலில் யாருமில்லை என்று உறுதி செய்த பிறகு வாசலுக்குச் சென்றாள்.

வாசல் கதவருகில் டேவிட் நிற்பது தெரிந்தது. நல்லவேளை நாய்களுக்குச் சாப்பாட்டு நேரம் என்பதால் இரண்டையும் காணவில்லை.

இயல்பாகச் சென்றவள், "என்ன டேவிட்! நீங்க சாப்பிடப் போகலையா? குழந்தை அழறான் போலிருக்கு. மரியம் அதான் உங்களைக் கூப்பிட வரலை!" என்றாள். "இதோ போறேம்மா. நீங்க ஏன் இந்த நேரத்துல வெளிய வந்தீங்க?" என்று அவன் கேட்டதும், "சும்மா இங்க வாக்கிங் போலாம்னு வந்தேன். நீங்க போய் சாப்பிட்டுட்டு வாங்க" என்றபோது வெளியே கேட்டை பூட்டிவிட்டு சாவியைத் தான் அமர்ந்திருக்கும் அறையிலேயே மாட்டி விட்டுச் சென்றான்.

அவன் பார்வையிலிருந்து மறையும் வரை காத்திருந்தவள், பக்கத்தில் செடிகளுக்குள் மறைத்து வைத்திருந்த கைப்பையை எடுத்துக் கொண்டு அவசரமாய் கதவைத் திறந்து வெளியேறினாள்.

தூரத்தில் ஆங்காங்கே வெளிச்சம் தெரிந்தது. பௌர்ணமி நேரம் என்பதால், பாதை ஓரளவு வெளிச்சமாகவே இருந்தது. நேரம் ஆகிக் கொண்டிருப்பதை உணர்ந்து வேகமாக நடக்கத் தொடங்கினாள் சுமி.

சுற்றிலும் திட்டாய்த் தெரிந்த கருமை இருட்டு, மனதில் பயத்தை விளைவிப்பதாய்! தனிமையும், குளிர் காற்றின் சீறலும் சேர்ந்து தேகத்தை சிலிர்க்கச் செய்தது. வெகு நேரம் நடந்தாற் போல் தோன்றிய சில மணித் துளிகளின் முடிவில்



கீழே இருந்து திரும்பும் வளைவில், ஒரு காரின் ஹெட் லைட் வெளிச்சம் தெரிந்தது.

கௌதமாக இருக்குமோ என்று நரம்புகள் பயத்தாளமிட, உடனே பக்கத்தில் இருக்கும் தேயிலைச் செடிகளுக்குள் பதுங்கிக் கொண்டாள் சுமி.

அவனாக இருந்தால் கெஸ்ட் ஹவுசிற்குச் சென்று பார்த்து விட்டு திரும்பி வந்து தேடுவதற்குள் வெகு தூரம் போய்விட வேண்டும் என்று தோன்றும்போதே, காலில் ஏதோ ஊர்வது போன்ற உணர்வும், உடனே தாங்க முடியாத வலியும் ஏற்பட்டது. மூச்சடக்கிக் கொண்டு வலியையும் பொறுத்தபடி அமர்ந்திருந்தபோது தன் உயிரின் சுவாசம் ஊருக்கே கேட்கிறதோ என்பது போல், காற்றின் சுவாசச் சீறல் பெரிதாய்!

அந்தக் கார் அருகில் வந்து விட்டது. வாயைப் பொத்திக் கொண்டு முனகியும் தாங்க முடியாமல் "அம்மா" என்று சுமி அலற, அப்போது தான் அவள் இருந்த இடத்தை நெருங்கிய கார், அப்படியே சடன் பிரேக் போட்டு நின்றது. டிரைவர் சீட்டிலிருந்து விரைந்து இறங்கி வந்த ஒரு உருவம், அவளின் புடவை பளிச்சென்று தெரியவும் வேகமாய்ப் பிடித்து வெளியே இழுத்தது.

ஏற்கனவே பயந்து போய் வெளியே வந்த சுமி, அங்கு கடும் சீற்றத்துடன் நின்றிருந்த கௌதமைக் கண்டதும், இன்னும் முகம் வெளிறிப்போனாள். அவள் கையைப் பிடித்து இழுத்து வந்து கார் ஹெட் லைட் வெளிச்சத்தில் நிறுத்திப் பார்த்தால் சுமியின் காலில் பெரிய அட்டை ஒன்று ஏறி ரத்தம் உறிஞ்சிக் கொண்டிருந்தது.

அதைக் கண்டவுடன் பயத்துடன் வீறிட ஆரம்பித்தவளின் வாயை ஒற்றை விரலால் பொத்தியவன், "கொஞ்ச

நேரம் அமைதியா இருக்கியா... இதுக்குத்தான் தனியே வராதேன்னு சொன்னேன்'' என்று அழுத்தமான குரலில் கூறி விட்டு, காரிலிருந்து சிகரெட் லைட்டரை எடுத்து வந்தான்.

"கண்ணை மூடிக்க... சூடுபட்ட உடனே, அட்டை கீழே விழுந் திடும்'' என்று கூறிக்கொண்டே கணுக்காலில் அதன் மேல் சூடு காட்ட, சிறிது நேரம் கழித்து அட்டை சுருண்டு விழுந்தது. பாய்ந்து சென்று கௌதமைப் பிடித்துக் கொண்டாள் அவள்.

''தே... தேங்க்ஸ்'' என்று நடுங்கியபடி கூறவும், அவனுக்கு ஏனோ சிரிப்புதான் வந்தது. ''இப்படி அட்டை மாதிரிப் பிடிச்சிப்பேன்னா, இன்னொரு தடவை நீ தப்பிச் சாலும் எனக்கு சந்தோஷம்தான்'' என்று, அவன் ஏளனமாகக் கூறவும், அப்போதுதான், தான் நின்றிருந்த கோலமே சுமிக்கு உறைத்தது. உடனே துள்ளி விலகி நின்ற போதுதான், தான் இனி தப்பிச் செல்வதென்பது இயலாத காரியம் என்ற உண்மையும் விளங்கியது.

அவன் குரல் இடையிட்டது. ''எஸ்டேட்டுக்குள்ளே நுழைஞ்சு, பாதை மாறிட்டா, அப்புறம் விடியற வரைக்கும் சுத்திக்கிட்டே இருக்க வேண்டியதுதான். உனக்கு அதான் இஷ்டம்னா நீ போகலாம்... நான் கிளம்பணும்'' என்று எங்கோ பார்த்தபடி கூறவும், பேசாமல் சென்று காரில் ஏறிக் கொண்டாள் சுமி.

கார் வீட்டை நெருங்கும் போதே டேவிட் பதட்டத்துடன் அவளைத் தேடி வந்து கொண்டிருந்தான். கார் நின்றதும், உள்ளே எட்டிப் பார்த்து விட்டு, ''சின்னம்மா இருக்காங்களா அப்பாடா. அங்க எல்லோரும் கவலையோட காத்துட்டு இருக் காங்க'' என்று கூறி விட்டுக் கௌதமை குற்ற உணர்வுடன் ஏறிட்டான்.



அவன் கோபத்துடன், ''நான்தான், இவளைத் தனியா வெளியே விடாதே. வழி தெரியாது. இந்த இடம் புதுசுன்னு சொல்லி இருக்கேனில்ல. இதான் நீ வீட்டைப் பார்த்துக்கிற லட்சணமா?'' என்று சீறினான்.

''அம்மா தோட்டத்துல தான் நடக்கப் போறேன்னு சொன்னாங்க. நானும் கேட்டை பூட்டி சாவியை பத்திரமா வச்சிட்டுத்தாங்க போனேன். சாப்பிட்டுக்கிட்டு வந்து பார்த்தா கதவு திறந்திருக்கு. சின்னம்மாவையும் காணோம். அதான் அடிச்சி பெரண்டு வந்தேன்யா'' என்றவனின் குரலில் பயம் தெரிந்தது.

சுமி உடனே அவனைக் காப்பாற்றும் விதமாக ''அவரைத் திட்ட வேணாம். நான் தான் சும்மா வெளியில நடக்கலாம்னு வந்தேன். இப்படி ஆயிடுச்சு. ஏதாவது தண்டனை கொடுக் கணும்னா எனக்குக் கொடுங்க ப்ளீஸ்'' என்றாள். ஒரு கணம், அவளை ஆழமாய் ஊடுருவிய அவன் பார்வை ஆழிப் பேரலைகளை அவள் இதயத்தில் வீசியது.

உடனே டேவிட்டை நோக்கித் திரும்பிய கௌதமின் குரலில் பெரும் சினமிருந்தது. ''ம்... நீ முன்னாடி ஏறிக்க'' என்று பணித்தவன் வேகமாக காரை எடுத்தான். கெஸ்ட் ஹவுசின் வாசலிலேயே மீராம்மாவும், அவர் கணவர் தாமோதரனும் கையில் குழந்தையுடன் மரியமும் நிற்கக் கண்டதும் சுமிக்கு என்னவோ தான் பெரிய தவறைச் செய்தது போல் மெதுவாக இறங்கியபடி, எல்லாரையும் பார்த்து தர்ம சங்கடத்துடன் புன்னகைத்தாள்.

அதற்குள் பதட்டத்துடன் முன்னே வந்த அனைவரும் ''என்னம்மா இப்படி பயமுறுத்திட்டீங்க? இந்த இருட்டிலப் போய் வெளியே போலாமா? பூச்சி, பொட்டு ஏதும்

கடிச்சிருந்தா என்ன செய்யறது?'' என்று ஆளாளுக்கு கேட்டு, சுமி யோசிக்கும் போதே கௌதமின் குரல் இடையிட்டது.

''ம்... ஒரு அட்டை நல்லாக் கடிச்சி ரத்தத்தை உறிஞ்சிடுச்சு. உங்க சின்னம்மா கத்துன கத்துல, காப்பாத்தி அழைச்சிட்டு வந்தேன்.'' வார்த்தைகள் இகழ்ச்சியுடன் வந்தது. ''அய்யய்யோ! எங்கம்மா ரொம்ப வலிக்குமே. மருந்து ஏதாவது போடணும். என்னைப் பிடிச்சிட்டு மெதுவா நடந்து வாங்க'' கரிசனத்துடன் கூறிய மீராம்மா அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்.

அறைக்கு வந்ததும் கௌதம் அவர்களிடம், ''நான் பாத்துக்கறேன். நீங்கல்லாம் போய் படுங்க'' என்று கூறிவிட்டு வெளியே சென்றான்.

மீராம்மா கொடுத்த பாலைப் பருகி விட்டு, தன் காலையே பார்த்துக் கொண்டிருந்த சுமி, அறைக்கதவு திறக்கும் சப்தம் கேட்டு நிமிர்ந்தால், கௌதம் தான் உள்ளே வந்து கொண்டிருந்தான்.

அவள் மனம், புயலில் சிக்கிய சிறு காகிதமாய் படபடத்தது. ''இப்ப ஏன் இங்கே வந்தீங்க? வெளியே போங்க'' என்றபடியே வேகமாக எழுந்தவளை, கையைப் பிடித்து இழுத்து நாற்காலியில் அமர வைத்தவன், ''முதல்லே இந்த ஆன்ட்டிசெப்டிக் கிரீமைப் போட்டுக்க. கத்தறதெல்லாம் அப்புறமா செய்யலாம்'' என்றபோது, வார்த்தைகள் அடிக் குரலில் கடும் சீற்றத்துடன் வெளி வந்தன.

தன் மடத்தனத்தை நினைத்து வெட்கப்பட்டுக் கொண்டே, அவள் மருந்தைத் தடவியபோது அவன் கைப்பிடித்த இடமும், மருந்தினால் காலில் எழுந்த எரிச்சலும் ஒரே



மாதிரியாய் மருந்தைப் போட்டு விட்டு நிமிர்ந்தபோது அவளை பிடித்து எழுப்பி நிறுத்தியவனின் முகமும், கண் களும் இளகாத இரும்பின் தன்மையுடன் பளிச்சிட்டன.

கௌதம், கோபத்தின் உச்சக்கட்டத்தில் இருப்பதை அவனுடைய முக பாவமே சுமிக்கு உணர்த்தியது. சில்லென்ற ஒரு குளிர் உள்ளூரப் பரவி, மௌனச் சிறகாய் அவள் மனம் படபடத்தது.

அவன் குரல் உறுதியாக, ஆனால் தாழ்ந்த தொனியுடன் சீறியது. ''அடுத்த தடவை நீ தப்பிக்க நினைச்சா, உன் அண்ணன் என்ன ஆவான்னு என்னால உத்தரவாதம் குடுக்க முடியாது. அப்படி அவன் கிடைக்கலைன்னா, நான் இங்கே உன்னோட அறைக்கு வந்துடுவேன். அப்புறம் இன்னொருத் தனுக்கு மனைவியாகற தகுதியை இழந்து தான் நீ இந்த வீட்டை விட்டு வெளியே போக வேண்டி இருக்கும். நீங்கள்லாம், இப்ப ரொம்ப மாடர்னா ஆயிட்டீங்க. ஆனாலும் கடைசி வரைக்கும் உறுத்தும் இல்லையா? ஒரு வேளை நீ நல்லவளா இருந்தா'' என்று கடைசி வரியில் அழுத்தம் கொடுத்து முடித்தான் கௌதம்.

சுமிக்கு, ஆயிரம் தேனீக்கள் ஒன்றாய் சேர்ந்து கொட்டியது போல் இதயத்தில் வலித்தது. ஏளன ஊசிகளாய் உள்ளிறங்கிய அவன் வார்த்தைகள், அவளைப் பொறுமை இழக்கச் செய்தன.

''உங்களுக்கு வெக்கமா இல்லை? ஒரு சின்னப் பொண்ணைக் கொண்டு வந்து மிரட்டறதுக்கு? பணம் இருந்தா, என்ன வேணும்னாலும் செய்வீங்களா? இப்ப சொல்றேன். உங்களாலே என்னை ஒண்ணும் பண்ண முடியாது'' அவள் குரலில் தீ ஜ்வாலை தெரிந்தது.

"ஏய்..." என்று அருகில் வந்தவனின் கண்கள் ரத்தமெனச் சிவந்து முகத்தில் ரௌத்ரம் அதிகமாய் உதடுகள் வெளுக்க மிரட்சியுடன் அவள் பின் வாங்கியபோது அடுத்த நொடி என்ன நடந்திருக்குமோ, அவனுடைய 'செல்' ஒலிக்க ஆரம்பித்தது.

கோபத்தில் உறைந்து நின்றிருந்த அவன், இயல்புக்கு மாறச் சிறிது நேரம் பிடிக்கும் வரை விடாமல் ஒலித்துக் கொண்டே இருந்தது. அவளை வெறுப்புடன் உரசிய பார்வையுடன், எடுத்து நம்பரைப் பார்த்தவன் உடனே முகம் மாற "அம்மா என்ன விஷயம் சொல்லுங்க. நான் தோட்டத் துல இருந்தேன்" என்று கூறிக் கொண்டே வெளியே சென்றான்.

உடனே ஓடிப்போய் கதவைத் தாளிட்டு வந்து பதைப்புடன் அமர்ந்த சுமிக்கு, தன் சக்தி எங்கோ போய் விட்டது போல் மனம் தொய்ந்து போனது. அனலில் விழுந்த புழுவாய் மனம்!

"அண்ணே நீ எங்கு இருக்கிறாய்? நான் இங்கு இப்படியிருப்பது தெரியுமா உனக்கு?" மனம் விசிக்க ஆரம்பித்தது. கால் காயத்தை விட, மனதில் பட்ட காயம் ஆறாத ரணமாய் வலித்தது.



## 6

கருமுத்துக்களைத் தன்னுள் சுமந்த விழிச்சிப்பிக்குள்ளே, கண்ணீர் சரம் கோர்த்தது. மனதின் மைய்த்தில், பெரிதாய்



ஒரு சூன்ய சுழிப்பு! உறக்கம் வராதிருந்த அந்த நிமிடங் களில், மனதின் சோகங்களால் இமைகளே கனத்துப் போனதாய் தோன்றியது. வெகு நேரம் கழித்தே உறக்கம் அவளைத் தழுவியது.

காலையில், யாரோ கதவு தட்டும் ஒலியைக் கேட்டு தான் விழிப்பே வந்தது. மெதுவாக எழுந்து சென்று கதவைத் திறந்தால் மீராம்மா நின்றிருந்தார். அவளுடைய முகத்தைக் கண்டதும், "என்னம்மா! ராத்திரி சரியாத் தூங்கலையா?" என்றாள் கனிவுடன்.

"நீங்க வேறம்மா! இன்னிக்கு ரொம்ப நேரம் தூங்கிட் டேன்... சாரி! நீங்க ஏன் காபி எடுத்துட்டு வந்தீங்க? நானே வந்திருப்பேனே?" என்று கேட்டுக் கொண்டே போய் பல் துலக்கி விட்டு வந்தாள் சுமி.

தயாராகக் காபி டம்ளரை நீட்டிய மீராம்மா, "ஐயா தாம்மா, எழுப்பிக் குடுக்கச் சொன்னாங்க! நேத்து ராத்திரி ரொம்ப பயந்திட்டீங்களாம். அதனால ஓய்ஞ்சு போயிருப் பீங்கன்னு சொன்னாங்க!" என்று கூற சுமியின் நெற்றியில் சிந்தனைக் கோடுகள் விழுந்தன.

அவன் நல்லவனா... கெட்டவனா என்ற ஆராய்ச்சி தனக்கு எந்தப்பலனையும் அளிக்கப் போவதில்லை என்று புரியவும், அதை விலக்கி தோள்களைக் குலுக்கிக் கொண்டாள். இன்னும் மீதி நாட்கள் எப்படிப் போகப் போகிறதோ என்ற பயம் எழுந்தது.

"நீ உன் வார்த்தைகளால் பிழிந்து போட்ட என் மனதில் தான், எத்தனை சோகச் சுருக்கங்கள் என்று தெரியுமா உனக்கு" என்று அவனிடம் கேட்க வேண்டும் போலிருந்தது.

அவளது மன வேதனையைக் குறைத்தது, மீராம்மாவின் குரல்! ''குளிச்சிட்டு வாங்கம்மா... வந்து டிபன் சாப்பிடுங்க! எல்லாம் ரெடியா இருக்கு'' என்று கூறியவர் கால் காயத்தைப் பார்வையிட்டுச் சென்றார்.

குளித்து விட்டு வந்து, தனக்குப் பிடித்த இளநீல நிற சுடிதாரை அணிந்தபோது, ''ஒரு பெண், தனக்குப் பிடித்த வகையில் நன்றாக, உடையணிந்து கொண்டால், தன்னம்பிக்கை அதிகமாகும்'' என்று எதிலோ படித்தது நினைவுக்கு வந்தது. 'ஒருவரின் ஆன்மா, அவரது உடைகளே' என்று ஷேக்ஸ்பியரின் மொழிகளும் ஞாபகம் வந்தது.

கௌதமை எதிர்கொள்ள, இன்னும் மனதில் பெரும் பலம் தேவையாய்! சமையலறைக்குச் சென்று, மீராம்மாவுடன் சேர்ந்து தானும் சமைக்க ஆரம்பித்தாள் சுமி. அலைபாயும் மனதை, எதிலாவது செலுத்த வேண்டி இருந்தது. இடையில் கௌதம், அவளைக் காணாமல் கிச்சனுக்கு வந்து எட்டிப் பார்த்து விட்டு, முகத்தில் ஆச்சர்யம் மேலிடச் சென்றதை, இருவரும் கவனிக்கவில்லை.

எல்லாம் முடிந்து, சமையலறையிலிருந்து வெளியில் வரும் போதே, எதிரில் வந்த தாமோதரன், ''ஐயா உங்களைத் தேடினாங்கம்மா'' என்றார். அவன், ஏன் என்னைத் தேட வேண்டும் என்ற யோசனையுடன் ஹாலுக்கு வந்தபோது, அங்கு அமர்ந்திருந்த கௌதம், அவளைக் கண்டதும் எழுந்து வந்தான்.

அண்ணனையும், காவ்யாவையும் பற்றி ஏதாவது தகவல் வந்திருக்கிறதோ என்று உணர்ச்சியில் மனதில் முள் தைத்தது போல் இருந்தது. மெதுவாக நிமிர்ந்தபோது, ''காயம் பரவாயில்லையா? காலையில மறந்துடாமே கிரீம் போட்டியா?''



நேற்று ஒன்றுமே நடக்காதது போல், அவன் குரல் இயல்பாக இருந்தது.

'கால் காயம் ஆறிவிட்டது' ஆனால்? நீ நாவினால் சுட்ட காயம்தான், என் மனதில் ஆறாத ரணமாய் இருக்கிறது' என்ற பதில், நுனி நாக்கு வரை வந்தாலும், அதை அடக்கி மௌனமாகத் தலை அசைத்து விட்டுச் செல்லும் அவளைக் கூர்ந்து பார்த்தான் கௌதம்.

நேற்றிரவு பேசிய பேச்சுக்கு, அவன் தான் வெட்கப்பட வேண்டும். நான் ஏன் தடுமாறுகிறேன்? என்ற எண்ணம் தோன்றி, அவளைத் தலை நிமிர வைத்தது. அவளையே, இடுங்கிய விழிகளுடன் இமைக்காமல் நோக்கிக் கொண்டிருந்த அவனுடைய இதழ்க்கிடையில் மெல்லிய குறும்புச் சிரிப்பு ஒன்று புதிதாய்த் தடம் பதித்தது.

ஏனோ அறைக்குள் சென்றும், மனம் மிகவும் படபடப்பாக இருந்தது சுமிக்கு! அவன் அருகில் வந்தாலே ஏன் இவ்வளவு பதட்டப்படுகிறேன் என்று தனக்குள்ளேயே ஒரு கேள்வி எழுந்தது. அவன் நினைவில் தன் ஆழ் மன வெளியில், சில்லென்று ஒரு நதியின் தடம் புதிதாய்த் தெரிந்தது.

தன் மனதை அடக்கிப் புத்தகத்தில் செலுத்தியவள், மதியம் சாப்பிடும் அறைக்குச் சென்ற போது மீராம்மா காய்ச்சலில் அனத்திக் கொண்டு படுத்திருந்தார். ''என்னம்மா... என்னாச்சு?'' பதட்டத்துடன் கேட்ட சுமியிடம், ''ஒண்ணுமில்லம்மா தலைவலி, சாதாரண காய்ச்சல் தான்... வாங்க சாப்பாடு போடறேன்'' என்று எழுந்தார்.

அவரைக் கை அமர்த்தியவள் ''எல்லாம் நான் பாத்துக்கறேன். நீங்க பேசாமப் போய் படுங்க.'' என்று கூறிவிட்டுத்

தன்னிடமிருந்த மாத்திரையையும், தலைவலித் தைலத்தையும் கொடுத்தபோது, ''அய்யாவுக்கு சாப்பாடு பரிமாறணும்மா. நேரமானதே தெரியாமப் படுத்திருந்திருக்கேன் பாருங்க'' என்று பதறி எழுந்தார் அவர்.

''ரெஸ்ட் எடுங்க மீராம்மா...! நான் தான் பார்த்துக்கறேன்னு சொன்னேன் இல்லை'' என்று அவரை ஓய்வெடுக்கச் சொல்லி விட்டு, மேசையில் எல்லாவற்றையும் தயார் செய்தாள் சுமி. கௌதம் சாப்பிட வந்தபோது, அவனுக்குப் பரிமாறி விட்டு மௌனமாக நிற்க, ''நீ சாப்பிட்டியா?'' என்றான் அவன்.

அவள் இல்லை என்று தலையசைத்தவுடன், அவளுடைய கையைப் பிடித்து ஒருவித ஆளுமையுடன் அருகிலிருந்த நாற்காலியில் அமர வைத்த போது சுமி விதிர்த்துப் போய் விலகினாள். இன்னொரு தட்டில் எல்லாவற்றையும் பரிமாறி, அவள் முன் வைத்து ''சாப்பிடு!'' என்றான் ஆணையிடும் குரலில்.

அவன் தொட்ட இடம் தீயாய் தகிக்க, வேண்டா வெறுப்புடன் சாப்பிட ஆரம்பித்தாள் சுமி. ஓரக்கண்ணால் அவளை நோக்கிய கௌதமின் விழிகள் குறுகுறுத்ததை அவள் கவனிக்கவில்லை.

ஒரு வாய் எடுத்துச் சாப்பிட்டவன், உடனே நிறுத்தி, ''மீராம்மா, இன்னிக்கு சமையல் பிரமாதம்... எல்லாமே புது மாதிரியா நல்லாருக்கு'' என்று அவளைக் கூர்ந்து பார்த்துக் கொண்டு, உரத்தக் குரலில் கூறினான்.

தலை குனிந்து அமர்ந்திருந்த சுமியால், அவன் பார்வையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், இன்று தன் சமையலை மாற்றி நினைத்து மீராம்மாவைப்



பாராட்டியவுடன், அவளுக்குச் சிரிப்பு வந்து அதை அடக்கிப் புரையேறிவிட்டது.

''பாத்து... பாத்து! சாப்பாடு அருமையா இருந்தா இப்படியா உள்ளே தள்றது? உன்னை யார் நினைக்கிறா? நான் தான் பக்கத்துலயே இருக்கேன். என்னை மீறி யார்...?'' என்று யோசிப்பது போல் அவன் பேசவும், தண்ணீரைக் குடித்து நிமிர்ந்தவளுக்குத் தொண்டை அடைத்தது.

''உன்னை மீறி யாரும் எதுவும் செய்ய முடியாதா? என் அண்ணன் வருவார். அவருக்கு நீ பதில் சொல்லித் தான் ஆகணும்'' என்று கோபப்பார்வையுடன் அவள் நிமிர்ந்த போது, அவன் கண்கள் மட்டும் சிரித்துக் கொண்டு இருந்தன. சாப்பிட்டு முடித்து, உள்ளே சென்று மீராம்மாவிடம் சொல்லி விட்டு தன் அறைக்கு வந்தபோது, அந்தக் கண்களின் காந்தச் சிரிப்பே மீண்டும் அவள் நினைவுக்கு வந்தது.

இவன் ஏன், இது போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் எனக்கு அறிமுகமானான் என்று நினைக்கும் போதே, அவன் நல்லவனாகத்தான் இருக்க வேண்டும் என்றும் தோன்றியது. இதற்குக் காரணம், அவன் தன் தங்கை மீது கொண்ட பாசம் தானோ என்று, மனம் அவனுக்காக பரிந்து வந்தது. அவன் மீது கோபம் வரும் போதெல்லாம் ஏனோ தன் நேசம் இன்னும் அதிகமாவது புரியாத புதிராய் இருந்தது.

நினைவுகளின் சுழற்சியில் அப்படியே கண்ணயர்ந்தவளை, கதவு தட்டும் ஒலி இவ்வுலகிற்கு மீட்டு வந்தது. கதவைத் திறந்தால் கௌதம் செல் போனோடு நின்றிருந்தான். இறுகிய முகத்துடன், ''ரவி உன்னோட பேசணுமாம்!'' என்று ஒற்றை வரியில் முடித்து விட்டு வேகமாகத் தன் அறைக்குள் சென்றான். சில மணி நேரத்துக்கு முன்பிருந்த இதம் இப்போது தொலைந்து போயிருந்தது.

''ஹலோ ரவி! நான் சுமி... எப்படி இருக்கீங்க?'' என்று உற்சாகத்துடன் கேட்க, அந்தப் பக்கமிருந்து சிறிது நேரம் பதில் இல்லை. பிறகு, ''சுமி! உங்ககிட்டே ஒண்ணு சொல்லணும்... ஆனா எப்படி சொல்றதுன்னுதான்...'' என்று நிறுத்தினான்.

படபடவென்று பொரியும் ரவியா இப்படி என்ற யோசனையுடன் ''என்ன ரவி சொல்லுங்க'' எனும் போதே, ஒரு வேளை அண்ணனையும், காவ்யாவையும் கண்டு பிடித்திருப்பார்களோ என்று, மனதின் ஓரம் ஒரு பயம் வந்தது.

''சேரன் இங்கே பொள்ளாச்சியில ஹாஸ்பிடல்லே, இருக்கார்... ஒண்ணும் பயமில்லை சுமி! நாளைக்கு டிஸ்சார்ஜ் பண்ணிடுவாங்க. அண்ணன்கிட்டே எல்லாம் சொல்லி இருக்கேன். நீங்க உடனே அவரோட கிளம்பி வாங்க'' என்று வைத்தபோது, ''அப்ப காவ்யா?'' என்று சுமி கேட்டது, காற்றின் செவிகளுக்கு மட்டுமே கேட்டது.

ஒரு நிமிடம் கண் பார்வை மங்கி இருட்டிக் கொண்டு வர, இருவரும் போகும்போது விபத்து ஏதும் நடந்திருக்குமோ என்று பயமாக இருந்தது. கண்கள் கண்ணீர் அருவிகளாயின. மனதில் ஆயிரம் வண்டுகள் கேள்வியாய் குடைய, மெதுவாகச் சென்று கௌதமின் அறைக் கதவைத் தட்டினாள் சுமி! கதவு திறந்ததும் அழுகையாய் சிவந்திருந்த அவள் முகத்தைக் கண்டதும், அவன் முகம் பாறையாய் இறுகி உறைந்தது.

மெல்ல 'செல்'லை அவனிடம் கொடுத்ததும், ''ஒரு செட் ட்ரெஸ் மட்டும் எடுத்துக்க. இன்னும் பத்து நிமிஷத்துலே ரெடியாகணும்'' என்று உலர்ந்த குரலில் கூறிவிட்டு, அவள் முகம் பார்க்காமலே திரும்பிச் சென்றான்.



அவசரமாகத் தன் அறைக்குள் வந்து, தன் சூட்கேசையும், ஏர்பேகையும் எடுத்து வைத்து விட்டுத் தயாராகும் போது மீராம்மாவின் நினைவு வந்தது. இந்த வீட்டில் தான் சாய்ந்து கொள்ளத் தோள் கொடுக்கும் ஒரே ஜீவன் அவர்தான் என்று தோன்ற, உடனே அவரிடம் சென்றாள்.

காபி போட்டுக் கொண்டிருந்தவர், சுமியின் கலங்கிய முகத்தை கண்டதும், ஓடி வந்தார். ''என்னம்மா... ஏன் அழறீங்க? என்ன ஆச்சு?'' ஆதரவுடன் கண்களைத் துடைக்க, ''அண்ணன் ஹாஸ்பிடல்லே இருக்காராம். எனக்கு ரொம்ப பயமா இருக்கும்மா'' அரற்றினாள் சுமி.

''ஒண்ணும் இருக்காதும்மா... அழாதீங்க! நல்லவங்களை ஆண்டவன் என்னிக்குமே கை விடமாட்டார். நீங்க கவலைப்படாதீங்க. சாருக்கு எதுவும் ஆகாது'' என்று ஆறுதல் கூறி அவளை ஹாலுக்கு அழைத்துச் செல்லவும், கௌதம் தயாராகி வரவும் சரியாக இருந்தது.

அவள் அறையிலிருந்து, டிரைவர் எடுத்து வந்த பொருட்களைப் பார்த்து புருவங்களை நெறித்த கௌதம், மீராம்மாவிடம் நாளை மதியத்துக்குள்ள இன்னொரு அறையைத் தயார் செய்து வைக்கும்படிக் கூறிவிட்டு வெளியே சென்றான். எல்லோரிடமும் விடை பெற்றுக் காரில் ஏறிய போது, அவள் மனம் ஏனோ உடைந்து போனது.

கற்பாறையாய் இறுகிய முகத்துடனும், சுளித்த புருவத்துடனும், பார்வையில் ஒரு விதத் தீவிரத்துடனும் காரை ஓட்டினான் கௌதம். இருக்கையில் பின்புறம் சாய்ந்து, கண்களை ஒருவித சோர்வுடன் மூடிக் கொண்டாள் சுமி. இருவருக்கும் இடையே அங்கு மௌனமே, பேச்சு வார்த்தையாய்!

உதிர்கின்ற பூக்களாய், கண்ணீர் வழிந்து மடியில் சிதறியது. அப்போது, ரியர்வியூ மிரரை சரி செய்து நோக்கிய கௌதமின் பார்வை அவளிடம் கூர்மையாய் பதிய, அவள் கண்ணீரைக் கண்டதும், ஏனோ தன் மேலேயே கோபம் வந்தது அவனுக்கு. வாழ்க்கையில் தன் கணக்கு முதன் முதலாகத் தப்பாகிப் போனது ஏன் என்பது புரியாத புதிராய் தோன்றியது.

அவள் மனம், இயற்கை காட்சிகளில் பதிய மறுத்தது. சேரனைப் பற்றிய நினைவுகள் வயிற்றில் கலக்கமாய் பயப் பட்டாம்பூச்சிகளைப் பறக்க விடுவதாய் இருந்தது. கார் பொள்ளாச்சியை நெருங்கும்போதுதான், காவ்யாவைப் பற்றி எதுவுமே தெரியவில்லையே என்று தோன்ற, அதைக் கேட்கவும் பயமாக இருந்தது.

ஒரு பெரிய மருத்துவமனையின் முன் கார் நின்றபோது அவள் விழிகளில் கண்ணீர் வழிந்து விடுவேன் என்று அறிவித்தது. இருவரும் உள்ளே சென்று முதல் மாடியில் அறை எண்ணைப் பார்த்துக் கதவைத் தட்ட, ரவி தான் திறந்தான். உடனே சுமியின் பார்வை, அவனைத் தாண்டி பயத்துடன் உள்ளே சென்றது.

அங்கு, சேரன் தலையில் கட்டுடன் கண் மூடிப் படுத்திருந்தான். எப்படி உள்ளே சென்றாள் என்பதே தெரியாமல், சுமி வேகமாகச் சென்று அவன் பக்கத்தில் நின்று, "அண்ணா" என்று அழ ஆரம்பித்தாள். விரைந்து அவளருகில் வந்த கௌதம், அவளை சமாதானப்படுத்தும் விதமாக, மெதுவாகக் கையைப் பிடித்துத் தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டதை, அவள் உணரவில்லை.



தனக்கென்று இருந்த ஒரே துணையும், இந்த நிலையில் இருப்பது கண்டு அவள் மனம் நொறுங்கிப் போனது. எதையுமே உணர முடியாமல் மரத்துப் போயிருந்தாள் அவள்.



# 7

யுகங்களாகிய நிமிடங்கள் கழித்து, மெதுவாகக் கண் விழித்த சேரன், எதிரில் சுமியைக் கண்டவுடன் கலங்கிப் போனான். "சுமி நீ எப்படிடா இங்கே வந்தே?" என்றவனின் பார்வை உடனே கௌதமிடம் சென்றது. வேகமாக எழ முயற்சித்தவன், "ஸாரி உங்க எல்லோருக்குமே நான் ரொம்ப சிரமம் கொடுத்திட்டேன்" என்றான் தர்ம சங்கடத்துடன்.

உடனே அழ ஆரம்பித்த சுமியை, சமாதானப்படுத்திய ரவி, "சேரன் நீங்க பேசாம படுத்து ரெஸ்ட் எடுங்க. சுமி ப்ளீஸ்... சேரன் நல்லாயிடுவார்... பயப்படாதீங்க! நாளைக்கே டிஸ்சார்ஜ் பண்ணலாம்னு டாக்டர் சொல்லிட்டார்... அழாதீங்க" என்று எவ்வளவோ கூறியும், அவள் சமாதானமடைய வெகு நேரம் ஆனது.

சேரன் வேதனையுடன் அவளை ஆறுதல் படுத்த, முகத்தில் புரிந்து கொள்ள முடியாத பல உணர்ச்சிகளுடன் கௌதம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய மடக்கிய கைகள் இறுகி வெளுத்துப் போய் இருந்தன.

மெதுவாக நிமிர்ந்த சுமி, ரவியை நோக்கி, "காவ்யா எங்கே?" என்று கேட்க, அவன் முகம் நொடியில் மாறியது.

இருவரையும் மாறி மாறிப் பார்த்த சேரன் ஒன்றும் புரியாமல் நோக்கி ''காவ்யாவுக்கு என்ன?'' என்று கேட்க சுமிக்கு எல்லாமே புதிராய் தோன்றியது.

''அண்ணா! காவ்யா உங்களோடதானே...'' என்று முடிக்கும் முன்பே கௌதமின் குரல் அவளை இடைமறித்தது. ''காவ்யா நல்லாதான் இருக்கா. சேரன் ரெஸ்ட் எடுக்கட்டும். நான் அவரைப் பார்த்துக்கறேன். ரவி! நீ சம்யுக்தாவை அழைச்சிட்டுப் போய், கேன்டீன்ல சாப்பிட ஏதாவது வாங்கிக் குடு போ'' என்றான்.

மெதுவாகக் கண்ணைத் துடைத்து நிமிர்ந்து தனக்கு எதுவும் வேண்டாமென்று சுமி கூறிய போது, சேரனும் அவளைப் போய் வரும்படிச் சொல்லவும், அவள் ஒரு முடிவுடன் எழுந்து அவனைப் பின் தொடர்ந்தாள். அவனிடம் கேட்க, மனதில் ஆயிரம் கேள்விகள் இருந்தன.

ரவி கேன்டீனில் அவளை உட்கார வைத்து விட்டு, தானே சென்று இருவருக்கும் மசால் தோசை வாங்கி வந்தான். உடனே, ''எனக்கு காபி மட்டும் போதும் ரவி! இதெல்லாம் சாப்பிட முடியாது'' என்று அவள் மறுக்க, ''சுமி இப்பப் பசிக்காத மாதிரி தான் தோணும், ஆனா உடம்புல தெம்பு வேணுமே சேரனைக் கவனிச்சுக்கறதுக்கு... ப்ளீஸ் சாப் பிடுங்க'' என்றான்.

''சரி.. நான் சாப்பிடறேன். அதுக்கு முன்னாலே எனக்கு சில விஷயங்கள் தெரியணும். அண்ணனுக்கு எதனால இப் படி ஆச்சு? காவ்யா எங்க இருக்காங்க?'' என்று கேள்வி களை அடுக்க, அவன் ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தான்.

''நான் எல்லாமே சொல்றேன் சுமி. ஆனா நீங்க சாப்பிட்டா தான் சொல்வேன்'' பிடிவாதமாகக் கூற, இவனும் ஏன்



தன்னைப் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறான் என்ற ஆயாச மேற்பட்டது அவளுக்கு! ஒரு பெருமூச்சு, வேதனை யுடன் இதய ஆழத்திலிருந்து வெளிவந்தது.

வேகமாகச் சாப்பிட முயன்றும் முடியாமல் மெதுவாகவே முடித்தவள், ''இப்பவாவது சொல்வீங்களா?'' என்று கேட்க தொண்டையைச் செறுமிக் கொண்டு ஆரம்பித்தான் ரவி.

''முதல்லே உங்ககிட்டே நான் ஸாரி கேட்டுக்கறேன் சுமி! அப்புறம் நீங்க கௌதம் அண்ணாவையும் தப்பா நினைச் சிக்கக் கூடாது. எங்களைப் பொறுத்தவரைக்கும் நாங்க ஊகிச்ச வரைக்கும் நடந்ததெல்லாம் உங்களுக்குத் தெரியும்னு அண்ணா சொன்னாங்க'' என்றவன், நடந்த விஷயங்களைக் கூற ஆரம்பித்தான்.

''சுமி! உங்களுக்கே தெரியும். காவ்யா டூருக்குப் போறேன்னு சொல்லிட்டு, உங்க அண்ணனோடப் போறதா லெட்டர் எழுதி வச்சிட்டுப் போயிட்டா. நான் தான் அதைப் பார்த்து எடுத்துட்டுப் போய் அண்ணா கிட்டே கொடுத்தேன். வீட்டில யாருக்குமே தெரியாது. டிரைவர்கிட்டே கேட்டா அவளோட ப்ரண்ட் வீட்ல காவ்யாவை விட்டுட்டதா சொன் னார். நான் அந்த ப்ரெண்ட் வீட்டுக்குப் போய் விசாரிச் சப்போ, அவங்க எல்லாம் கிளம்பிட்டதாகவும், டூருக்கு காவ்யா வரலைன்னு சொல்லிட்டுப் போயிட்டதாகவும் அவங்க அம்மா சொன்னாங்க'' ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினான்.

''ப்ளீஸ் ரவி சொல்லுங்க'' என்றாள் சுமி கண்ணீர்க் குரலில். ரவி பேசத் தொடங்கினான்.

''உங்க அண்ணனோட அவ போயிட்டதா தான் நானும், அண்ணாவும் நினைச்சோம். அதுக்கேத்தாப்புல, சேரனையும்

அன்னிக்கு சாயந்திரத்திலே இருந்து காணோம். ஒரு தகவலும் இல்லை. உங்க வீட்டை வாட்ச் பண்ணினப்ப சேரன் வரலைன்னும் தெரிஞ்சுது. அதான் ஆட்களை விட்டு ரெண்டு பேரையும் தேடச் சொன்னோம்'' நிறுத்தியவன், அவளைத் தர்ம சங்கடமாய் பார்த்து விட்டுத் தொடர்ந்தான்.

''அண்ணா, காவ்யாவுக்குப் பதிலா உங்களை அடைச்சு வச்சது தப்புதான். ஆனா, அவர் இருந்த நிலைமை அப்படி. என்னை விட காவ்யா மேல அவருக்கு எப்பவுமே பிரியம் அதிகம். உங்க விஷயம் இன்னிக்குத்தான் எனக்குத் தெரியும். நீங்க லீவுக்கு வந்திருக்கிறதா தான் நான்கூட நினைச்சேன். சாரி... சுமி!''

அவள் ஒரு பெருமூச்சுடன், ''அதெல்லாம் முடிஞ்சு போச்சு ரவி. அப்புறம் நடந்தது என்னன்னு சொல்லுங்க. இன்னும் எனக்கு ஒண்ணுமே புரியலை'' என்றாள் பதட்டத்துடன்.

ரவி மெதுவாக, ''காவ்யா கிளம்பி நேரா போய், சேரனைப் பாத்து எங்காவது போயிடலாம்னு கூப்பிட்டு இருந்திருக்கா, சேரன் அதை மறுத்து, அதெல்லாம் தப்புன்னு அவளுக்குப் புரிய வச்சு, அவளைக் கூப்பிட்டுப் போறதுக்குள்ளே அவ பிரண்ட்ஸ் எல்லாம் டெம்போ டிராவலர்லக் கிளம்பிப் போயிட்டாங்க போலிருக்கு.''

''அப்புறம், தன் பிரண்டுக்கு காவ்யா, 'செல்'லில் கேட்டப்பதான் அவங்க வழியில நிறுத்தி பழனியில் ஒரு ஹோட்டல்ல சாப்பிட்டுட்டு இருந்தது தெரிஞ்சிருக்கு. உடனே ஒரு டாக்ஸியில் அவளை அழைச்சிட்டுப் போய், பழனியில அவங்களோட அனுப்பிட்டு, சேரன் திரும்பி வரப்ப தான் இந்த ஆக்சிடெண்ட் நடந்திருக்கு. லாரி



மோதினதுல, கார் நொறுங்கி டிரைவர் அந்த இடத்துலேயே இறந்துட்டான் போலிருக்கு. பக்கத்து புதர்ல்ல தூக்கி எறியப்பட்டுக் கிடந்த சேரனை யாரோ இங்கேயே ஜி.ஹெச்லே அட்மிட் பண்ணி இருக்காங்க. அவருக்கு தலையில அடிபட்டு நினைவில்லாம போனதால யாருன்னே அவங்களுக்குத் தெரியலைல. அவரோடு எந்தப் பொருட்களுமே அவர்கிட்ட இல்லை... அவருக்கே நினைவு வந்து, எங்க ஆபீசுக்கு நர்சை விட்டு போன் பண்ணினப்ப தான் எனக்குத் தெரிஞ்சது'' நிறுத்தி விட்டுத் தண்ணீரை பருகிய பிறகு தொடர்ந்தான்.

''சேரன் காவ்யாகிட்டே, ''நீ வீட்டுக்கு எதுவும் போன் பண்ண வேண்டாம். நானே கௌதம் சார் கிட்டே எல்லா விஷயமும் பேசி சமாதானப்படுத்தறேன்'' அப்படீன்னு சொன்னதால, இந்த காவ்யா கழுதையும் ஒரு போன் கூட பண்ணலை, செல்லையும் ஆப் பண்ணி இருந்திருக்கா. ம்... இதுல அம்மா வேற! காவ்யா கிட்டே இருந்து தகவலே இல்லையேன்னு என்னைப் போட்டுப் படுத்தவும், அவ தினம் என் 'செல்'லுக்குப் பேசறதா ஒரு பொய் சொல்லி சமாளிச்சிட்டேன்'' ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினான் ரவி.

பிறகு, ''இந்தக் காவ்யாவாலே, எவ்வளவு குழப்பம் பாருங்க. எனக்கும், அண்ணனுக்கும் சேரனைப் பற்றி நல்லாத் தெரிஞ்சிருந்தாலும், இந்த சூழ்நிலையில நாங்க என்ன பண்றது சொல்லுங்க... ஆனா இன்னிக்கு மத்தியானம், சேரனுக்கு அடிபட்டிருக்கிறதா எங்க ஆபீசுக்குப் போன் வந்து, நான் கிளம்பிப் போய்ப் பார்த்தப்ப தான் எல்லா உண்மையும் தெரிஞ்சுது. சேரன் எல்லா விஷயமும் சொன்னார். தன்னைத் தப்பா நினைக்க வேண்டாம்னு கேட்டுக்கிட்டார். அவரை இந்த ஹாஸ்பிடலுக்கு மாத்திட்டு,

காவ்யாவோட பிரண்ட்ஸ் செல்லில் அவளைக் கூப்பிட்டு நல்லா திட்டிட்டு அப்புறம் தான் அண்ணனுக்குச் சொன்னேன்'' என்று முடித்தான்.

எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த சுமி, கோபமும் ஏளனமும் கலந்த பார்வையுடன் ரவியை நோக்கி, ''இதத்தான், நான் அத்தனை தடவை உங்க அண்ணன் கிட்ட சொன்னேன். என் அண்ணா இப்படிப் பட்டவர் இல்லைன்னு, ஆயிரம் தடவை சொல்லி இருப்பேன். சே!'' அவளுடைய குரலில் பெரும் சீற்றம் தெரிவதாய்!

கண்களில் குற்றவுணர்வுடன் நிமிர்ந்த ரவி, ''நீங்க என்ன தண்டனை கொடுத்தாலும், நாங்க ஏத்துக்கறோம் சுமி! ஆனா, சேரன் கிட்டே மட்டும் இதை எல்லாம் தயவு செய்து சொல்ல வேண்டாம். ம்... ப்ளீஸ் சுமி! ஸாரி!'' என்றான்.

''ஒரு 'ஸாரி'யிலே, எல்லாத் தப்பும் மன்னிக்கப்படும்னு உங்க அண்ணா எதிர்பார்க்கிறாரா ரவி? எனக்கு வெறுப்பா இருக்கு!''

''சுமி..! அண்ணா இவ்வளவு பதட்டப்பட்டு, வருத்தப் பட்டு நான் பார்த்ததே இல்லை. அவருக்கு லைஃப்லே, எனக்குத் தெரிஞ்சு இதுவரைக்கும் தோல்வியே இருந்த தில்லை. பிசினஸ்லேயும் சரி, வீட்டிலேயும் சரி! அவர் முடிவெடுத்தா சரியாத்தான் இருக்கும்.

''ஒருத்தரைப் பத்தி, சரியா கணிக்கனும்னா அவர்கிட்ட தான் எல்லாருமே கேட்போம். முதல் தடவையா தவறு நடந்திருக்கு. அண்ணனோட சார்பில, எல்லாத்துக்கும் நான் உங்ககிட்ட மன்னிப்புக் கேட்டுக்கறேன்.'' உணர்ச்சிகள் நிறைந்திருந்தது, அவன் குரலில்!



கோபம் தலைக்கேறியது சுமிக்கு! ''அதென்ன ரவி? பணம் இருந்தா என்ன வேணா செய்வீங்களா? இன்னொரு வீட்டுப் பொண்ணை அதுவும் அண்ணனோட காதலைப் பத்தி சமாதானமா பேச வந்தவளை, அடைச்சி வச்சி அளவுக் கதிகமாகப் பேசி, அவளை வாட்டி எடுத்து, எல்லாம் பணம் இருக்கிற திமிர்தானே...?'' என்று கேட்டு விட்டு, வேகமாக எழுந்து நடக்க ஆரம்பித்தாள் சுமி.

பின் தொடர்ந்து வந்த ரவி, ''ப்ளீஸ் சுமி! அண்ணாகிட்டே உங்க கோபத்தை தயவு செஞ்சு காட்டாதீங்க. சரியா விசாரிக்காம முடிவு செஞ்சது நான்தான். எனக்கு என்ன தண்டனை வேணும்னாலும் குடுங்க.'' என்று கூறிக்கொண்டே வந்தபோது, சுமி அவனை ஏறிட்டும் பார்க்கவில்லை.

வேகமாக அறைக்குள் சென்றவள், சேரனிடம் ''அண்ணா? நாளைக்கு டிஸ்சார்ஜ் செஞ்ச உடனே, ஒரு கார் ஏற்பாடு பண்ணிட்டு, கும்பகோணத்துக்கு அத்தை வீட்டுக்குப் போயிடலாம். மத்ததெல்லாம் அப்புறம் பாத்துக்கலாம்'' என்று கோபமாகக் கூறவும், கௌதமின் முகம் இறுகி விட, உடனே வெளியே சென்றான் அவன்.

அவளை இடைமறித்த ரவி, ''சேரனால ரொம்ப தூரம் ட்ராவல் பண்ண முடியாது சுமி. இங்க பொள்ளாச்சியில நம்ம கெஸ்ட் ஹவுசிலயே தங்க வைக்கலாம்னு நான் நினைக்கிறேன்! ஒரு பத்து நாள் போகட்டும். அப்புறமா முடிவு பண்ணலாம். அவசரப்படாதீங்க! நீங்க ரெண்டு பேரும் பேசிட்டு இருங்க. நான் இப்ப வரேன்'' என்றவன், சேரனிடம் எதுவும் சொல்ல வேண்டாம் என்பது போல் சுமியிடம் கண் ஜாடை காட்டி விட்டு வெளியே சென்றான்.

மெதுவாக அண்ணனிடம் திரும்பிய சுமி, ''என்னண்ணா? ரொம்ப வலிக்குதா? இத்தனை நாளா, துணைக்குக் கூட

யாரும் இல்லாம பாவம் தனியா எவ்வளவு கஷ்டப்பட்டீங்களோ?'' கண்ணீர் மல்க, அவன் கையைப் பிடித்து மெதுவாகத் தடவிக் கொடுத்தாள்.

சேரன் அவளை சமாதானப்படுத்தும் விதமாக, ''ஒண்ணுமில்லைம்மா! நாளைக்குத்தான் வீட்டுக்குப் போகப் போறோமே... ரவி சார் சொன்ன மாதிரி, பொள்ளாச்சியிலேயே பத்து நாள் தங்கிட்டு அப்புறமா வால்பாறையில நம்ம வீட்டுக்குப் போகலாம் சுமி!'' என்றபோது அவளால் மறுத்து ஒன்றும் கூற முடியவில்லை.

சேரன் யோசனையாக, ''நீ இத்தனை நாள் தனியாவா இருந்தே? ஜோதி உனக்குத் துணையா இருந்தாங்களா?'' என்று கேள்விகளை அடுக்க, அப்போது தான் கதவைத் திறந்து ரவியுடன் உள்ளே வந்த கௌதம், ''சேரன்! சம்யுக்தா நம்ம கெஸ்ட் ஹவுசில தான், மீராம்மா துணையோடத் தங்கி இருந்தாங்க. நாளைக்கே, நீங்க ரெண்டு பேரும் இங்க இருக்கற நம்ம கெஸ்ட் ஹவுசுக்கு போயிடலாம். மீராம்மாவையும் அனுப்பி வைக்கிறேன். ரவி உங்க கூடவே இருப்பான். தையல் பிரிச்சப்புறம் வால்பாறைக்கு வரலாம். அப்ப நான் கிளம்பறேன். டேக் கேர்!'' என்று கூறிவிட்டு சுமியிடம் திரும்பினான்.

ஒரு கணம், அந்த விழிகள் அவனுடைய மனதைப் பிரதிபலிப்பதாய் தோன்றியது. மறு கணம், பார்வை எந்த உணர்ச்சியுமின்றி சுமியை ஏறிட்டது. ''ஒரு நிமிஷம்!'' என்று தன்னுடன் வரும்படி அவளை அழைத்து விட்டு, வெளியே சென்றான்.

அறைக்கதவை மூடியவன், அவளிடம் திரும்பாமலே, எதிரிலிருந்த சுவரைப் பார்த்தபடி, ''ஸாரி! என் லைஃப்லே



முதலும், கடைசியுமா ஒரு தவறு நடந்துருக்கு. ப்ச்... அதைச் சரி செய்ய வேண்டியது என்னோட கடமை. நிச்சயமா செய்வேன்!'' என்று கூறி, ஒரு வேதனைப் பார்வையுடன் வேகமாகத் திரும்பிச் சென்ற போது, சுமிக்கு, ''இவன் எதிலும் தோற்காதவன் மிகவும் கம்பீரமானவன்.. மனக் குமுறலை முகத்தில் காட்டா விட்டாலும், முதல் தோல்வி இவனை மிகவும் பாதித்திருக்கிறது'' என்ற எண்ணம் தோன்றி, மனதை ஏதோ செய்தது.

ஆனால், அவனுடைய கர்வமும் திமிருமே, தன் நெஞ்சைக் களவு செய்து, கவர்ந்து சென்றதோ என்றும் தோன்றியது.

ஒரு பெருமூச்சுடன் கதவைத் திறந்து அறைக்குள் சென்ற சுமியை, ரவியின் பார்வை யோசனையாக நோக்கியது. முயன்று வரவழைத்த புன்னகையுடன் சேரனிடம் சென்றவள், ''அண்ணா நீங்க தான் முடிவு பண்ணனும், நாளைக்கு இங்கே கெஸ்ட் ஹவுசுக்குப் போயிடலாமா?'' என்று கேட்டாள்.

அவன், ''கௌதம் சார் சொல்றபடியே செய்யலாம் சுமிம்மா! ஒரு வாரம் கழிச்சுப் பாத்துக்கலாம்'' என்றபோது, தலையசைத்த சுமி ரவியிடம் திரும்பினாள்.

''இனிமே நான் அண்ணனைக் கவனிச்சிப்பேன். ஏதும் வேலை இருக்குமே. நீங்க கிளம்புங்க ரவி!'' என்றதும், அவன் மெதுவாக எழுந்தான். ''சேரன்! நான் காலையில வரேன். சுமிக்கு டிபன் கேன்டீன்ல சொல்லிட்டுப் போறேன்'' என்று வெளியே வந்தான்.

அவன் தயங்குவதைப் பார்த்தால், அவளிடம் ஏதோ பேச நினைப்பது போல் தோன்றவும் பின் தொடர்ந்து

வந்தவள், ''என்ன ரவி... என் கிட்ட ஏதும் கேக்கணுமா?'' என்றாள்.

''அண்ணன் சொன்ன மாதிரி நீங்க ரொம்ப புத்திசாலி தான்! தேங்க்ஸ் சுமி! அவர் கிட்டே எதுவும் கோபமா பேசாம இருந்ததுக்கு...!'' என்றவுடன், கோபத்துடன் அலட்சியமாகத் தோளைக் குலுக்கியபடி அறைக்குள் வந்த போதும், சுமிக்கு இவனும் புத்திசாலிதான் என்று தோன்றியது.

சேரனுக்கு டிரிப்ஸ் ஏறிக் கொண்டிருந்ததால், சாப்பாடு தேவை இருக்கவில்லை. சுமி, அவனுக்குத் தேவையானவற்றை கவனித்து விட்டு, அங்கேயே ஒரு பக்கம் போடப்பட்டிருந்த திவானில் படுத்துக் கொண்டாள். பாதி இரவில், நர்ஸ் வந்து டிரிப்ஸை நிறுத்தி விட்டுச் சென்ற பிறகு தான் அவளுக்கு உறக்கமே வந்தது.

திடீரென்று ஏதோ சப்தம் கேட்டு விழித்துப் பார்த்தால், யாரோ ஒரு பெண் சேரனின் கைகளைப் பிடித்து அழுது கொண்டிருந்தாள். சுமிக்கு, முதலில் தூக்கக் கலக்கத்தில் ஒன்றுமே புரியவில்லை. அவசரமாக எழுந்து சென்றபோது தான், அது காவ்யா என்று தெரிந்தது.



## 8

**சு**மி, புகைப்படத்தில் அவளைப் பார்த்திருந்ததால் உடனே காவ்யா என்று புரிந்து கொண்டாள். அவளைக் கண்டதுமே அந்தப் பெண், ஆச்சரியத்துடன் நோக்கி ''சுமியா?'' என்று கேட்க, சேரனும், 'ஆமாம்' என்று தலையாட்டினான்.



பிறகு தர்மசங்கடத்துடன் நிமிர்ந்து அவளைப் பார்த்து, ''சுமி! இது காவ்யா'' என்றான். மெதுவாக, ''ஹலோ காவ்யா... எப்படி இருக்கீங்க? நான் வேணும்னா வெளியே இருக்கேண்ணா. நீங்க ரெண்டு பேரும் பேசிட்டிருங்க'' என்று திரும்பியபோது, காவ்யா அவள் கையைப் பற்றித் தடுத்தாள்.

''ப்ளீஸ் சுமி! நீங்களும் இருக்கலாம். எனக்கும் கொஞ்சம் தைரியமா இருக்கும்'' என்றபோது, பாசாங்கில்லாத அந்த பேச்சில் ஏனோ சுமிக்கு முதல் பார்வையிலேயே அவளை மிகவும் பிடித்துப் போனது.

''காவ்யா! நான் போய் குளிச்சிட்டு வரேன். நீங்க பேசிட்டிருங்க. ஆனால் பத்து நிமிஷத்துல வந்துடுவேன்'' என்று கூறி விட்டு குளியலறைக்குள் சென்றாள். மெதுவாகக் குளித்தவள், மெல்லத் தலையை நீட்டி ''வரலாமா?'' என்று கேட்க, ''ஏய் போதும் வா சுமி'' என்று சேரன் கூறவும் முகத்தில் குறும்புடன் வெளியே வந்தாள்.

பின்புறம் விரிந்திருந்த அவளுடைய கூந்தலை ரசித்த காவ்யா, ''சுமி... நீங்க போட்டோவை விட நேரில் ரொம்ப அழகு... முடி எவ்வளவு நீளமா பட்டாட்டம் என்ன அழகா இருக்கு!'' என்றாள் வியப்புடன்.

காவ்யாவும் வெள்ளையாக, நல்ல லட்சணமாக இருந்தாள். அவள் சேரனுக்கு மிகவும் பொருத்தமாக இருப்பாளென்று சுமிக்குத் தோன்றியது. பணத்தின் செழிப்பு அவள் உடையில் மட்டுமே தெரிந்தது. மனம் அமைதியுற, ''நீங்க மட்டும் என்னவாம்... ரொம்ப அழகா இருக்கீங்க!'' என்றாள் சுமி.

ஆனால் அவளுடைய கண்கள் கலங்கக் கண்டதும், ''அழகா இருக்கறதா சொன்னா, உடனே அழற பெண்ணை இப்பதான் முதல் தடவையா பாக்கறேன்'' என்று கிண்டல் செய்து விட்டு, அவளை ஆதரவாகப் பிடித்துக் கொண் டவள், ''அழக்கூடாது காவ்யா! தைரியமா இருந்து, உங்க காதல்லே நீங்க ஜெயிக்கணும்'' என்றாள்.

''கௌதம் அண்ணாவ நினைச்சாதான் எனக்கு பயமா இருக்கு. அவர் ஒத்துக்கிட்டா, அப்பாவைக்கூட கன்வின்ஸ் பண்ணிடலாம். எல்லாரும் சரின்னுடுவாங்க'' என்று கூறியவளை யோசனையுடன் பார்த்தாள் சுமி.

''அதப்பத்தி எல்லாம், இப்ப கவலைப்படக்கூடாது. எல்லாம் நல்லபடியா நடக்கும். காலையில் டிஸ்சார்ஜ் பண்ணிடுவாங்கன்னு சொன்னாங்க. நான் எல்லாத்தையும் ரெடியா எடுத்து வச்சிட்டேன். உங்களுக்கு டயர்டா இருந்தா கொஞ்ச நேரம் படுத்துக்குங்க காவ்யா! ஆமாம்... நீங்க இங்க வந்தது ரவிக்குத் தெரியுமா?''

''தெரியாது சுமி! எனக்குப் பயமா இருக்கு. சரி! நான் போய் குளிச்சிட்டு வந்திடறேன்.'' என்று அவள் செல்ல, சுமி கேன்டீனிற்குச் சென்று, டிபன் ஆர்டர் செய்து விட்டு வந்த போதும், ரவி வந்திருக்கவில்லை.

சேரன், தன்னையே பார்ப்பதை உணர்ந்து மெதுவாக அவன் அருகில் சென்றவள், ''காவ்யா ரொம்ப நல்லவங் கண்ணா. எனக்கு அவங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு'' என்றதுமே, ''எனக்கும் அந்த பயம்தான் சுமி! உனக்குக் காவ்யாவைப் பிடிக்கணுமேன்னுதான் கவலைப்பட்டுட்டு இருந்தேன்'' என்ற அவனின் கரிசனம், கௌதமை நினைவு படுத்துவதாய்! அவனும் இது போல்தானே, தன் தங்கைக்காக யோசித்திருப்பான் என்று தோன்றியது.



சேரனின் தலையை செல்லமாகக் கலைத்து விட்டு, அவனைப் பார்த்து மென்மையாய்ப் புன்னகைத்தாள். அப்போது கதவைத் திறந்து உள்ளே வந்த ரவி, ''ஆஹா... பாசமலர் சிவாஜி, சாவித்திரி தோத்தாங்க போங்க'' என்று கூறிச் சிரிக்கவும், வெட்கத்துடன் திரும்பிய சுமி, ''இதே மாதிரி இன்னொரு சீன் இப்ப உடனே நடக்கணும்னு, நாங்க ஆசைப்படறோம் ரவி! நடக்குமா?'' என்றாள் குறும்புடன்.

அவன் ஒன்றும் புரியாமல் விழித்த அதே நேரத்தில் குளித்து விட்டு வெளியே வந்த காவ்யா, அண்ணனைப் பார்த்ததும் மிரட்சியுடன் நின்றாள். ''ஏய்... காவ்யா! நீ எங்கே இங்க வந்தே?'' வேகமாக அவளை நோக்கிச் சென்றான்.

''ரவி...! இப்பதானே சொன்னேன் பாசமலர் பத்தி. அதுக்குள்ளே இப்படிக் கோபப்படுறீங்களே! காவ்யா காலையிலதான் வந்தாங்க! அண்ணன் அடிபட்டு இருக் கிறப்ப எப்படி அவங்களாலே அங்கே நிம்மதியா இருக்க முடியும்'' இடைமறித்தது சுமியின் குரல்.

''ஓஹோ எல்லோரும் எலக்ஷன் கூட்டணி மாதிரி ஒண்ணா சேந்துட்டீங்களாக்கும். நான் ஒரு மடையன். இந்தப் பொண்ணுங்களே பொதுவா கல்யாணம் ஆன வுடனே கட்சி மாறிடுவாங்க. இது காதல் வேற... இப்பவே மாறியாச்சு அவ்வளவுதான்'' என்று வருத்தத்துடன் முடிக் கவும், ''அண்ணா'' என்று ஓடிச் சென்று அவன் தோளில் முகம் புதைத்து அழ ஆரம்பித்தாள் காவ்யா.

அவளை ஆதரவாகத் தட்டிக் கொடுத்த ரவி, ''சரி... அழாதே. நான் கௌதம் அண்ணாகிட்டே சொல்லி, அப்பா, பெரியப்பா சம்மதத்தைக் கேக்கச் சொல்றேன்'' என்று

சமாதானப்படுத்திய போது கதவு திறந்து நர்சுடன் டாக்டர் உள்ளே வந்தார்.

சேரனின் தலைக்கட்டைப் பிரித்து, நெற்றியில் சிறிய பிளாஸ்டர் மட்டும் ஒட்டி விட்டு, ரவியிடம் திரும்பியவர், "ஒண்ணும் ப்ராப்ளம் இல்லை. பில் பணத்தைக் கட்டிட்டு நீங்க கிளம்பலாம். ஒரு வாரம் கழிச்சி தையல் பிரிக்கணும். அது வரைக்கும் தலை குளிக்க வேண்டாம். டேக் கேர் மிஸ்டர் சேரன்" என்று புன்னகைத்து விட்டு வெளியே சென்றார்.

அறைக்கே டிபன் வந்து விட சாப்பிட்டு முடித்த சிறிது நேரத்தில் பணம் கட்டி முடித்து ரவியும் வரவும் அனை வரும் காரில் கிளம்பி கெஸ்ட் ஹவுசுக்கு வந்தனர். மீராம்மாவும், தாமோதரனும் அவர்களுக்கென அறைகளைத் தயார் செய்து விட்டுக் காத்திருந்தனர்.

சேரனை கீழ் அறையில் தங்க வைத்து ஓய்வெடுக்கும்படி கூறிவிட்டு வந்தபோது, மீராம்மா எல்லோருக்கும் ஜூஸ் போட்டு எடுத்து வந்து தந்தார். "சுமிம்மா! ஒரே நாளிலே ஓய்ஞ்சு போயிட்டீங்களே...?" என்று அவர் ஆதங்கத்துடன் கேட்டபோது, "நான் நல்லாத்தாம்மா இருக்கேன். அண்ணா வுக்கு சரியாச்சே அது போதும்" மென்மையாகப் புன் னகைத்தாள் சுமி.

சிறிது நேரம் பேசிய பிறகு, அவளுக்கென்று கொடுக்கப் பட்டு இருந்த அறையில் போய்ப் படுத்த சுமி அப்படியே உறங்கிப் போனாள். கனவுகளிலும் கௌதமின் நினைவுகளே உலா வர, மெதுவாக உறக்கம் கலைந்து விழிக்க ஆரம்பித்த போது, அவள் நெஞ்சமென்னும் மேடையில் பல மாற் றங்கள். எதிரே காவ்யா புன்னகையுடன் நின்று கொண் டிருந்தாள்.



பதட்டத்துடன் திரும்பி மணியைப் பார்த்தவள், "கடவுளே... இப்படி தூங்கி இருக்கேன். அண்ணனுக்குச் சாப்பாடு?" என்று வேகமாக எழவும் அருகில் வந்த காவ்யா "ரிலாக்ஸ் சுமி! அண்ணாவுக்கும், அவருக்கும் சாப்பாடு போட்டாச்சு. நான் வந்து பார்த்தப்ப நீங்க தூங்கிட்டிருந்தீங்க. எழுப்ப மனசு வரலை மணி ரெண்டாயிடுச்சா... எனக்கும் ரொம்பப் பசி... அதான் வந்தேன். சாரி டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?" இதமாகக் கேட்டாள்.

"இல்லை. நான்தான் சாரி சொல்லணும். நைட் சரியா தூங்கலையா... அதான் நீங்க போங்க ரெண்டு நிமிஷத்துல வந்துடறேன்" என்று எழுந்தாள். மதியம் சாப்பாடு முடித்து சேரனின் அறைக்குச் சென்று பார்த்தால் அவன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான்.

ஹாலில் அமர்ந்து புத்தகமொன்றைப் படித்துக் கொண் டிருந்தபோது, போன் ஒலித்தது. அவள் எடுத்தவுடனே, "ஹலோ நான் கௌதம் பேசறேன்" என்ற ஆண்மை நிறைந்த ஒரு கம்பீரமான குரல், காதுக்கருகில் சாமரம் வீசிச் செல்வ தாய்! அவள் மனதிலோ சுகமாய் ஒரு மழையின் சாரல்.

தொண்டையில் வார்த்தைகள் முட்டித் தடை பெற, என்ன செய்வதென்று புரியாமல் நிமிர்ந்தபோது, எதிரே தாமோதரன் வருவது தெரியவும், அவரிடம் ரிசீவரை கொடுத்து விட்டு தன் அறைக்குள் சென்றாள் சுமி. கதவைச் சாத்தும்போது, "நம்ம சுமி அம்மாதாங்க எடுத்தாங்க... என்கிட்டக் கொடுத்துட்டாங்க.. எல்லாரும் தூங்கறாங்கய்யா" என்று அவர் கூறுவது லேசாகக் கேட்டது.

"கௌதம் தன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பான்... ஏன் அவனிடம் பேச வார்த்தைகள் வர மறுக்கின்றன?"

யோசிக்கும் போதே தப்பு செய்தவன் அவன்... நான் ஏன் பயப்பட வேண்டும் என்ற வீம்பு மனதினுள் பெரிதாய் எழுவதாய்!

வாழ்க்கையில் பல கேள்விகளுக்கு விடை கிடைக்காதது போல் அவளிடமும் சில கேள்விகளுக்கு பதில்கள் இல்லை.

அவர்கள் அங்கிருந்த ஒரு வாரமும், சிரிப்பும் கலகலப்புமாகச் சென்றது, சேரனுக்கும் சரியாகி விட்டதால், அரட்டை அடிப்பதிலும், கார்ட்ஸ் விளையாடுவதிலும் பாட்டுக் கேட்பதிலும், தோட்டத்தில் உலாவுவதிலும் என்று பொழுது வேகமாகப் போனது.

சுமிக்கு தான், எதையோ இழந்தாற்போல் ஒரு உணர்வு. மனதில் அடிக்கடி தோன்றி மறைவதாய்! கௌதம் அதன் பிறகு பொள்ளாச்சிக்கு வரவில்லை.

தினமும் போனில் மட்டுமே அவன் பேசுவதால் மணி அடிக்கும்போதே அவள் அந்த இடத்தை விட்டு நகர்ந்து விடுவாள். அந்த வாரக் கடைசியில் சேரனை அழைத்துக் கொண்டு தையல் பிரித்து வருவதற்காக அனைவரும் மருத்துவமனைக்குச் சென்றனர்.

அவர்கள் திரும்பி வந்து காரில் ஏறும் போதே, "ஒரு நிமிஷம் வெயிட் பண்ணுங்க ரவி" என்று கூறிய சுமி வேகமாகத் திரும்பிச் சென்றாள்.

காரில் ஏறப் போன காவ்யாவும், ரவியும் நின்று கவனிக்கும் போதே, சாலையைக் கடந்து செல்லக் காத்து நின்றிருந்த கண் தெரியாத ஒரு மனிதரிடம் சென்று மெதுவாகப் பேசிய சுமி, அவர் கையைப் பிடித்து அழைத்துச் சென்று, எதிரில் இருந்த சிறிய பூங்காவில் அமர வைத்து விட்டுத் திரும்பி வருவதைக் கண்டனர்.



ஆச்சரியத்துடன் விழித்த இருவரையும் கண்ட சேரன், "சுமி எப்பவுமே இப்படித்தான். யாராவது கஷ்டப்பட்டா அவளுக்குத் தாங்காது. அதுவும் கண்ணு தெரியாதவங்கன்னா ரொம்பவே பரிதாபப்படுவா! அம்மா இறந்தப்ப, உடனே ஆறு மணி நேரத்துக்குள்ளே கண் தானம் செய்ய ஏற்பாடு பண்ணினதே அவ தான். இப்பவே தானும் ரிஜிஸ்டர் பண்ணி வச்சிருக்கா" என்று கூறும் போதே சுமி வந்து விட்டாள்.

"சாரி... என்னாலே லேட்டாயிடுச்சு கிளம்பலாமா?" இயல்பாகக் கேட்டபடி அவள் காரில் ஏற ரவியின் மனதில் அவளுடைய செயல்கள் பெரும் மதிப்பை வரவழைப்பதாய்! காவ்யாவின் முகத்திலும் ஒருவித பிரமிப்பு வந்திருந்தது.

சுமியிடம் திரும்பிய ரவி, "சேரன் எல்லாம் சொன்னார். இந்த வயசுல இப்படி ஒரு பக்குவமான்னு ஆச்சர்யமா இருக்கு சுமி... இப்பவே உங்க கண் தானத்துக்கு ரிஜிஸ்டர் பண்ணிட்டீங்களாமே?" என்றான் வியப்புடன்.

"இப்பவே என்ன ரவி?" நாளைக்கு நமக்கு என்ன ஆகும் அப்படிங்கறதே நிச்சயமில்லாத இந்த உலகத்தில, பின்ன எப்போ பண்றது? நான் மட்டும் இல்லை, எல்லோரும் பண்ணணும். என்னைப் பொறுத்த வரைக்கும் உலகத்துலேயே பெரிய கொடுமை எதுன்னா கண் தெரியாம இருக்கறதுதான். ஒரு ரெண்டு நிமிடம் கண்ணை மூடிட்டு இருந்து பாருங்க தெரியும். நம்மைச் சுத்தி என்ன நடக்குதுன்னே தெரியாம, இருட்டுக்குள்ளே வாழறது எவ்வளவு கொடுமைன்னு! நாம கொடுக்கற ரெண்டு கண்ணும், ரெண்டு பேருக்கு வாழ்க்கையில ஒரு ஒளியைத் தரப்போறதுன்னா, அதைவிடப் பெரிய சந்தோஷம் இந்த உலகத்துல வேற என்ன இருக்க முடியும்?"

சுமி முடித்த பிறகு ரவிக்கு வார்த்தைகள் வரவில்லை. மனதில் ஒரு உறுதி மட்டும் வந்தபோது, சேரனின் குரல் இடையிட்டது.

''அவ இப்படித்தான்! தனக்காக யோசிக்கறதை விட மத்தவங்களுக்காக யோசிக்கறதுதான் அதிகம். ஆறு மாசத்துக்கு ஒரு தடவை, எங்க ஊருக்குப் பக்கத்துல இருக்கிற அனாதை ஆசிரமத்துக்குப் போயிடுவா.. எங்க தெருவிலே ப்ரெண்ட்ஸ் கிட்ட இருந்தெல்லாம் துணிகளை கலெக்ட் பண்ணிக் கொண்டு போய் குடுத்துட்டு வருவா'' என்றபோது, ''அண்ணா... போதும்ணா'' என்றாள் சுமி தர்ம சங்கடத்துடன்.

பிறகு பேச்சு பொதுவான விஷயங்களில் செல்ல, பொழுது இனிமையாய் கழிந்தது. மாலை நேரங்களில் காவ்யாவும், சுமியும் ஏதாவது டிபன் செய்கிறோம் என்று மீராம்மாவிடம் சென்று விடுவார்கள்.

அன்று, காவ்யா புது மாதிரி ப்ரட் கட்லெட் செய்து எல்லோருக்கும் கொடுத்தாள். ''எப்படி இருக்கு சுமி...?'' புத்தகத்துல படிச்சதை எப்பவாவது இது மாதிரி செய்வேன். அதுவும் நீங்க இப்ப ஒரே ஏஜ் குரூப்பா என் கூட இருக்கறதாலே, இன்னும் ஜாலியா இருக்கு'' என்றவுடன் குறும்பாகப் புன்னகைத்தாள் சுமி.

''என்ன சுமி... கிண்டலா சிரிக்கிறீங்க? நல்லா இல்லையா...?'' சிணுங்கினாள் காவ்யா.

''அதில்லை காவ்யா! அண்ணனுக்காக மாய்ஞ்சு மாய்ஞ்சு செஞ்சிட்டு, என் கம்பெனி தான் ஜாலியா இருக்குன்னு சொன்னா, நம்ப முடியலை... கொஞ்சம் அதிகமாகத்



தெரிந்தது... அதான் சிரிச்சேன்'' குறுகுறுத்த விழிகளுடன் கூறினாள் சுமி.

அப்போது ரவி உள்ளே வந்து, ''போச்சுடா... இன்னைக்கும் ரெண்டு பேருமே ஆரம்பிச்சாச்சா? கடவுள் தான் எங்களைக் காப்பாத்தணும். நான் இன்னிக்கு கட்லெட் சாப்பிட மாட்டேன். விரதம்! சேரன் நீங்க எப்படி..?'' என்று பரிதாபமாகக் கேட்க, சுமிக்கு அடக்கமாட்டாமல் சிரிப்பு வந்தது.

சிரித்துக் கொண்டே இருந்தவள், போன் அடித்ததும் இயல்பாக எடுத்து 'ஹலோ' என்னும் போதே குரலில் புன்னகை கசிந்தது. சிறிது நேரத்துக்கு மறு முனையில் எந்த சப்தமும் இல்லை. பலமுறை 'ஹலோ' என்று கூறியும் பதில் இல்லை என்றதும், சுமி வைத்து விட்டாள்.

மீண்டும் போன் வந்தபோது ரவி எடுத்துப் பேசினான். ''அண்ணா! நீங்களா? நாளைக்கு வர்றீங்களா? சரி நான் இன்னைக்கு நைட்டே கிளம்பி மீராம்மாவை அழைச்சிட்டு வந்திடறேன்... அதெல்லாம் நளபாகம் செய்றவங்க ரெண்டு பேரை இங்கே புதுசா அப்பாயிண்ட் பண்ணி இருக்கோம். காலையில, டிபன் வேலை எல்லாம் அவங்களே பார்த்துப்பாங்க'' என்றான் நமட்டுச் சிரிப்புடன்.

பிறகு சிறிது நேரம் அமைதியாக கௌதம் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த ரவி, ''நீங்க வேறண்ணா! நாங்க ரெண்டு பேரும் ரொம்பப் பாவம்! கட்லெட்டுக்கும், காவ்யாவுக்கும் இடையில் நாங்க படற பாடு இருக்கே. இன்னிக்குக் கூட ரெண்டு பேரும் கட்லெட்ங்கற பேரில ஏதோ செஞ்சி வச்சிட்டு, எங்களை ஓட ஓட விரட்டி சாப்பிடச் சொல்லி இம்சை பண்றாங்க'' என்றான் பரிதாபமான முகத்துடன்.

காவ்யா ரிசீவரை பறித்து, ''அதெல்லாம் இல்லண்ணா... நாங்க அருமையா ப்ரெட் கட்லெட் பண்ணிக் கொடுத்தா, ரொம்பத்தான் அலட்டிக்கிறாரு இந்த ரவி அண்ணா! அவர் சாப்பிடலைன்னா போகட்டும்... ஆளா இல்லை... சேரன் சாப்பிடுவார்'' பெருமையுடன் கூறினாள்.

கௌதம் என்ன கூறினானோ... ''போங்கண்ணா!'' என்று ரவியிடம் கொடுத்துவிட்டு வெட்கத்துடன் புன்னகைத்தாள். அவன் என்ன கூறி இருப்பான் என்பதை யூகித்து, தனக்குள் சிரித்துக் கொண்டாள் சுமி.

காவ்யா அவளிடம், ''அண்ணாவும் கிண்டல் பண்றார். நான் செஞ்சா வேற வழி இல்லாம உங்கண்ணா சாப்பிட்டுத் தான் ஆகணுமாம்... இப்பவே சேரன் மாட்டிக்கிட்டாரா உன்கிட்டே அப்படின்னு சொல்றார்'' எனும்போதே சேரனின் முகம் மலர்ந்தது.

''அப்போ நம்ம விஷயத்தைப் பத்தி பெரியவங்ககிட்டே பேசிட்டாரோன்னு தோணுது. கௌதம் சாருக்கு சம்மதம் போலத்தான் தெரியுது.'' சந்தோஷம் பொங்கியது, அவன் குரலில். சுமிக்கும், மனதில் பல கோடி நினைவுகள் பொங்கிப் பிரவகித்து, உற்சாக ஊற்றாய் வெளிக் கிளம்பியது.

கௌதமிடம் பேசி விட்டு வந்த ரவி, ''என்ன... ரொம்ப சந்தோஷமா இருக்கற மாதிரித் தெரியுது. எல்லாம் செஞ்சு முடிச்சவனுக்கு ஒரு 'தேங்க்ஸ்' கூடக் கிடையாதா?'' என்று கேட்க, ஓடிச் சென்று அண்ணனைக் கட்டிப் பிடித்து முத்த மிட்டாள் காவ்யா!

''அப்பப்போ இது மாதிரி ஏதாவது செஞ்சா தான், பாசமலரோட அன்பே தெரியுது'' சிரிப்புடன் ரவி கூறிய போது, வெகு நாட்களுக்குப் பிறகு சுமியின் மனதில்



நிம்மதியும், சந்தோஷமும் கலந்த ஒரு உணர்வு. சேரனை அவர்கள் மாப்பிள்ளையாக ஏற்றுக் கொண்டு விட்டால், இனி அவனைப் பற்றி கவலை இல்லை. காவ்யா பார்த்துக் கொள்வாள் என்ற தைரியம் மனதில் எழுவதாய்!

அன்றிரவு ரவி மீராம்மாவை அழைத்துக் கொண்டு சென்று விட, காலையிலேயே எழுந்த சுமி பொங்கலும், இட்லியும் செய்து ஹாட் பேக்கில் வைத்து விட்டுக் குளிப்பதற்காகச் சென்றாள். அன்று காவ்யா எழும் போதே நேரமாகி விட்டிருந்தது. அவசரமாகச் சமையலறைக்குச் சென்று பார்த்தபோது, எல்லாமே தயாராக இருந்தது. காவ்யாவுக்கு மனதினுள் குற்ற உணர்வுடன், சுமியின் மேல் ஒருவிதப் பாசமும் சுரந்தது.

இருவருமே அன்று புடவை கட்டிக் கொள்ளலாம் என்று தீர்மானித்திருந்ததால் சுமி தயாராகி வருவதற்குள் சேரனைப் பார்த்து விட்டு தன் அறைக்குச் சென்றாள் அவள்.



## 9

**வா**சலில் அழைப்பு மணி ஒலித்ததும், சேரன் கதவைத் திறந்தபோது, அங்கு கௌதம் புன்னகையுடன் நின்றிருந் தான், வரவேற்கும் விதமாகச் சிரித்த சேரனிடம், ''எப்படி இருக்கீங்க சேரன்...? நல்லா இருக்கீங்களா தையல் பிரிச்சிட்டாங்களா?'' என்று வினவினான்.

''நான் இப்ப நார்மலா இருக்கேன் சார். ஒண்ணும் ப்ராப்ளம் இல்லை. நீங்க எப்படி இருக்கீங்க...?''

"ஓ... ஃபைன்! என்ன ரவி இல்லாமக் கொஞ்சம் கஷ்டமா இருந்தது. மத்தபடி ஓகே! எங்கே இந்த வாயாடி காவ்யாவைக் காணோம்...?" என்று கௌதம் கேட்டுக் கொண்டிருக்கும் போதே, சுமி புடவையில் அழகு தேவதையாக, தன் அறையிலிருந்து வந்து கொண்டிருந்தாள்.

கௌதமின் கூரிய பார்வை, அவளை விட்டு ஒரு கணமும் அகல முடியாமல் தவித்துத் தத்தளித்தது. "ஹலோ சம்யுக்தா. எப்படி இருக்கீங்க?" முதன் முறையாக மரியாதை யுடன், மென்மையான தொனியில் அவன் கேட்கவும் "ம்..." என்று மெதுவாகத் தலையை மட்டும் அசைத்தவளின் மனம், மிகவும் படபடப்பாய் வார்த்தைகள் தொண்டைக் குள் சிக்கித் தவித்தன!

ஏனோ, அவன் பார்வை அவளுடைய மனப்பெட்டகத் துக்குள் ஊடுருவும் ஒளித்துகளாய், ஒரு குறுகுறுப்பை ஏற்படுத்தியது. வேகமாகத் திரும்பி மாடிக்குச் சென்றவளை, அவன் விழிகள் பின் தொடர்ந்தன. சுமி, காவ்யாவின் அறைக் கதவைத் தட்டி விட்டு உள்ளே நுழைந்தால், அங்கு புடவை கட்டத் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தாள் அவள்.

"உங்க அண்ணன் வந்திருக்கார் காவ்யா!" என்று சுமி கூறியவுடனே, துள்ளிய காவ்யாவின் முகத்தில் உடனே ஒரு பயமும் தெரிந்தது. மடிப்பு வைத்து அழகாக அவள் சேலை கட்டி விட்ட பிறகு, சந்தோஷத்துடன் சென்றவள் கௌதமைக் கண்டதும், மெதுவாக அவனருகில் சென்று நின்று, "சாரிண்ணா" என்றாள் குனிந்த தலையுடன்.

கௌதம் அவள் கையைப் பிடித்து அழுத்தி விட்டு, "ஏய் காவ்யா! புடவை எல்லாம் கட்டிக்கிட்டு பெரிய மனுஷி



யாட்டம் இருக்கே. இதெல்லாம் கூடத் தெரியுமா உனக்கு? காதல் வந்தா, இதெல்லாம் கூடச் சேர்ந்து வந்துடுமா என்ன?" ஆச்சர்யத்துடன் வினவினான்.

"போங்கண்ணா... நல்லா இல்லையா? எனக்குத் தெரியாது தான். சுமி தான் கட்டி விட்டாங்க." என்றபடி சுமியைப் பார்க்க, அதைத் தொடர்ந்து அவனுடைய பார்வையில், ஏதோ ஒரு மாற்றம் தெரிய அவன் விழிகள் தன்னுள் ஏற்படுத்திய படபடப்பை மறைக்க முயன்றவள், "காவ்யா... டிபன் எடுத்து வச்சிடலாமா?" என்றாள் மெதுவாக.

"ஏன் காவ்யா? ரவி சொன்ன மாதிரி, இன்னிக்கு உன்னோட நள்பாகமா...?" கௌதம் புன்னகையுடன் கேட்க, "ஸாரிண்ணா! இன்னிக்கு நான் லேட்டா எழுந்திரிச் சிட்டேன். சுமி தான் எல்லாம் செஞ்சாங்க" என்றாள்.

"ம்... கார் வேற டிரைவ் பண்ணனும். சாப்பிட பயமாத் தான் இருக்கு. பார்ப்போம்! வழியில் ஏதும் பிரச்னைன்னா, நீங்க டிரைவ் பண்ணுவீங்கள்லே. ஏன் சேரன்?" என்று கேட்டு விட்டு இயல்பாய்ச் சிரித்தவனின் பார்வை மட்டும், ஒரு விதக் கூர்மையுடன் அவளிடமே பதிந்திருந்தது.

சுமிக்கு பிரமிப்பாக இருந்தது. அவனுடைய முதல் புன்னகை, அந்த இடத்துக்கே தீபமேற்றியது போல் என்ன அழகாகச் சிரிக்கிறான்? இது போல் அவன் இயல்பாகச் சிரித்து, அவள் கண்டதேயில்லை. அந்த நிமிடம், இளமை யாக, மிகவும் வசீகரத்துடன், அழகான கம்பீரமான தோற்றம் தெரிந்தது அவனிடம்! அவளின் ஆராயும் விழிகளைத் தாங்கிய அவன் கூரிய பார்வை, உடனே அந்த ஹாலை விட்டு சுமியை அகல வைத்தது.

எல்லோருக்கும் டிபனை எடுத்து மேசையின் மேல் வைத்து விட்டு, தோட்டத்திற்குச் சென்றாள். பசிக்கவும் இல்லை. கௌதமுடன் அமர்ந்து சாப்பிட விருப்பமும் இல்லை.

அவனைப் பார்க்காத போது எதையோ இழந்தது போலவும், பார்த்து விட்டால் மனதினுள் எதுவோ பிறழ்வதைப் போலவும், அவன் குரல் கேட்டாலே நெஞ்சம் படபடப்பதையும், தன்னுள் நிகழ்ந்த எதையுமே அவளால் தடுக்க முடியவில்லை.

தன் வசமிழந்து தவிக்கும் மனதை மாற்ற ஒரே வழி, அவனை விட்டு விலகி இருப்பது தான் என்று தனிமையை நாடி வந்த போதும், ரசித்துக் கடந்த மலர்களும், காலுக்கு இதம் கொடுத்த புல்வெளியும் அவளை இதப்படுத்த வில்லை.

மனம் கேள்விகளைத் தொடுத்தது. "நான் ஏன் இப்படி ஈர்க்கப்படுகிறேன்? எத்தனை ஆண்களைப் பார்த்திருக்கிறேன்? எவரிடமும் சலனப்பட்டதில்லையே? ரவியிடம் இத்தனை நாள் பழகியும், சேரனிடம் வருவது போல ஒருவிதப் பாசம் தானே வருகிறது? இது போல் மூச்சு முட்டுகிற நேசம் வரவில்லையே...? அர்த்தமுள்ள ஆயிரம் வார்த்தைகளைவிட, ஒரு மேன்மையான மௌனம் என்னை ஈர்த்ததோ...?" விடை தெரியாத பல கேள்விகளுடன் நிமிர்ந்தபோது, அவளுடைய எண்ணங்களுக்கு உரியவனே எதிரில் வழி மறித்து நின்றிருந்தான்.

இடுங்கிய கண்களுடன் "ஏன் சம்யுக்தா சாப்பிட வரலை? அங்கே எல்லாரும் வெயிட் பண்றாங்க... டிபன் செஞ்சி வச்சிட்டு சாப்பிட வரலைன்னா. ஒண்ணு பசிக்காம இருக்கணும். இல்லை! நான் வந்தது பிடிக்காம இருக்கணும்.



ரெண்டாவது காரணம் தான் சரின்னு நான் நினைக்கிறேன்!" அழுத்தமான குரலில் கேட்டு விட்டுக் காத்திருந்தான்.

ஒரு வேக மூச்சுடன், தன் மேலேயே கோபம் வர, அவள் உடனே திரும்பி நடக்கவும், அவனுடைய வலிமையான கை அவளைப் பிடித்து நிறுத்தியது. ஒரு கணம், கண்களை இறுக மூடித்திறந்து, "ப்ளீஸ்..." என்று குரலில் கிசுகிசுப்பாய் வார்த்தைகள் யாசகம் செய்ய, அந்த நிமிடமே அவள் கையை விட்டு விட்டான் கௌதம்.

வேகமாக அவள் உள்ளே சென்ற போது, காவ்யாவும் சேரனும் தன்னை யோசனையாக நோக்கியதை, அவள் அறியவில்லை. இறுகிய முகத்துடன், தொடர்ந்து வந்த அவனும் யாரிடமும் எதுவும் பேசவில்லை. காரில் கிளம்பி வால்பாறைக்குச் சென்ற போது, வழியில் காவ்யா மட்டும் பேசிக் கொண்டே வர, சேரனும் கௌதமும் அதற்கு பதில் கொடுத்துக் கொண்டே வந்தனர்.

சுமியின் மனம் சிறு குழந்தையாய் அவன் நினைவுகளை, வேறு யாரிடமும் பகிர்ந்து கொள்ள மாட்டேன் என்று அடம் பிடித்தது. தன் கவனத்தை வெளியில் திருப்பி, இயற்கையில் பதித்துக் கொண்டாள் அவள். யாரோ தன்னை உற்றுப் பார்ப்பது போன்ற உணர்வு திடீரென்று தோன்ற ரியர்வியூ மிரரிடம் பார்வை சென்ற போது, கௌதமின் பார்வை அவளிடம் பதிந்து விலகியது.

முகத்தின் மேல் குறுகுறுக்கும் அவன் பார்வையைத் தவிர்க்க சுமி கண் மூடி சாய்ந்து கொண்டாள். திடீரென்று அவன், "ஏன் சேரன்? சம்யுக்தா பேசவே மாட்டாங்களா? ரொம்ப அமைதியா இருக்காங்க" என்று கேட்க, மனம்

விதிர்த்துப் போய் கண் திறந்த போது, காவ்யா அடக்க முடியாமல் சிரிப்பது தெரிந்தது.

''சுமியாண்ணா? ரொம்ப ஜாலியா பேசுவாங்க. எனக்கு அவங்ககிட்டே பேசிட்டே இருக்கணும் போல இருக்கும். நாங்க நாலு பேரும் அடிச்ச லூட்டியில, ஒரு வாரமா பொள்ளாச்சியே கலகலன்னு இருந்தது தெரியுமா?'' என்றாள் அப்பாவியாக.

''ஓ... அப்ப என்னோட மட்டும் தான் பேச மாட்டாங்களா? நான் வந்ததும், பேசப் பிடிக்கலை போலிருக்கு. அமைதியா ஆயிட்டாங்க'' அவன் குரலில் புரியான ஒரு பாவனை.

உடனே, சேரனுக்கு என்னவோ போல் ஆகி விட்டது. ''சுமி என்னாச்சு உனக்கு? படபடன்னு பேசுவே இன்னிக்கு மௌனமா வர்றே?'' ஆதங்கத்துடன் கேட்க, ''ஒண்ணு மில்லைண்ணா காலையிலேருந்து ஒரே தலைவலி. அதான்'' என்றாள்.

உண்மை தெரியாமல் சேரன் பரபரத்தான். ''ஏம்மா முன்னாலேயே சொல்லி இருக்கக் கூடாது? அங்கேயே ஏதாவது மாத்திரை எடுத்திருக்கலாமே? கௌதம் சார் எங்கேயாவது ஒரு மெடிக்கல் ஷாப்பில நிறுத்துங்க ப்ளீஸ்'' என்று அக்கறையுடன் கூற, அடுத்து வந்த கடையில் அவன் காரை நிறுத்தினான்.

சேரனுடன், கூடவே காவ்யாவும் இறங்கிச் செல்ல திரும்பாமலே தெரிந்தது, கௌதமின் கோபம். ஸ்டீயரிங் வீலை அழுந்தப் பற்றி இருந்த விரல்களில் ஒரு இறுக்கத் துடன், ''பாவம் சேரன். இது என்னைப் பார்த்தவுடனே வந்த தலைவலின்னு தெரியலை. நான் கண்ணை விட்டு மறைஞ்



சதுமே, அதுவும் தானாப் போயிடும்னும் தெரியலை'' எகத்தாளமாக வந்தது அவனுடைய குரல்.

ஒரு கணம் துடிக்க மறந்த அவள் இதயம், ஏனோ தவித்துப் போனது. அப்போது தான், உண்மையிலேயே சுமிக்கு தலைவலிக்க ஆரம்பித்தது. கைகளால் தலையைப் பிடித்தபடி குனிந்து கொண்டாள். ஓரப்பார்வை அவளிடம் மையம் கொள்ள, பெரும் சீற்றம் வந்தது அவன் குரலில்.

''ஒண்ணும் நடிக்க வேணாம். எனக்கு உன்னைப் பாக்கப் பிடிக்கலைன்னு நேராவே என்கிட்ட சொல்லலாம். நான் இனிமே யார் வழியிலயும் வர மாட்டேன்'' என்றவன், காரை விட்டு உடனே இறங்கிச் சென்று விட்டான்.

அவனுடைய கோபம் சுமியை ஆழமாய் பாதிப்பதாய்! அவன் விலகிச் சென்ற பிறகு, தன் உலகமே இருண்டு போனாற் போல்! தான் ஏன் இப்படி நடந்து கொள்கிறோம் என்ற கேள்வி, அவளுக்குள் நெருஞ்சி முள்ளாய் குத்தியது.

அப்போது மாத்திரையுடன் வந்த காவ்யா! தண்ணீரும் எடுத்துக் கொடுத்துவிட்டு, ''நான் வேணா தலைவலித் தைலம் தேய்ச்சு விடவா சுமி?'' என்று பரிவுடன் கேட்க, ''வேண் டாம் காவ்யா... தேங்க்ஸ்'' என்றபடி தானே எடுத்து தேய்த்து விட்டுக் கண்மூடி சாய்ந்து கொண்டாள்.

பனித்துளிகளை சுமந்த மலர்களைப் போல், விழிகள் நீர்த்துளிகளைச் சுமந்தன. கெஸ்ட் ஹவுசுக்கு வந்த போது தான், அவர்களின் குடும்பமே அங்கு வந்திருப்பது தெரிந் தது. எல்லோரும் எஸ்டேட்டை சுற்றிப் பார்க்க சென்றிருப் பதாக, மீராம்மா கூறியதும், சுமிக்கு நிம்மதியாக இருந்தது. சிறிது நேரம், தன் அறையில் ஓய்வெடுத்தவளுக்கு, மனம் ஏனோ மிகவும் பாரமாய் இருந்தது.

சிறிது நேரத்தில் காவ்யா வந்து அழைக்க, மூன்று பேரும் கீழே இறங்கிச் சென்ற போது, சுமிக்குத்தான் கால்கள் பின்னலிட்டன. பெரிய பணக்காரக் குடும்பம்.. அவர்கள் எப்படிப் பழகுவார்களோ என்ற பயம் மனதில் முகாமிட்டது. பல எண்ணங்களுடன் அவள் மெல்ல இறங்கிச் சென்ற போது, ஹாலில் அனைவருமே இருந்தனர்.

முதல் பார்வையிலேயே அவர்களைப் பார்த்தால், மிகவும் பாரம்பரியம் மிக்கவர்களாகவும், கண்ணியமானவர்களாகவும் தோன்றியது. அவர்களை வரவேற்று, "வாங்க.. உடம்பு பரவாயில்லையா? ட்ராவல் பண்ணறதுக்கு ஒண்ணும் கஷ்டமா இல்லையே?" என்றார் கௌதமின் ஜாடையிலேயே இருந்த வயதானவர்!

"நல்லா இருக்கேன் சார். ஒண்ணும் ப்ராப்ளம் இல்லை.." என்ற சேரன் சுமியிடம், "இவங்க தான் கௌதம் சாருடைய அப்பா, அம்மா! அவங்க ரவிசாரோட அம்மா!" என்று அறிமுகப் படுத்தினான்.

மென்மையாகப் புன்னகைத்த சுமி, பொதுவாக அனைவருக்கும் வணக்கம் சொன்னாள். அனைவரும் இயல்பாய் சிரித்துக் கொண்டு இருந்த போதும், கௌதமிடம் மட்டும் ஒரு வித இறுக்கம் தென்படுவதாய்!

அவனுடைய அம்மா சுமியைப் பார்த்து, "ரொம்ப அமைதியா, அழகா இருக்காப்பா... உன்னோட தங்கை!" என்று சேரனிடம் கூறி விட்டு, "வாங்க எல்லாரும் சாப்பிடலாம்" என்று அழைத்தார்.

சுமி தானும் பரிமாறுகிறேன் என்றபோது, அவளைத் தடுத்து உட்கார வைத்து பெரியவர்களே பரிமாற, கௌத



மின் அப்பாவுடைய கிண்டல் பேச்சில் பொழுது இனிமையாகச் சென்றது. அவருடன் சிறிது நேரத்திலேயே இயல்பாகப் பேச ஆரம்பித்த சுமிக்கு, திடீரென்று யாரோ தன்னை உற்றுப் பார்ப்பது போல் ஒரு உணர்வு!

நிமிர்ந்து பார்த்தால், எதிரே கௌதமின் உணர்ச்சியற்ற பார்வை சினத்துடன் அவளை ஊடுருவியது. உடனே குனிந்து கொண்டாலும் மனதில் மட்டும் வலித்தது. மதியம் ஓய்வெடுத்த பிறகு, சுமி ஜான்சனைப் பார்க்க பின்புறத் தோட்டத்திற்குச் சென்றாள்.

அவளைப் பார்த்ததுமே சேரனைப் பற்றி நலம் விசாரித்த மரியம், சந்தோஷத்துடன் ஜான்சனை சுமியிடம் கொடுத்தாள். அவனுடன் சமையலறைக்கு வந்த மீராம்மாவிடம் பேசி விட்டு, மாடிக்கு சென்ற போது, நம்மிடம் எதிர்பார்ப்பின்றி அன்பு செலுத்தும் ஜீவன்களும் இங்கு இருக்கிறார்கள் என்ற எண்ணமே மனதிற்குத் தெம்பளிப்பதாய் இருந்தது.

மாடியிலிருந்த ரூப்கார்டனில் போடப்பட்டிருந்த ஊஞ்சலில் ஜான்சனை வைத்து ஆட்டி விட, உற்சாகத்துடன் பொங்கிய அவன் சிரிப்பு, கௌதமின் புன்னகையை மறக்க முடியாமல் நினைவு படுத்தியது. காலடிச் சப்தம் கேட்டுத் திரும்பினால், அங்கு கௌதம் வந்து கொண்டிருந்தான்.

அவளைக் கண்டதும், ஒரு நொடி அசையாமல் நின்ற அவன் கண்களில் தேடல், அங்கு ஊடலாய் முடிய விருட்டென்று திரும்பிச் சென்றான்.

தன்னால் தானே அவனால் இங்கு சுதந்திரமாக இருக்க முடியவில்லை என்ற உணர்வு உறுத்தி, ஒன்றையும் ரசிக்க

விடாமல் செய்வதாய்! மனம் தன் வசமில்லை என்று சத்தியாக்கிரகம் நடத்தியது. சிறிது நேரம் கழித்து கீழே வந்த போது, சாரதா எதிரில் வந்தார்.

''உனக்குக் குழந்தைங்கன்னா ரொம்பப் பிடிக்குமாம்மா? இவன் அதுக்குள்ளே உன்கிட்டே ஒட்டிக்கிட்டான்.'' என்ற போது அங்கு வந்த மீராம்மா, ''சுமிம்மாவைத் தான் ஏற்கனவே தெரியுமேம்மா. பத்து நாளைக்கு முன்னாடி அவங்க இங்கே தானே தங்கி இருந்தாங்க'' என்று கூறிச் சென்றார். சாரதாவின் பார்வை, யோசனையுடன் சுமியின் மேல் படிந்தது.

நேரே கௌதமிடம் சென்றவர், ''ஏம்பா... பத்து நாளுக்கு முன்னாலே, சுமி இங்கே தங்கினதா மீரா சொல்றாளே, அது உண்மையா கௌதம்?'' என்று கேட்ட போது, ஒரு நொடி திடுக்கிட்டவனின் முகம் மறு கணமே இயல்பாக, ஒரு பெருமூச்சுடன், ''ஆமாம்மா... சேரன் சென்னைக்குப் போயிருந்தப்ப, அவங்க வால்பாறைக்கு வந்ததாலே தான், மீராம்மாவோட துணையில இங்க தங்க வைக்க வேண்டியதாய் போச்சு'' என்றான். அவருக்கு முன்பு புரியாத பல விஷயங்கள் இப்போது புரிவது போலிருந்தது.



## 10

**அ**ன்று இரவு சமையலுக்கு சுமியும், காவ்யாவும் உள்ளே புகுந்து விட்டனர். பன்னீர் மசாலாவும் பட்டர் நானும் செய்கிறோம் என்று மீராம்மா, எல்லாவற்றையும் தயார் செய்து கொடுக்க பெரியவர்களையும் ஓய்வெடுக்கும்படி கூறி அனுப்பி விட்டு, சுமி மசாலாவும், காவ்யா பட்டர் நானும் செய்யவும் ஒரு இனிமையான சூழ்நிலை அங்கு உருவாகி இருந்தது.



நடுவே வந்த ரவி, ''அண்ணனுக்குத் தலைவலியாம்! மீராம்மா ஒரு காபி ஸ்ட்ராங்கா போட்டுக் கொடுங்க'' என்றான். உடனே காவ்யா, ''சுமி! உங்ககிட்டே காலையில வாங்கின மாத்திரை இருக்குமே? அந்தத் தைலம் கூட வேணும். வாங்க அண்ணனைப் போய் பார்த்துட்டு வந்திடலாம்'' என்று அவசரமாய் முன் அறைக்குச் சென்றாள்.

மாடிக்குச் சென்று மாத்திரை எடுத்து வந்த சுமி, அவன் அறைக்குள் செல்வதா வேண்டாமா? என்று தயங்கியபடி வெளியே நின்று காவ்யாவை அழைக்க, சாரதா அவளை உள்ளே வரும்படி கூறினார். படுக்கையில் சாய்ந்திருந்த கௌதம், அவளைக் கண்டதும் எழுந்து அமர்ந்தான்.

அவனிடமிருந்து தைலத்தையும், மாத்திரையையும் வாங்கிய காவ்யா ''நான் தேய்ச்சு விடவாண்ணா. என்ன இன்னிக்கு காலையில் இருந்து சுமிக்கும், உங்களுக்கும் மாத்தி மாத்தி தலைவலி வருது?'' இயல்பாக அவள் கேட்கவும், சுமிக்கு அந்த நிமிடம் முள் மேல் நிற்பது போல் இருந்தது.

அவளையே கூர்ந்தவன், ''நீங்கள்லாம் போங்க. நான் பாத்துக்கிறேன்'' என்றபோது அந்தக் குரலில் தெரிந்த ஏதோ ஒன்று அவளை பாதித்து உடனே தன் வரவை அவன் விரும்பவில்லை என்பதை அவளுக்குப் புரியவைப்பதாய் அவன் மேல் கொண்ட நேசம், அவளைப் புரட்டிப் போட்டது.

இரவு சுமியும், காவ்யாவும் பரிமாற மற்றவர்கள் சாப்பிட்ட போது அவனிருந்த பக்கமே அவள் போக வில்லை. கௌதமுடைய அப்பா விஜயராகவன் தான் பன்னீர் மசாலாவைப் புகழ்ந்து கொண்டிருந்தார்.

"பாரு சின்னப் பொண்ணுங்க எப்படி சமைக்கிறாங் கன்னு. நீங்களும் இருக்கீங்களே இட்லி, தோசை, சட்னி, சாம்பார்னு... அது தான் சின்னப் பொண்ணுங்க கையால வெரைட்டியா சமைச்சி சாப்பிடணும்கறது" என்றார் கிண்டலாக.

ரவி உடனே "பெரியப்பா அடுத்த வாரம் பெரியம்மா கையால தான் சாப்பிடணும். அப்புறம் சின்னப்பசங்க நாங்களே அவங்க செய்யறதை பேசாம சாப்பிடறோம். நீங்க கமெண்ட் அடிக்கிறீங்களா?" எனும் போதே கௌதமின் குரல் நக்கலாய் வெளிவந்தது.

"இதெல்லாம் எப்போவாவது தான் சாப்பிட முடியும். தினமும் முடியாது. ஆனா அம்மா, சித்தி செய்யறதெல்லாம் டெய்லி சாப்பிடலாம். அலுக்கவே அலுக்காது. நான் அம்மா கட்சிதானப்பா."

சுமியின் மனதில் எல்லோரும் தன்னைப் புகழ்ந்து பேசுவது அவனுக்குப் பிடிக்கவில்லையோ என்று தோன்றி, அவளை சோர்ந்து போகச் செய்தது. வீரியமாய் உள் நுழைந்த காதல், வலியாய் விரவிப் பரவியது.

அன்றிரவு உறக்கம் வராத தனிமையில் உயிரையும் வதைத்தது. சேரன் விஷயமாக கௌதம் பெரியவர்களிடம் ஏதும் பேசி இருப்பானா என்ற கேள்வியும் உள்ளூர எழுந்தது.



காலையில் அவளை எழுப்பிய காவ்யா மகிழ்ச்சியுடன் அவளை அணைத்துக் கொண்டாள். கௌதம் பெரியவர் களிடம் பேசி ஒத்துக்கொள்ள வைத்து விட்டதையும், முதலில் மறுத்தாலும் பிறகு காவ்யாவின் அப்பாவும் சம்மதித்து விட்டதையும் கூறினாள். அடுத்த மாதமே திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று முடிவும் செய்திருப்பதாகச் சொல்லவும் சுமியின் மனதில் உற்சாகம் ஊஞ்சல் கட்டி ஆடியது.

உடனே சேரனைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. கவலைக்கூடு மாயமாகி சொர்க்கலோகம் சொந்தமானது. அவனுடைய அறைக்கு சென்றபோது தான் கௌதமும் அங்கிருப்பது தெரிந்தது. சேரன் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்தான். "காங்கிராட்ஸ் அண்ணா" என்று அவன் கையைப் பிடித்து மகிழ்ச்சியுடன் குலுக்கி விட்டு நிமிர்ந்தபோது தான் கௌதமின் பார்வை அவளிடமிருப்பது புரிந்தது.

உடம்புடன் ஒட்டிய இரவு உடையில் தன் உடலின் வரி வடிவமே தெரியுமே என்ற பதைப்பில் உடனே வெளி யேறினாள் சுமி. அதைக்கண்ட கௌதமின் முகம் சுருங்கி இறுகியது. காவ்யாவும், சேரனும் காதல் வானில் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்ததால் இதை கவனிக்கவில்லை.

தன் அறைக்கு வந்த சுமிக்கு ஜென்ம ஜென்மமாய் தான் அவனுக்காகத் தவமிருந்ததுபோல் ஒரு உணர்வு. மனதை வேகமாக அடக்கியபடி குளித்து தயாராகி அழகு தேவதை யாய் சேரனின் அறைக்குச் சென்றாள்.

"கௌதம் சார் என்னண்ணா சொன்னார்? எல்லாருக்கும் இதுல சம்மதம் தானே?" என்றாள் ஆவலுடன். அவளையே

பார்த்துக் கொண்டிருந்த சேரன், ''உனக்கு சந்தோஷமா சுமி?'' புன்னகையுடன் கேட்டான்.

''ரொம்ப சந்தோஷண்ணா. இத விட வேற என்ன வேணும் சொல்லுங்க. காவ்யா நல்ல பொண்ணு. நீங்க அவங்களை நல்லாப் பாத்துக்கணும். என்னிக்குமே அன்பா சந்தோஷமா வச்சிக்கணும். அப்பதான் நான் இன்னும் சந்தோஷப் படுவேன்'' என்றபோது திடீரென்று உள்ளே வந்த காவ்யா அவளைக் கட்டிப்பிடித்து கண்ணீருடன் முத்தமிட்டாள்.

''தேங்க்ஸ் சுமி'' உணர்ச்சிகள் குரலில் கசிய கூறியபோது சாரதாவும், காவ்யாவின் அம்மாவும் உள்ளே வந்தனர். ''நாங்க பயந்துட்டே இருந்தோம். காவ்யாவுக்கு புகுந்த வீடு எப்படி அமையுமோன்னு நீ பேசினதைக் கேட்டவுடனே இனிமே அந்தக் கவலையே வேண்டாம்னு தோணுதும்மா. எனக்கு உன்னை மாதிரி ஒரு பொண்ணு இல்லையேன்னு இன்னிக்கு வருத்தப்படறேன் சுமி'' சாரதா அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு சந்தோஷத்துடன் கூறினார்.

காவ்யாவின் அம்மாவும் அவள் தோளைப் பிடித்து அணைத்துக் கொண்டபோது, சுமியின் மனது, அவர்களின் அன்பில் மலர்ந்தது. ''நான் என்னம்மா சொன்னேன்? என் இடத்தில நீங்க இருந்தாலும், இதையே தான் சொல்லி இருப்பீங்க. எனக்கு காவ்யாவை ரொம்ப பிடிச்சிருந்தது. என் மனசுலப் பட்டதை சொன்னேன்'' என்று மென்மையாக முறுவலித்தாள்.

பிறகு அனைவரும் கீழே வந்தபோது கௌதமின் அப்பா சேரனுடைய கைகளைப் பிடித்துக் குலுக்கி, ''கங்கிராட்ஸ் மாப்பிள்ளை'' என்றபோதும், ரவி கைகுலுக்கி வாழ்த்தி



விட்டு, ''அப்பா ஈவினிங் வந்திடுவார். நைட் டின்னருக்கு வெளியே போகலாம்'' என்றபோதும், சுமியின் மனது புதிதாய் மகிழ்ச்சி சிறகுகளை விரித்துப் பறந்தது.

அன்று மாலை எல்லோரும் தயாராகி வரவும், ரவிவர் மாவின் ஓவியம் போல் வந்த சுமியிடமிருந்து பார்வையை விலக்க முடியாமல் ஒருகணம் கௌதம் உறைந்து போய் நின்றதை, சுமி கவனிக்கவில்லை. ஆனால் அதை கவனித்த சாரதாவின் மனதுக்குள் பல யோசனைகள்.

பெரிய ஓட்டலில் டின்னர் நடக்க, முதலில் ஒதுங்கி இருந்தாலும் பிறகு காவ்யாவின் தந்தை ராமலிங்கமும் அதில் இயல்புடன் இணைந்து கொண்டார். எல்லோரும் சேரனையும், காவ்யாவையும் கிண்டல் செய்து சூழ் நிலையையே கலகலப்பாக்கிக் கொண்டிருக்க, சுமியும், கௌதமும் மட்டும் அமைதியாகத் தங்கள் எண்ணங்களில் மூழ்கி இருந்தனர்.

கௌதமின் பார்வை, அடிக்கடி அவள் மேல் ஆர்வத் துடன் படிவதையும் எல்லோருடனும் சுமூகமாக சிரித்துப் பேசும் சுமி, அவனிடம் மட்டும் ஒதுங்கிப் போவதையும் அன்று தான் கவனித்தார் சாரதா. தன் மகன் எந்தப் பெண்ணிடமும் இந்த அளவு ஆர்வம் காட்டியதில்லை என்பதும், வந்த வரன்களை எல்லாம் தட்டிக்கழித்ததும் அவர் மனதில் எண்ண இழைகளைக் கோர்த்தது.

தாங்கள் பணக்காரர்கள் என்று ஒதுங்காமல் அதேசமயம் எந்த பந்தாவும் காட்டாமல் அவள் இயல்பாக இருந்தது வேறு அவர் மனதைக் கவர்வதாய்... டின்னர் முடிந்து வரும்போது ''நீ இந்தக் காரில் வா சுமி'' என்று தங்களுடன்

அழைத்துக் கொண்டார் அவர். கௌதம் காரை ஓட்ட தர்மசங்கடத்துடன் தலை குனிந்து சுமி அமர்ந்திருப் பதைக் கண்ட அவரின் உதடுகளில் பொருள் பொதிந்த புன்னகை!

இரவு வீடு வந்து எல்லோரும் உறங்கிய பிறகும், சுமியின் விழிகளுக்குள் முட்கள் கீறியதுபோல் உறக்கம் வர மறுத்தது. செல்லமாய் அவனிடம் செல்லும் மனதை அடக்கி, தவிப்புடன் படுத்திருந்தாள் அவள்.

கௌதம் செய்த செய்கையால், அவன் மேல் தனக்கு வெறுப்பு தான் அதிகமாக இருக்கும் என்று நினைத்திருந் தாள். இப்போது அதுவும் முடியாமல் அவளைப் பார்த்த துமே மனம் படபடப்பதும், அவன் குரல் கேட்டதுமே வயிற்றிற்குள் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் பறப்பது போல வும், அவனுடன் ஒரே அறையில் இருக்கும் போதோ, மனம் எதிலுமே ஒன்றாமல் தத்தளிப்பதும், புதிராய் தோன்றியது.

ஆனால் புரிந்த விஷயம் தான். அவளுக்குள் பயத்தை விதைத்தது! எதிர்காலமே இல்லாத இந்தக் காதல் ஏன் வந்தது என்று நொந்தாலும், தன்னை சிறை வைத்தவன் மேல் காதல் வருமா என்று தெரியவில்லை. மனம் இருதலைக் கொள்ளி எறும்பாய்!

ஆனால் சேரன் அவன் நிலையில் இருந்திருந்தாலும், தனக்காக இதையே தான் செய்திருப்பான் என்று, அவன் செய்கையை நியாயப்படுத்தி, பரிந்து வந்தது மனது.

கௌதமின் நினைவுகள், மழைச்சாரல் வந்து மனதோரம் தீண்டிச்சென்றதுபோல், ஒரு சிலிர்ப்பைத் தந்தது! வெகு நேரம் உறக்கம் வரவில்லை. உடலும் மனமும் சோர்ந்து



ஏதோ பலமிழந்தது போல் இருக்கவும் குளித்து விட்டு உடனே சேரனைப் பார்க்கச் சென்றாள்.

''என்னடா டல்லா இருக்கே? உடம்பு ஏதும் சரி இல்லையா?'' கனிவுடன் விசாரித்தவனிடம், ''அதெல்லாம் இல்லைண்ணா.. நைட் சரியாகத் தூங்கலை அதான்! நான் போய் காவ்யாவை. ஸாரி... அண்ணியப் பார்த்துட்டு வரேன்'' என்று குறும்புடன் கூறிவிட்டுக் கீழே சென்றாள்.

எதிரே வந்த கௌதம் நின்று, ஒரு நொடி அவளையே கூர்ந்து நோக்கிவிட்டு, குட்மார்னிங்!'' என்றான் ஆழ்ந்த குரலில். வானத்து மின்னல் கீழிறங்கி வந்து ஒரு நொடி நின்று, அவளையே பார்த்துச் சென்றது போல்! ''கு... குட்மார்னிங்!'' என்று தடுமாற்றத்துடன் முணுமுணுத்து விட்டு வேகமாக உள்ளே சென்றாள் அவள்.

அன்று காலையில் கௌதம் நல்ல வாழ்த்துக் கூறினாலும் அன்று முழுவதும் ஏனோ சோர்வாகவே இருந்தது. அன்று மாலை அவளைத் தேடி வந்த காவ்யா, ''சுமி... சீக்கிரமா ரெடியாவுங்க! எல்லாரும் பாலாஜி டெம்பிளுக்குப் போறோம். புடவையே கட்டிக்கங்க'' என்று மகிழ்ச்சியுடன் கூறிவிட்டுச் சென்றாள்.

கோவிலுக்கென்று அவள் அணிந்து கொண்ட சன்னமான சரிகைக் கரையிட்ட மயில் கழுத்துநிற சில்க் காட்டன் புடவை சுமியின் அழகை இன்னும் அதிகப்படுத்துவதாய்!

அவள் கீழே இறங்கி வந்ததும், ''அப்படியே மகா லெஷ்மி மாதிரி இருக்கேம்மா!'' என்று கூறிய சாரதா, ''தோட்டத்துக்குப் போய், மீராம்மா கிட்டப் பூப்பறிக்கச் சொல்லி இருக்கேன் சுமி! வாங்கிட்டு வரியாம்மா?'' என்றார்.

தலையசைத்து விட்டு அவள் சென்றதும், காவ்யாவிடம் ''என்னோட பீரோல, ஒரே மாதிரி இரண்டு நெக்லஸ் இருக்கும் பாரு. அத எடுத்துட்டு வா காவ்யா! எங்க ரெண்டு பேருக்கும் செஞ்சது... நாங்க எங்கே அதை எல்லாம் இனிமே போடப்போறோம்'' என்று அனுப்பினார்.

சுமி பூக்கூடையுடன் வந்தபோது அனைவருமே தயாராகி ஹாலுக்கு வந்திருந்தனர். காவ்யாவுக்கு ஒரு நெக்லஸை அணிவித்தவர், மற்றொன்றை சுமிக்கும் போட்டு விட்டார். பதட்டத்துடன் அவள், ''வேண்டாம்மா.. ப்ளீஸ்! எனக்கு நகையில எல்லாம் அவ்வளவா இன்ட்ரெஸ்ட் இல்லைம்மா.. ரொம்பப் போடமாட்டேன்.'' என்று மறுத்தாள்.

''இன்னிக்கு வெள்ளிக்கிழமை.. கோவிலுக்குப் போறோம்! பொண்ணுங்க நகை வேண்டாம்னு சொல்லக் கூடாது. அழகா இருக்கு உங்க ரெண்டு பேருக்கும்... வாங்க கிளம்பலாம்'' என்று சாரதா கூறவும் மறுத்து ஒன்றும் கூற முடியாமல் கிளம்பிய போது, கௌதமும் சாரதாவும் விழிகளாலேயே பேசிக் கொண்டதை, அவள் அறியவில்லை.

அந்தக் கோவிலுக்குச் சென்ற போது, அவள் மனதிற்கு பெரும் இதமாய் இருந்தது. கும்பகோணத்தில் புராதனக் கோவில்களை மட்டுமே பார்த்திருந்த சுமிக்கு, சுற்றிலும் மலைமகள் அரணாய் நிற்க, முன்புறம் ரோஜாக்கள் சாமரம் வீச, அழகாகத் தங்க கவசமிட்ட பாலாஜி, வித்யாசமான அற்புதமாகத் தெரிந்தார். அந்த சூழலே ரம்மியமாய்... சொல்லொணாத அமைதியை மனதிற்குள் மீட்டுத்தருவதாய் இருந்தது.



அந்த நிமிடம் மனம் மிகுந்த மகிழ்ச்சியில் திளைக்க. இதழ்களில் இதயபூர்வமான வேண்டுதலோடு கண்மூடி நின்ற சுமியை, கௌதமின் விழிகள் ரசனையுடன் வருடின.

அவள் கண் விழித்ததும், எதிரே அவன் பார்வை தன் மேலேயே பதிந்திருப்பதைக் கண்ட போது, சூரியனிடம் இருந்து கதிர்களை வாங்கி ஒளிரும் நிலவைப் போல் அவள் விழிகள் பளபளத்தன.

ஒரு கணம் துடிக்க மறந்த இதயம், மீண்டும் துடிக்க அருகில் இருந்த காவ்யாவிடம் திரும்பிக் கொண்டாள் சுமி. கௌதமின் பார்வை, தெய்வத்தின் பாதத்தை சரணடைந்தது. கோவிலைச் சுற்றி வந்து அனைவரும் ஒரு ஓரமாக அமர்ந்த போதும், சுமி மௌனமாகவே இருந்தாள்.

சாரதா சேரனிடம், ''ஏம்பா.. நம்ம சுமிக்கு எப்ப கல்யாணம் செய்யலாம்னு இருக்கீங்க? நானும் ஐயாவும், நேத்து நைட் இதப்பத்தி தான் பேசிட்டிருந்தோம். மாப்பிள்ளை ஏதும் பாத்து வச்சிருக்கீங்களா?'' ஆர்வமாய் கேட்டார்.

''இல்லைம்மா.. இனிமே தான் பார்க்கணும். சுமி தான் ஒரு வருஷம் போகட்டும்னு சொன்னா. அதான், நான் எந்த முயற்சியும் எடுக்கலை! அம்மாவோட நகைகள், அவளது எல்லாம் ரெடியா இருக்கு! நல்ல வரனா வந்தா முடிச்சிட லாம்மா!''

சாரதா தன் கணவரை அர்த்தபுஷ்டியுடன் நோக்க, விஜயராகவனும் ''அப்படி ஒரு வரன் நம்ம கைவசம் இருக் குப்பா.. நல்ல பையனா இருந்தா, நீ சுமியைக் குடுப்பே இல்லை?'' நமட்டுச் சிரிப்புடன் கேட்டார்.

''நிச்சயமா சார்... நீங்க சொன்னா சரியாதான் இருக்கும். நானும் இங்கேயே இருக்கறதாலே, மாப்பிள்ளை வீடும் இந்தப் பக்கமே இருந்தா அவளை அடிக்கடி போய்ப் பார்த்துக்கலாம். என் தங்கைய, கடைசிவரைக்கும் சந்தோஷமா, கஷ்டப்படாம வெச்சுக்கறவங்களா இருந்தா போதும்! ஆனா, மாப்பிள்ளை யாருன்னு நீங்க சொல்லலையே...?'' வினவினான் மகிழ்ச்சியுடன்.

அனைவரும் ஒருவரை ஒருவர் அர்த்தத்துடன் பார்க்க விஜயராகவனே, ''அது.. அந்த மாப்பிள்ளை நம்ம கௌதம் தான் சேரன். உங்களுக்கு சம்மதமா?'' என்ற சுமியைப் பார்த்துக் கொண்டே கேட்டார்.

சேரனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போனது மனது! வார்த்தைகள் வராமல் தலையாட்டிய போது, அவரே கௌதமிடம் திரும்பி, ''என்னப்பா உனக்கு சம்மதம் தானே....?'' என்று கேட்க, ''உங்க இஷ்டம்ப்பா!'' என்றபடி சுமியைப் பார்த்தான் அவன்.

சுமியின் மனது மிகவும் படபடப்பாய்..! ஒரு பனித்துளியால் சூரியக்கதிர்களைக் குளிர்விக்க முடியுமா..? தெரியவில்லை! ஆனால் வெப்பமாக இருந்த அவள் மனம், உடனே குளிர்ந்தது. தனக்குள் ஒளிந்த உற்சாகப் பேரூற்று என்றும் புரியவில்லை. ஆனால், உடனே அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

தன் முகவரியைத் தொலைத்து விட்டுத் தேடிய அந்த நிமிடங்களில், அன்று அவன் கூறிய வார்த்தைகள் செதுக்கிய கல்வெட்டாய் மனதில் வந்து, அவளை விதிர்க்கச் செய்தது.





## 11

கௌதம் அன்று ஆஸ்பிடலில் கூறியது, இன்று நடந்தது போல் நினைவுகளில் படர்ந்தது. ''நான் என் லைப்லே, முதலும் கடைசியுமாக ஒரு தவறு செஞ்சிருக்கேன். அதை சரி செய்ய வேண்டியது. என்னோட கடமை. நிச்சயமா செய்வேன்'' என்ற குரல் மீண்டும் அவள் காதுகளில் ஒலிப்பதாய்!

அவன் தன்னையே காதலுடன் நோக்குவதை, அவள் அறியவில்லை. தன் தவறுக்குப் பிராயச்சித்தம் செய்வதாக எண்ணி, அவன் அளிக்கப்போகும் வாழ்க்கையை யாசகமாகப் பெற, மனம் மறுத்தது. அப்படி ஒரு வாழ்க்கை, காதலில்லாத திருமணம் தனக்குத் தேவையில்லை என்ற எண்ணம் உறுதியுடன் உள்ளத்தில் நிறைந்தது.

மனதில் ஒரு முடிவுடன் நிமிர்ந்தவள், ''எனக்கு இப்ப கல்யாணம் வேண்டாண்ணா! சாரி... நீங்க எல்லாரும் என்னை மன்னிச்சிடுங்க! யாரும் தப்பா நினைக்க வேணாம். பெரியவங்க சொல்லி, நான் மறுத்துப் பேசறதா நினைக்காதீங்க. ப்ளீஸ் என்னைக் கட்டாயப்படுத்தாதீங்க!'' கூறி விட்டு சங்கடத்துடன் தலை குனிந்து கொண்டாள்.

அதுவரை அவளால் காகிதப் பூவாய் லேசாகி இருந்த அவன் மனம், அவள் வார்த்தைகளைக் கேட்டவுடன், கற்பாறையாய் இறுகியது. கௌதமின் செவ்வரியோடிச்

சிவந்திருந்த அந்த விழிகளில், எல்லையில்லாத சினம் தெரிவதாய்!

அவன் முகம் பலவித உணர்ச்சிகளை வெளிப்படுத்த உடனே விருட்டென்று எழுந்தவன், வேகமாகச் சென்று காரில் அமர்ந்து கொண்டான். தர்மசங்கடத்துடன் எழுந்த அனைவருமே, ஒரு கனத்த மௌனத்துடன் கெஸ்ட் ஹவுசுக்கு வந்தனர்.

காவ்யா அவளுடனே வந்து, ''சுமி! யோசிக்காம உடனே எந்த முடிவும் எடுக்க வேண்டாம். ப்ளீஸ்! நல்லா யோசிச்சி அப்புறமா உங்க முடிவைச் சொல்லுங்க. எங்க அண்ணா ரொம்ப நல்லவர்! நீங்க மட்டும் சரின்னு சொன்னா நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்'' அவள் கையைப் பிடித்து மெதுவாக அழுத்தி விட்டுச் சென்றாள்.

அன்றிரவு முழுவதும், சுமி தூங்கவில்லை. கௌதம் தன்னை விரும்பவில்லை என்பதும், எப்போதுமே, அவன் பார்வை தன்மீது ஒரு விதக் கோபத்துடன் படர்வது, ஞாபகம் வந்தது.

தான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தம் தேடவே, பெரியவர்களின் விருப்பத்துக்கு அவன் மறுப்புக் கூறவில்லை என்பதும் புரிந்தது. அவன் பரிதாபமோ, பிராயச்சித்தமோ தனக்குத் தேவையில்லை என்பதில் தெளிவாக இருந்தாள் அவள்.

அதனால, அவன் மேல் வைத்திருந்த நேசத்தையும் தன்னுள் புதைத்துக் கொள்ள முடிவு செய்த போது, நெஞ்சம் சுக்கு நூறாய் சிதறிப் போனது.



தன் மனம் கவர்ந்தவனே, தன்னைத் திருமணம் செய்து கொள்வதாகக் கூறியும், ஒத்துக் கொள்ள முடியாமல் சுய கௌரவம் தடுத்தது. மனிதத் தடங்களற்ற பூமிக்குச் சென்று விட வேண்டும் போல் மனம் தவித்தது. ஆனால் அவன் நினைவுகளை நெஞ்சம் பத்திரமாய் சேமித்தது!

விடியும் போது தான், உறக்கமே அவளை விரும்பித் தழுவியது. காலையில் கதவைத் தட்டிய சேரன் மிகுந்த கோபத்துடன் இருந்தான். ''ஏன் சுமி... இப்பவாவது யோசிச்சு நல்ல முடிவுக்கு வந்தியா? உனக்கு முடிவுக்கு வர கொஞ்சம் டைம் கொடுக்கலாம்னு தான் நைட் நான் உன்கிட்டே எதுவுமே பேசலை. நீ புத்திசாலின்னு நினைச்சேம்மா! இப்படி நீயே உன் தலையில மண்ணை அள்ளிப் போட்டுப்பேன்னு எனக்குத் தெரியல. நேத்து ஏன் சுமி அப்படிப் பேசினே? கௌதம் சாருக்கு என்ன குறைச்சல்? குடுத்துவச்சிருக்கணும் நீ.. நமக்கு அமையற இடமாம்மா இது?'' அவன் கோபமாகப் பேச சுமிக்குக் கண்ணீர் அரும்பியது.

''என்னை எதுவும் கேக்காதீங்கண்ணா.. ப்ளீஸ்! வேண்டாண்ணா விட்டுருங்க. எனக்கு எதுவுமே பிடிக்கலை. நாளைக்கு நான் ஊருக்குப் போறேன்.'' என்று இதழ்கள் பொய் கூறின. இதயமோ அதை நம்ப மறுத்தது.

அறைக்கு வந்த முகத்தைக் கழுவி விட்டு, அந்த நகையை எடுத்துச் சென்று சாரதா அம்மாவிடம் கொடுத்தவள், ''நான், எங்க அம்மாவை உங்ககிட்ட பார்க்கறேம்மா! தயவு செஞ்சு என்னைத் தப்பா நினைக்காதீங்க'' என்றாள். அவர் அவளிடம், ''ஏம்மா... உனக்கு எங்க கௌதமைப்

பிடிக்கலையா..? இல்லை கல்யாணமே பிடிக்கலையா? எங்க எல்லாருக்கும், உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. கௌதமும் எவ்வளவோ வரன் வந்தப்பல்லாம் முடியாதுன்னு சொன்னவன், இப்பதான் சரின்னு ஒத்துக்கிட்டான். ஏன் சுமி கல்யாணம் வேண்டாங்கிறே?'' வாஞ்சையுடன் கேட்டார்.

மனதிற்குள் 'உங்க பையன் ஏன் சரின்னு சொன்னார். அப்படின்னு எனக்கு மட்டும் தாம்மா தெரியும்' என்று சோகக்குரல் ஒலிக்க, விரக்தியுடன் நிமிர்ந்தவள், ''நாங்க உங்க அந்தஸ்துக்குப் பொருத்தமில்லாதவங்கம்மா... காவ்யாவோட விஷயமே வேறே? அவங்க அண்ணனை விரும்பினதாலே, இந்த முடிவெடுத்தீங்க... என்னை விட அருமையான பொண்ணு, உங்க மகனுக்குக் கிடைப்பாங்க! நான் நாளைக்கே கிளம்பி எங்க அத்தை வீட்டுக்குப் போறேன். அண்ணா கல்யாணத்துக்கு பத்து நாள் முன்னாடி வந்திடறேம்மா!'' மென்மையாக முறுவலித்தாள்.

''ஒரு நிமிஷம் சுமி.. நீ எங்களைத்தப்பா நினைச்சிட்டே... என்னிக்குமே நாங்க பணத்தைப் பெரிசா நினைச்சதில்லை! அன்னிக்கு நீ சேரன் கிட்டே, எங்க காவ்யாவைப் பத்தி பேசினே பாரு. அன்னிக்கே உன்னை நான் நல்லாப் புரிஞ்சுக்கிட்டேன். அப்புறம் ரவி சொன்னான், இந்த வயசில எங்களுக்குத் தோணாத ஒரு நல்ல விஷயத்தை இவ்வளவு சின்னவளா இருக்கற நீ செஞ்சிருக்கேன்னு சொன்னப்ப, உனக்குள்ளே இவ்வளவு பக்குவமான்னு ரொம்பப் பெருமையா இருந்தது.

''எல்லாரையும் நேசிக்கிற குணம் எல்லார்க்கிட்டயும் நாம எதிர்பார்க்க முடியாது சுமி! அது உன்கிட்ட இருக்கிறதா எனக்குத் தோணுது! நீ சொன்னியே, ஒரு அருமையான



பொண்ணு கிடைப்பான்னு. அது நீயாவே இருந்தா நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்!'' என்று முடித்த போது என்ன சொல்வதென்று புரியாமல் ''ப்ளீஸ்ம்மா!'' என்று ஒற்றை வார்த்தையுடன் திரும்பினாள் சுமி.

வழியிலேயே அவளை எதிர்கொண்ட ரவி, ''என்னங்க... உங்களைப் பத்தி நான் என்னவோ நினைச்சிட்டு இருந்தேன். இப்படிப் பண்ணிட்டீங்களே? ஏன் சுமி... கௌதம் அண்ணாவை விட உயர்வா உங்களுக்கு யாராவது கிடைப்பாங்களா? என் அண்ணங்கிறதுக்காகப் பெருமையா சொல்லலை. உண்மையைச் சொல்றேன். மத்தவங்க மேல எந்த எதிர்பார்ப்புமே இல்லாம அன்பு செலுத்தறவங்களாலே தான், எல்லாரையும் சுலபமா மன்னிக்க முடியும். மத்தவங்களுக்குத் தெரியாத உண்மை, எனக்கு மட்டும் தான் தெரியும். நீங்க இன்னும் அத மறக்கலைன்னு நினைக்கிறேன். ப்ளீஸ் யோசிச்சு நல்ல முடிவா எடுங்க'' கெஞ்சும் குரலில் கூறினான்.

தன் மனம் வெடித்துச் சிதறிவிடுமே! என்ற அச்சத்தில் வேகமாகச் சென்று தன் அறைக்கதவைச் சாத்திக் கொண்டாள் சுமி. எப்போதுமே காதலிக்கும் போது தனிமை என்பது ஒரு இனிதான வரமாய்!

ஆனால் இன்று மூச்சு முட்டிய தன்மை, அவளை மனம் உடைந்து அழ வைத்தது.

இன்றைக்கு கௌதமைத் திருமணம் செய்து கொள்ளக் கூட அவள் தயார் தான். ஆனால் பரஸ்பரம் நேசமில்லாத திருமணத்தை நினைத்தால் மனம் விதிர்த்துப் போனது. அது, தன் மனதில் உள்ள காதலைக் கொன்று விடும் பேரழிவாகி விடும் என்று உறுதியாய் எண்ணினாள்.

அன்று முழுவதும், அனைவருமே ஒரு விதமான வருத்தம் தோய்ந்த மௌனத்திலிருந்தனர். விஜயராகவனும், அன்றிரவு அவருடைய அறையிலேயே சாப்பிட, எந்தக் கலகலப்பும் அரட்டையும் இல்லாமல் இரவு உணவு அமைதியாகவே நடந்தது. நேற்றிலிருந்து அவள் கௌதமை சந்திக்கவே இல்லை. அடித்தால் கூடப் பொறுத்துக் கொள்ளலாம் போல்.... ஆனால் அவனுடைய பாராமுகம் மனதை வலிக்கச் செய்வதாய் இருந்தது.

திடீரென்று காவ்யா, ''ஏன் சுமி? மாடிக்குப் போய்க் கொஞ்ச நேரம் பேசிட்டு இருக்கலாம். வரீங்களா?'' என்று மெல்லக் கேட்டதும், சுமி தலையசைக்க, ''நீங்க போங்க சுமி... நான் பின்னாலே வரேன்'' என்று உள்ளே சென்றாள்.

இரவை, பனி வருடலாய் நனைத்துக் கொண்டிருந்தது. மொட்டை மாடியில் செடிகளின் நடுவே இருந்த ஊஞ்சலில் அமர்ந்து, யோசிக்க ஆரம்பித்தாள் சுமி. மனம் பெரும் யுத்த களமாய்... நாளைக்கு ஊருக்குக் கிளம்பி விட வேண்டும் என்ற எண்ணம் உறுதியாய்...

யாரோ வரும் சப்தம், கனவிலிருந்து விழிக்கச் செய்ய. ''காவ்யா'' என்றபடி இயல்பாக நிமிர்ந்தால், அங்கு கௌதம் நின்றிருந்தான். வார்த்தைகள் உதட்டிலேயே உறைந்து போக, அவன் வந்த பிறகு தான் அவள் உயிரே விழிக்க ஆரம்பிப்பதாய்!

அவனைக் கண்டவுடன், ''புன்னகைகளைப் பரிசளிக்க வில்லை என்றாலும் பரவாயில்லை. உன் பார்வைகளை மட்டுமாவது பந்தியிடு'' என்று ஏங்கிய மனதை அடக் கியவள், வேகமாக கீழே செல்ல முயன்றாள்.



அவனுடைய வலிமையான கை, அவளைப் பிடித்துத் தடுத்தது. ''ஒரு நிமிஷம் சம்யுக்தா உன்கிட்டப் பேசணும்'' அவன் குரல் இடியாய் இறங்க, ''உங்ககிட்டே பேச எனக்கு ஒரு விஷயமும் இல்லை'' என்றபடி ஒரு அடி தான் எடுத்து வைத்திருப்பாள். அவன் கை முழு பலத்துடன் பற்றி, அவளைத் திருப்பியது.

கண்கள் கண்ணீரை பொழிந்து விடுமோ என்று உள்ளம் தடதடக்க, அவன் தொட்ட இடம் தீயாய். ''ப்ளீஸ் என்னை விடுங்க'' கைகளை விடுவிக்க முயன்றபடி சீறினாள் அவள்.

''எனக்கு பதில் சொல்லாம, நீ இங்கிருந்து போக முடி யாது'' அவனும் தாழ்ந்த குரலில், கடித்த பற்களிடையே ஸ்பஷ்டமாக சீறியபோது, தாங்க முடியாமல் நிமிர்ந்து, ''என்ன பதில் சொல்லணும்?'' கோபமாக கேட்டாள் சுமி.

''ம்.. உன்னோட முட்டாள் தனமான பிடிவாதத்தாலே பாதிக்கப்பட்டது நான் தானே? நீ தான் அதுக்கு பதில் சொல்லணும் ''சீற்றத்துடன் வந்தது அவனுடைய குரல்.

''யார் நீங்களா? பிராயச்சித்தம் பண்றதா நினைச்சி, எனக்கு நீங்க வாழ்க்கை தரேன்னதாலே, பாதிக்கப்பட்டது நான் தான்'' என்று மூச்சு வாங்க முடித்தாள்.

''யார் சொன்னா... பிராயச்சித்தம் பண்ணத்தான் நான் சரின்னு சொன்னேன்னு? என்னை கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு மறுத்திட்டு, இப்ப இத வேற சொல்றியா? நல்ல எஸ்கேப்பிஸம் தான் இது.''

அடிக்குரலில் வெளி வந்த சீறல், அவளை வெகுவாகப் பாதிப்பதாய். கண்ணிமைகளைக் குடையாய் பிடித்து அவன்

வெப்பப் பார்வையிலிருந்து விடுபட மனம் தவித்துத் துடித்தது. கண்ணீர் வேறு வழிந்து விடுவேன் என்று பயமுறுத்தியது. திரும்பிக் கொண்டாள் சுமி.

அவனுடைய உணர்வுகள் குரலில் மழையாய். அவன் குரலில் கௌதமின் இதயம் திறந்து இடியாய் அவள் மேல் இறங்கியது. "இது வரைக்கும் எந்தப் பெண்ணுமே என்னை பாதிச்சதில்லைன்னு சொன்னா நீ நம்புவியா சம்யுக்தா. உன்னைத் தவிர. உன்னை முதன் முதலாப் பார்த்தப்பவே, இவ தான் என் மனசுல இத்தனை நாளா தேடிட்டு இருந்த துணைன்னு எனக்குள்ளே நீ ஆழமாப் பதிஞ்சது தெரியுமா உனக்கு?

"மோசமான ஒரு சந்தர்ப்பத்துல உன்னை சந்திச்சிருந்தாலும், உன்னை காயப்படாம பார்த்துக்கணுமேன்னு நான் தவிச்சதும், அப்புறம் உண்மை தெரிஞ்ச உடனே துடிச்சிப் போய் நான் வேதனைப்பட்டதும் தெரியுமா?

"எல்லார்ட்டயும் சிரிச்சுப் பேசற நீ, என்னைக் கண்டா மட்டும் ஒதுங்கிப்போனப்போ என் மேலேயே எனக்கு கோபம் வந்தது. போன்லே நீ என் கூட பேச மறுத்தப்போ, என் குரலையே வெளிக்காட்டாம மௌனமா உன் குரலை நான் ரசிச்சேனே அது தெரியுமா?

"அந்தக் குழந்தையை நீ கொஞ்சும் போது, என் மனசுல நிறையக் கற்பனைய வளர்த்தேனே... என் தலைவலிக்கு காரணமான நீயே, ஒரு வார்த்தை கூட என்னை விசாரிக்கலையேன்னு நான் மனசு நொந்து போனதும் தெரியுமா உனக்கு?

"எல்லாருக்கும் பரிமாறின நீ என்னை மட்டும் ஒதுக்கினப்போ, என் இதயமே உடைஞ்சதும், இத்தனைக்கும்



மேல, அம்மா ரெண்டு பேரையும் கவனிச்சிட்டு என்கிட்டே வந்து கேட்டப்ப, நானா சொன்னா நீ ஒத்துக்க மாட்டே. அதனால பெரியவங்களாப் பாத்து முடிவெடுத்த மாதிரிக் கேளுங்கன்னு, அதையும் உன் மனசுக்கு இதமாவே முடிக்கச் சொன்னேன் பாரு. இதெல்லாம் தான் நான் செஞ்ச தப்பு. போதும். எனக்கு இவ்வளவு அநியாயமும் செஞ்சிட்டு நீ பாதிக்கப்பட்டவளா?" தன் உணர்வுகளை மடை திறந்து வெளிப்படுத்தி விட்டு இரு கண்களையும் இறுக மூடித் திறந்தவன், பிறகு வேகமாகத் திரும்பிச் சென்றான்.

அவனுடைய வார்த்தைகள் உயிர் வரை தீண்டி, அவளைப் புது ஜனனமெடுக்கச் செய்வதாய்... தென்னம் பாளையாய் வெடித்த மனது, மகிழ்ச்சிப் பூக்களை சிதற விட்டது. பூகம்பத்தின் பின்னாலும் பூமியில் பூக்கள் மலருமா.. தெரியவில்லை. ஆனால் அந்த நிமிடமே சுமிக்குள் ஆயிரம் மலர்கள் மலர்ந்தன. அவளுடைய மௌனம் கலைந்தது.

"கௌதம்.. நானும் உங்களை விரும்பறேன். என் உயிருக்கும் மேலா விரும்பறேன்" கதறலுடன் திரும்பிய சுமி. ஒரு நொடி நம்ப முடியாமல் அசைவற்று சிலை போல் நின்றிருந்த கௌதமை ஓடி வந்து அணைத்துக் கொண்டாள்.

அவன் மார்பில் முகம் பதித்து விழி மூடிய போது, சுமிக்கு அவன் இதயத்துக்குள்ளேயே அடங்கியதுபோல் ஒரு உணர்வு. உலகத்திலேயே அதிக சந்தோசத்தை தனதாக்கிய கௌதம், "சம்யு..." என்று உணர்ச்சிப் பெருக்குடன் அவளை அணைத்துக் கொண்டான்.

அவளுடைய இதயத்துடிப்பின் ஓசை இசையாய் கேட்க, அவனுக்குள் நீங்காத சுவடைப் பதித்தாள் சம்யு. நேசிப்பதைவிட நேசிக்கப்படுவது தான், எத்தனை இதமாய்!

யுகங்கள் நிமிடங்களாக, எங்கிருந்தோ ஒலித்த இரவுப் பறவையின் ஒலி, இருவரையும் இவ்வுலகுக்கு இழுத்து வந்தது.

அவளை விடுவிக்க மனமின்றி ஊஞ்சலில் அமர வைத்துத் தானும் அமர்ந்தவன், ஒற்றை விரலால் குனிந்திருந்த அவள் முகத்தை நிமிர்த்தினான்.

''நான் என் லைப்லே முத தடவையா பயந்தது, இந்த மூணு வாரமா தான். உன்னை இழந்துடுவேனோன்னு தவிச்சுப் போய், என்னையே நான் இழந்து, எத்தனையோ தடவை கோபப்பட்டுருக்கேன்'' ஒரு வேக மூச்சுடன் நிறுத்தினான்.

அவன் கைகளில், தன் விரல்களைப் பிணைத்துக் கொண்டு நிமிர்ந்த சுமி, ''நானும் அப்படித்தான். மனசு பூரா நீங்க நெறைஞ்சிருக்கறப்ப, அதை வெளியே தெரியாம மறைச்சு, நான் பட்ட கஷ்டம் எனக்கு தான் தெரியும். நீங்க நல்லவிதமா, இதமான சூழ்நிலையில எனக்கு அறிமுகமாகி இருக்கக் கூடாதான்னு எத்தனையோ நாள், நானும் வேதனைப்பட்டிருக்கேன். ம்... யுகம் யுகமாக் காத்திருந்த மாதிரி இருக்கு'' என்றாள் நிம்மதிப் பெருமூச்சுடன்.

''சம்யு.. இவ்வளவு காதல் மனசுல இருந்தும், பின்ன ஏன் என்னை கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொன்னே?'' அவள் நெற்றியில் சிலும்பலாய் படிந்திருந்த முடிக் கற்றையுடன் விளையாடியபடி, ஆதங்கத்துடன் கேட்டான் கௌதம்.



''ஸாரிங்க. முதல்லே இருந்தே என்னைப் பாக்கும் போதெல்லாம், நீங்க கோபப்பட்டுட்டே இருந்தீங்க. நீங்க என்னை இந்த அளவுக்கு விரும்புவீங்கன்னு நான் நினைக்கவே இல்லை. மனசு முழுக்க என் மேல வெறுப் போட பெரியவங்களோட விருப்பத்துக்கு சரின்னு சொல் றீங்கன்னு தான் நினைச்சேன். அன்னிக்கு நீங்க என்கிட்ட ஹாஸ்பிடல்லே சொன்னது தான் உடனே ஞாபகம் வந்தது.

ஒரு தப்பு செஞ்சிட்டு, அதுக்காக ப்ராயச்சித்தம் பண்ற மாதிரி எனக்குக் கிடைக்கற வாழ்க்கையில, நிச்சயமா எனக்கு இஷ்டம் இல்லை. என்னை, எனக்காக மட்டுமே விரும்பி ஏத்துக்கற உங்களுக்காகத்தான் நான் காத்துட்டு இருந்தேன். ஆனா, உங்க அன்பு கிடைக்காதுன்னு தெரிஞ் சப்புறம்தான், என் காதலை எனக்குள்ளேயே புதைச்சிட்டு உங்க நினைவோட தனியாவே வாழ்ந்திடலாம்னு, உடனே ஊருக்குப் போகத் தீர்மானிச்சேன். எத்தனை போராட்டம் மனசுக்குள்ளே. இப்பதான் நிம்மதியா இருக்கு'' கண்ணீர் மல்க கூறிய சுமி, மெதுவாக கௌதமின் தோள்களில் உரிமையுடன் சாய்ந்து கொண்டாள்.

அவளை மென்மையாக அணைத்தவன், ''சம்யு.. இதைக் கேட்டா எல்லாரும் எவ்வளவு சந்தோஷப்படுவாங்க தெரியுமா. எல்லார்கிட்டயும் சொல்லணும்'' ஆவலுடன் கூறியபோது, அதுவரை அவனுக்காகவே சேமித்து வைத் தது போல், அவள் வெட்கம் கரை உடைத்தது, கண்களில் தெரிந்தது.

அந்த நிமிடமே அவன் மனதில் நேசம் வந்து முழு வேகத்துடன் மையம் கொள்ள, இலை மூடும் மலர் போல, அவள் இதழ்களை மூடினான் கௌதம்.

காலம் கோடி சென்ற போதும், பூமியில் காதல் மட்டும் வாழும் என்ற உண்மை இருவருக்கும் புரிந்தது. முத்தத்தை விடச் சிறந்த காதல் பரிசை, இன்னும் காதல் தேசம் கண்டுபிடிக்கவில்லை என்பது தெரிந்தது.

மௌனம் கலைந்த அந்த தேவதையின் மடியில் மகிழ்ச்சி யுடன் சாய்ந்த கௌதமுக்கு மேகத்தையே மஞ்சமாக்கி, மயிலிறகில் தலைசாய்த்தது போல் ஒரு உணர்வு.

அந்த முன்பனி இரவில், மலைகளின் தோள்களில் சாய்ந்து மேகங்களும் ஓய்வெடுக்க.. வான்வீதியில், கார்த் திகை தீபங்களாய் விண்மீன்கள் ஒளிவீசிக் கொண்டிருந்தன.

# மழை தருமோ என் மேகம்...!

1



அந்தி வானம் அற்புதமான அழகை அள்ளித் தெளித் திருக்க, திருச்சி மலைக் கோட்டையின் மீது அஸ்தமன சூரியன், தன் சிவந்த கதிர்களால் செவ்வண்ணத்தைப் பூசியிருந்தான்.

பருத்தி வெடித்தாற்போல், செவ்வானம் முழுவதும் பஞ்சுப் பொதிகளாய் மேகங்கள்!

ப்ரியம்வதாவும், அவள் தோழி சங்கரியும், மலைக் கோட்டைப் படிகளில் மெதுவாக இறங்கிக் கொண்டிருந் தனர்.

பிள்ளையாரையும், தாயுமானவர் சுவாமிகளையும் தரிசித்த நிம்மதி தெரிந்தது இருவர் முகத்திலும்...!

இருவரும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். பிகாம் முடித்து விட்டு விடுமுறையில் இருந்த இருவரும் கோவி